பக்கங்கள்: இருபத்து நான்கு

# வலம்புரி
*Valampurii*

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION
MONEY TRANSFER
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 22 வெள்ளிக்கிழமை (06.01.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 018

# சர்வதேச நீதிபதிகளை தவிர்க்க இணங்கவில்லை

## இலங்கையின் அறிவிப்பை ஐ.நா நிராகரிப்பு



(ஜெனிவா) ----------

வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான போர்க்குற்ற நீதிமன்ற விசாரணைப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகளை உள்வாங்குவதில்லை என்ற இலங்கை அரசின் நிலைப்பாட்டினை ஐ.நா மனித உரிமை பேரவை ஏற்றுக் கொண்டிருந்ததாக இலங்கை அமைச்சரொருவர் தெரிவித்திருந்த தகவலை ஐ.நா நேற்று முற்றாக நிராகரித்திருக்கிறது. அத்தோடு போர்க்குற்ற கலப்பு நீதிமன்ற விசாரணைப் பொறிமுறையிளளல் சர்வதேச நீதிபதிகளின் அதிகரித்த பங்களிப்பினையே எப்போதும் வலியுறுத்தி வருவதாகவும், அந்த நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என்றும் ஐ.நா தெரிவித்திருக்கிறது.

04ஆம் பக்கம் பார்க்க...

### 5.6 கிலோ கஞ்சாவுடன் நபரொருவர் கைது



23ஆம் பக்கம் பார்க்க...

### கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் பொது நினைவுச் சின்னம் அமைக்கத் தடை!

பொலிஸாரின் தலையீட்டால் அமைப்பு பணி ஸ்தம்பிதம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி- கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் பொது நினைவுச் சின்னம் (கல்லறை) அமைக்கும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்ட நிலையில்.

04ஆம் பக்கம் பார்க்க...

### மூளை சாவடைந்தவரின் சிறுநீரகங்கள் தானம்

(யாழ்ப்பாணம்)

யாழில் மூளைச்சாவடைந்த நபர் ஒருவருடைய சிறுநீரகங்களை கொழும்பில் இருந்து வருகை தந்த உடல் உறுப்புக்கள் மாற்று சிகிச்சை நிபுணர் குழுவினரால் சத்திரசிகிச்சை மூலம் வெற்றிகரமாக அகற்றி அதனை

04ஆம் பக்கம் பார்க்க...

### பொருளாதாரத் தடைகளை வெற்றி கொண்டுள்ளோம்!

அமைச்சர் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேசம் இலங்கை மீது பொருளாதார தடைகளை விதிப்பதற்கு தயாராகி வந்த நேரத்திலேயே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த ஜனாதிபதித் தேர்தலை நடத்தியதாக இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஆதரிக்கவில்லை.

04ஆம் பக்கம் பார்க்க...

### இந்திய மீனவர்கள் 42 பேருக்கு மறியல்

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து, மீன்பிடித்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 32 பேரின் விளக்கமறியலை எதிர்வரும் 19ஆம் திகதி வரை நீடித்து, ஊர்காவற்றுறை நீதிமன்ற

24ஆம் பக்கம் பார்க்க...

### உரிமை கேட்பது இனவாதமல்ல; அதனை மறுப்பதே இனவாதம்!

கிழக்கில் "எழுக தமிழ்" ஆயத்த முழக்கம்



04ஆம் பக்கம் பார்க்க...

### வித்தியா படுகொலை வழக்கு
### 12 சந்தேக நபர்களுக்கும் விளக்கமறியல் நீடிப்பு!

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பாடசாலை மாணவியான சிவலோகநாதன் வித்தியாவின் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணையில் தொடர்புடைய சந்தேகநபர்கள் 12 பேரினையும் விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றபதில் நீதிவான் இ.சபேசன் உத்தரவிட்டுள்ளார். குறித்த மாணவி கடந்த 2015ஆம் ஆண்டு மே மாதம் 13ஆம் திகதி பாடசாலை செல்லும் போது கடத்தி செல்லப்பட்டு கூட்டு

23ஆம் பக்கம் பார்க்க...

### நல்லாட்சி அரசாங்கத்தை கவிழ்க்க எவருக்கும் இடமளிக்க மாட்டோம்

அதிகாரப் பேராசை நிறைவேறாது என்கிறார் மைத்திரி



அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் கைத்தொழில் பேட்டை தொடர்பில் அரசாங்கம் எந்தவொரு உடன்படிக்கையும் செய்துகொள்ளவில்லை. அது தொடர்பாக எந்தவொரு குழு அறிக்கையும் வெளியிடப்படவில்லை என தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நல்லாட்சி அரசாங்கத்தை கவிழ்க்க எவருக்கும் இடமளிக்கமாட்டாது எனவும் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று இடம்பெற்ற இலங்கை ஒலி பரப்பு கூட்டுத்தாபனத்தின் ஐம்பதாவது ஆண்டுவிழாவில் பங்கேற்று உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் மரபுரிமைக்கும் கௌர

23ஆம் பக்கம் பார்க்க...

D.C.M
A/L 2019
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்
நாளை ஆரம்பம்
யாழ்.நகரில் 8.30 A.M
சுன்னாகம் 3.00 P.M

### மன்னாரில் மாணவர்களுக்கு டெங்கு நோய்த் தாக்கம்

பாடசாலையொன்றும் தற்காலிகமாக மூடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இவ்வருடம் முதலாம் திகதி தொடக்கம் தற்போதுவரை 25 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு அதில் பாடசாலை மாணவர்களும் உள்ளடங்குவதாக தெரிவித்துள்ள மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி வி.ஆர்.சி.லெம்பேட், டெங்கு பாதிப்பால் பாடசாலை ஒன்றும் தற்காலிகமாக

23ஆம் பக்கம் பார்க்க...

ECONOMICS HALL
நாவலர் வீதி, யாழ்.நகர்
A/L கலை வர்த்தகப்பிரிவுகள்
2019 ஆரம்பம் நாளை 8 மணி
பொருளியல் தர்ஷன்
கணக்கீடு பகிரதன்
வணி.கல்வி யசோதரன்
ICT நயன்

# மிக முக்கிய அறிவித்தல்

# பான்சி டிசைன் சாறிகள்

## 90% கழிவு விலையில்

இரண்டு நாட்களுக்கு மட்டுமே...

2017 ஜனவரி 6 மற்றும் 7 ஆம் திகதிகளில்

**இடம் : மயிலூரான் திருமண மண்டபம்**

நல்லூர் (முருகன் கோயில் அருகில்), யாழ்ப்பாணம்.

**நேரம் : மு.ப 10.00 மணி முதல் இரவு 7.00 மணிவரை**

## விஷேட கழிவு விலையில்

**பான்சி டிசைனர் சாறிகள்**

**ரூபாய் 1000/=, ரூபாய் 2000/= மட்டுமே...**

யாழ். மங்கையர்களுக்கான

பான்சி டிசைனர் சாறிகள் இங்கு விற்பனைக்குள்ளன.

**ரூபாய் 5000/= தொடக்கம் ரூபாய் 10,000/=**

மதிப்புள்ள சாறிகளை

எந்தவித மனக்கலக்கமும் இல்லாமல்

**ரூபாய் 1000/= தொடக்கம் ரூபாய் 2000/=**

ரூபாயுக்கு கொள்வனவு செய்யலாம்.

சர்வதேச சாறி மார்க்கெட்டில் விலைச் சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்த சாறி மிகக் கழிவுவிலையில்

கொடுப்பதற்கான காரணம் **பான்சி டிசைன் சாறிகளை**

மிக நீண்ட காலத்துக்கு ஸ்ரோரில் வைக்க இயலாது.

(சி-7109)

**இது வரையில் யாழ்ப்பாணம் வாழ் மங்கையர்கள் கண்டு இல்லாத**

**பான்சி டிசைனர் சாறிகளைக் கொள்வனவு செய்யலாம்.**

அனுமதி இலவசம்

**தொலைபேசி : 077 607 0459** Sponsor : **S&G International Agency (Pvt) Ltd**



# புதிய அரசியலமைப்பு ஊடாக இவ்வருடம் தீர்வு கிடைக்கும் சம்பந்தனின் பச்சைப் பொய்

## கஜேந்திரகுமார் காட்டம்



(யாழ்ப்பாணம்)

யுத்தம் முடிவடைந்ததில் இருந்து தற்போது வரை சம்பந்தன் தொடர்ச்சியாகத் தெரிவித்து வரும் அனைத்துக் கருத்துக்களும் உண்மைக்குப் புறம்பானவையாகவே காணப்படுகின்றன எனத் தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் புதிய அரசியல் அமைப்பின் ஊடாகத் தேசியப் பிரச்சினைக்கு நிலையான தீர்வொன்றை இந்த வருடம் அடைய முடியும் எனச் சம்பந்தன் கூறுவது பச்சைப்பொய். தமிழ் மக்களுக்கு அவர் கூறுவது போன்று எந்தவொரு தீர்வுகளும் கிடைக்கப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

புதிய அரசியல் அமைப்பின் ஊடாகத் தேசிய இனப் பிரச்சினைக்கு நிலையான தீர்வொன்றை அடைய முடியும் என எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்திருக்கும் கருத்துத் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவிததார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

ஒற்றையாட்சியை ஏற்றுக் கொள்ள வேண்டும், 13 ஆவது திருத்தச் சட்டத்தைத் தீர்வாக ஏற்றுக் கொள்ள வேண்டும், தமிழ் அரசியலில் தேசிய சிந்தனைகளை நீக்க வேண்டும் போன்ற விடயங்களைக் கூட்டமைப்பின் தலைவர் எங்களிடம் கேட்டுக் கொண்ட தற்கமைவாகவே கடந்த 2010 ஆம் ஆண்டில் நாங்கள் கூட்டமைப்பிலிருந்து வெளியேறினோம்.

சம்பந்தன் தமிழர்களது தீர்வு விடயத்தில் நேர்மையாகச் செயற்பட வேண்டும் என்பதே எங்களுடைய விருப்பம். அவர் எமது மக்களுக்குத் தமது உண்மையான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும். எம் மக்கள் இதுவரை காலமும் சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பினரை நம்பி ஏமாற்றப்பட்டிருக்கிற நிலையில் அந்த ஏமாற்றம் தொடர்கதையாவதை இனியும் அவர்கள் பார்த்திருக்க மாட்டார்கள்.

தற்போதிருக்கின்ற அரசியல் சூழ்நிலையில் புதிய அரசியல் அமைப்பின் ஊடாகத் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது மிகவும் கடினமானது. ஏற்கனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிபந்தனையில்லாத ஆதரவை வழங்கியதன் மூலமே இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது

நாங்கள் எமக்குக் கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திப் பேரம் பேசுவதைத் தவிர்த்தமையே தற்போதைய பின்னடைவுக்கான முக்கிய காரணமாகும். ஆகவே, எதிர்காலத்தில் நாங்கள் நல்லதொரு முன்னேற்றமான நிலையை அடைவதற்குக் கடும் பிரயத்தனங்களை்ஈடுபட வேண்டிய தேவையிருக்கிறது.

இதற்காக மக்கள் போராட்டங்கள் மூலம் எமது எதிர்ப்பை வெளிக்காட்ட வேண்டியிருக்கிறது.

எமது மக்கள் எங்களுக்குத் தான் வாக்களித்திருக்கிறார்கள். மக்கள் எங்களுக்குத் தான் ஆதரவு. நாங்கள் எமது மக்களின் ஆதரவின் பிரகாரம் தான் செயற்பட்டு வருகிறோம் எனக் கூட்டமைப்பின் தலைமை சர்வதேசம் மத்தியில் தன் நியாயப்பாட்டை எடுத்துரைத்து வருகிறது.

இவ்வாறான சூழலில் இவற்றையெல்லாம் தாண்டிக் கடுமையான அழுத்தத்தைப்பிரயோகிப்பதன்மூலமே நாம் விரும்பிய தீர்வினைப் பெற முடியும்.

அதற்காகவே நாங்கள் தமிழ்மக்கள் பேரவையை உருவாக்கி அரசாங்கத் திற்குப் பல்வேறு அழுத்தங்களைத் தொடர்ச்சியாகக் கொடுத்து வருகிறோம். எமது மக்கள் இதனை உணர வேண்டும்.

சம்பந்தன் தமிழ்மக்களுக்குச் செய்கின்ற பச்சைத் துரோகத்தனத்தையும்தாண்டி நாம் எமக்கான தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் எம்மாலான முயற்சிகளைச் செய்து வருகிறோம்.

கடந்த வாரம் வவுனியாவில் காணாமற் போனோரின் உறவுகள் அடையாள உணணா விரதப் போராட்டமொன்றை மேற்கொண்டிருந்த நிலையில் போராட்டத்தின் இறுதியில் சம்பந்தனின் படத்தைத் தீயிட்டு எரித்த சம்பவமானது சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீது தமிழ்மக்கள் கொண்டிருக்கும் கடுமையானநிலைப்பாட்டைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. அவரது படத்தை எமது மக்கள் எரித்த இத்த கையசம்பவமானது சாதா ரணமானதொரு விடயமல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## போதைக்கு அடிமையானவர்களுக்கு பொதுமன்னிப்பு காலம் வழங்க முடிவு

போதைக்கு அடிமையாகியுள்ள நபர்கள் தமது விருப்பத்தின் அடிப்படையில் புனர்வாழ்வு பெற்றுக்கொள்வதற்காக, பொது மன்னிப்புக் கா்லத்தை அமுல்படுத்தவுள்ளதாக போதை நிவாரண செயலணி தெரிவித்துள்ளது.

இந்தக் காலத்தில் பொது மன்னிப்பு பெறாத போதைக்கு அடிமையானவர்களை அதன் பின்னர் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டுளவில் போதையற்ற நாடாக இலங்கையை உருவாக்கும் ஜனாதிபதியின் சிந்தனையின்கீழ், இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

போதைக்கு அடிமையான 20 ஆயிரத்துக்கும் அதிகமானவர்களுக்கு இவ் வருடத்துக்குள் புனர்வாழ்வளிக்க தயாராக உள்ளதாக அந்த செயலணி தெரிவித்துள்ளது.

மேலும், 50 ஆயிரம் பேர் போதைக்கு அடிமையாகியுள்ளதாக பாதுகாப்பு தரப்பு உறுதிப்படுத்தியுள்ளதுடன் இவர்களை 2020 ஆம்ஆண்டுக்குள் புனர்வாழ்வளிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (இ-7)

## யாழ்.பலாலி விமானத்தளம் பிராந்திய விமானத்தளமாக அபிவிருத்தி செய்யப்படும்

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

யாழ். பலாலி விமானத் தளம், பிராந்திய விமானத்தளமாக அபிவிருத்திசெய்யப்படும். அது இலங்கைக்கு மாத்திரமல்லாமல் தென்னிந்தியாவுக்கும் சேவைகளைமேற்கொள்ளும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு குறிப்பாக தமிழகத்துக்கு வடக்கு பகுதியை தொடர்புபடுததும் வகையில் இந்தியா அதனை அபிவிருத்தி செய்யவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கொழும்பில நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ்வில்



உரையாற்றிய அவர், காங்கே சன்துறை துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும்போது தமிழகத்துடனான தொடர்பு மேலும் அதிகரிக்கும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை திருகோணமலை துறைமுகம் இந்தியா, சிங்கப்பூர் மற்றும் ஜப்பானிய முதலீடுகளின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதனிடையே இந்தியாவுடன் எட்கா உடன்படிக்கை இந்த வருடத்தில் கைச்சாத் திடப்படவுள்ளது. இதன்கீழ் இலங்கையில் முன்னேற்றங்கள் ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## அம்புலன்ஸில் வந்தார் துமிந்த

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதியின் தொழிற்சங்க ஆலோசகருமான பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் படுகொலை வழக்கில் மரண தண்டனை தீர்ப்பளிக் கப்பட்ட, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த மூன்று வழக்குகளும் நேற்று ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பிலான வழக்குகளுக்கே, கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்துக்கு அவர் அழைத்துவரப்பட்டார்.

சிறைச்சாலைகள் வாகனத்தில் அல்லாது, நோயாளர் காவு வண்டியிலேயே, நீதிமன்றத்துக்கு அவர் அழைத்து



வரப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 14 வைத்தியர்களுக்கு எதிராக அமைச்சர் ராஜித முறைப்பாடு

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன, 14 வைத்தியர்களுக்கு எதிராக குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார். மகரகம வைத்தியசாலையில் சேவையாற்றும் 14 வைத்தியர்கள் ஒரே காலப்பகுதியில் வெளிநாடு சென்றது பிரச்சினைக்குரியது என்பதால், இது குறித்து விசாரணை நடத்துமாறு அமைச்சர் குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் கோரியுள்ளார்.

நோர்வே நாட்டில் நடைபெறும் கருத்தரங்கொன்றில் கலந்து கொள்வதற்காக வைத்தியர்கள் வெளிநாடு சென்றுள்ளதாக தெரியவருகிறது. (இ-7)

## மரண தண்டனைக் கைதி பட்டதாரியானார்

பம்பலப்பிட்டி, கோடீஸ்வர வர்த்தகரான மொஹமட் சியாம் படுகொலை தொடர்பில், மரண தண்டனை தீர்ப் பளிக்கப்பட்டிருந்த முன்னாள் உப-பொலிஸ் பரிசோதகரான பீ.ஏ. லக்மினி இந்திக பமுனுசிங்க, தனது பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளார் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ-7)

## சஷி வெல்கமவின் மறியல் நீடிப்பு

இலங்கை போக்குவரத்து சபையின் முன்னாள் தலைவர் சஷி வெல்கமவின் விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

சஷி வெல்கமவின் விளக்க மறியலை எதிர்வரும் 19 ஆம் திகதிவரை நீடிக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான 135 மல்லியன் ரூபாவினை முறைகேடாக பயன்படுத்தியமை தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினர் சஷி வெல்கமவை கடந்த மாதம் 20 ஆம் திகதி கைதுசெய்திருந்தமை குறிப் பிடத்தக்கது. (இ-7)

## உரிமை கேட்பது ...

எமது உரிமையை கேட்பது இனவாதமல்ல. அதனை மறுப்பதே இனவாதம். எமது உரிமையை நாமே உரத்துச்சொல்ல எழுக தமிழ் மூலம் ஒன்றிணைவோம் என தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர் த.வசந்தராஜா அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெறவுள்ள எழுக தமிழ்மக்கள் எழுச்சிபேரணி நிகழ்வு தொடர்பாக மட்டக்களப்பு கூட்டுறவு சங்க மண்டபத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் பேரவை ஒரு மக்கள் அமைப்பு. தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்காகவும் அவர்களது நலன்களுக்காகவும் ஜனநாயக ரீதியாக பாடுபடுவது அதனுடைய முக்கிய பணியாகும்.

எழுக தமிழ் ஊடாக வட கிழக்கு மக்களின் அரசியல் அபிலாசைகளை இந்நாட்டு அரசுக்கும் சர்வதேசத்துக்கும் குறிப்பாக ஐக்கிய நாடுகளின மனித உரிமைகள் பேரவைக்கும் உரத்துச் சொல்ல முடியும் என்பது தமிழ் மக்கள் பேரவையின் திடமான நம்பிக்கை.

இப்போது தலைவர்களை முந்திக்கொண்டு தீர்மானம் எடுக்கவும் செயற்படவும் மக்கள் முற்படுகின்றனர். ஏனெனில் தலைவர்களுடைய தீர்மானங்களும் செயற்பாடுகளும் தடுமாற்றம் நிறைந்து இருப்பதாக மக்கள் எண்ணுகின்றார்கள் .

எனவே தங்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தாங்களும் முழுமையான பங்களிப்பைச் செய்ய வேண்டும் என மக்கள் முன்வரத் தொடங்கியுள்ளனர். அதன் வெளிப்பாடுதான் தமிழ் மக்கள் பேரவையின் தோற்றமும் எழுக தமிழ் பேரணி நிகழ்வும்.

கேட்காமல் எதுவும் கிடைப்பதில்லை. கேட்பது நமது தலையாய கடமை. எங்களுக்கு எது தேவை என்பதை நாம்தான் சொல்லியாக வேண்டும் .அதையும் உரத்துச் சொல்லுதல் வேண்டும் .இதற்கான அரிய சந்தர்ப்பம் ஒன்றுதான் கிழக்கில் மட்டக்களப்பிலே நடை பெறவுள்ள எழுக தமிழ் பேரணி நிகழ்வு.

எனவே அந்த பேரணி நிகழ்வில் இன, மத, கட்சி வேறுபாடுகளை விடுத்து வடக்கு கிழக்கை சேர்ந்த அனைவரும் கலந்து கொளளவேண்டும் என தமிழ் மக்கள் பேரவை பகிரங்கமாக அழைப்பு விடுப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.(செ - 9)

## பொருளாதாரத் ...

நாங்கள் அப்போது எமது தேர்தல் மேடைகளில் மின்சார நாற்காலி பற்றி பேசினோம். இலங்கைக்கு எதிரான சர்வதேச நிலைப்பாடுகளுக்கு எதிராக இலங்கை மக்கள் அரசாங்கத்துடன் இருக்கின்றனர் என்பதை சர்வதேசத்திற்கு காட்டுவதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு வாக்களிக்குமாறு கோரினோம். எனினும் அந்த தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்று ஜனாதிபதியாக தெரிவானார்.

அன்று நாங்கள் தேர்தல் மேடைகளில் கூறிய சர்வதேச நீதி மன்றம், மின்சார நாற்காலி என்பவற்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் இரத்துச் செய்ய முடிந்துள்ளது. தற்போது மின்சார நாற்காலி மற்றும் பொருளாதார தடைகள் பற்றி பேச எவரும் இல்லை. இவை இல்லாத நிலையில், கலப்பு நீதிமன்றத்தை ஏற்படுத்தி படையினர், முன்னாள் ஜனாதிபதி உள்ளிட்டோரை தண்டிக்க போகிறனர் என சில அரசியல் வாதிகள் கூறினார். உங்களுக்கு தெரியும் அவை அனைத்தும் தற்போது இரத்தாகியுள்ளன. இது தான் நாங்கள் பெற்றுள்ள வெற்றி.

கடந்த காலத்தில் உலகில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. உலக நாடுகள் குறிப்பாக சீனா 11 வீத பொருளாதார அபிவிருத்தியை எதிர்பார்த்த போதிலும் 6 வீதமான பொருளாதார அபிவிருத்தியே ஏற்பட்டது. எனினும் இம்முறை அரசாங்கத்தின் வருமானத்தை சிறியளவிலேனும் எம்மால் அதிகரித்து கொள்ள முடிந்துள்ளது. அரசாங்கத்தின் முழு செலவின் பின்னர், 8 பில்லியன் ரூபா எமக்கு மீதமாகியுள்ளது.

இதன் காரணமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2030 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நாட்டை அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்லும் 9 விடயங்கள் அடங்கிய அபிவிருத்தித் திட்டம ஒன்றை முன்வைத்துள்ளார் எனவும் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன குறிப்பிட்டுள்ளார். (செ - 11)

## கனகபுரம் மாவீ...

பொலிசார் தலையிட்டு அதற்குத் தடை விதித்தனர். நேற்று மதியம் கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தல் ஒன்று கூடிய முன்னாள் போராளிகள் சிலர் இந்தப் பணியை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையில் பிற்பகல் கனகபுரம் மாவீரா துயிலுமில்லத்திற்கு சென்ற கரைச்சி பிரதேசசபையின் செயலாளா பிரதேச சபையின் அனுமதியின்றி பணிகளை மேற்கொள்ள வேண்டாம் என உத்தர விட்டிருந்தார். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த முன்னாள் போராளிகள், இது பிரதேச சபையின் உரிமைக்குட்பட்ட காணி அல்ல எனச் சுட்டிக காட்டியதோடு, இராணுவம் இவ்வளவு நாளும் இங்கு கட்டடங்கள் அமைத்து இருந்த போது உங்களுடைய பிரதேச சபையும் சட்டங்களும் எங்கு போனது எனவும் கேள்வி எழுப்பியதோடு தங்களது பணியை தொடர்ந்தும் முன்னெடுத்தனர்.

அரசியல் அழுத்தம் காரணமாகவே பொது நினைவுச் சின்னம் அமைக்கும் பணியை நிறுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கருதுவதாக முள்ளம் தண்டு வடம் பாதிக்கப்பட்ட முன்னாள போராளியான கு.பிரபாகரன் (எழிலன்) தெரிவித்தர்.

இதனை தொடர்ந்து கிளிநொச்சி உதவி பொலிஸ் அத்தியட்சர் மற்றும் கிளிநொச்சி பொலிஸர் மாவீரர் துயிலுமில்லத்திற்கு சென்று பொது நினைவு சின்னம் அமைக்கும் பணியில் ஈடுபட்டவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சியிலிருந்து 119 அவசர தொலைபேசிக்கு அழைப்பு எடுத்து மாவீரர் துயிலுமில்ல காணியில் சட்டவிரோத பணிகள் இடம்பெறுகிறது என முறைப்பாடு செய்தமையினை தொடர்ந்து தாம் இங்கு வருகை தந்தாகவும் பொலிஸார் தெரிவித்தனர் அத்தோடு நேற்று நான்கு மணிக்கு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு சமுகளிக்குமாறு அங்கு பிரதேச சபை செயலாளர், பிரதேச செயலாளர் உள்ளிட்ட பலரை அழைத்து பேசி தீர்வுக்கு வருவோம் எனக் கூறி சமாதி அமைக்கும் பணியை பொலிசார் நிறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் மேற்படி பொது நினைவுச் சின்னம் அமைக்க முயற்சித்த நபர்களை இன்று கிளிநொச்சி நீதிமன்றில் முன்னிலையாகுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (செ-11)

## இந்திய மீனவர்...

மீனவர்கள் 10 பேரை, 2 விசைப்படகுகளுடன் காங்கேசன் துறை கடற்படையினர் கைதுசெய்திருந்தனர்.

நேற்று அதிகாலை ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர், நெடுந்தீவு கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் நுழைந்த இரண்டு விசைப்படகுகளை முற்றுகையிட்டதுடன், அதிலிருந்தவாறு மீன்பிடித்த 10 பேரையும் கைது செய்தனர். கைதான அனைவரும் தமிழ்நாடு ஜெகதாப்பட்டினம் பகுதியினை சேர்ந்தவர்கள் என்பதுடன் இதில் இருந்த 15 வயது சிறுவன், அரச சான்றிதழ் பெற்ற அச்சுவேலி நன்னடத்தை பாடசாலையில் சேர்க்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.(செ-11)

## சர்வதேச...

நல்லிணக்கப் பொறிமுறை குறித்த மக்கள் கருத்தறியும் செயலணி தனது அறிக்கையில் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித நேயத்திற்கு எதிரான குற்றங்கள் உள்ளிட்ட மோசமான குற்றங்கள் குறித்த குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய சர்வதேச நீதிபதிகள், பிரதிநிதிகளை உள்ளடக்கிய கலப்பு விசேட நீதிமன்றம் அமைக்கப்படவேண்டும் என்று பரிந்துரை செய்திருந்தது.

ஆனாலும் இந்தப் பரிந்துரையை ஏற்கப்போவதில்லை என்றும், உள்ளூர் நீதிவிசாரணைகளில் வெளிநாட்டு நீதிபதிகள் ஒருபோதும் உள்வாங்கப்படமாட்டார்கள் என்ற நிலைப்பாட்டிலிருந்து இலங்கை ஒருபோதும் மாறாது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரட்ண நேற்றுமுன்தினம் கூறியிருந்தார்.

அத்துடன் போர்க்குற்ற நீதிமன்ற விசாரணைப் பொறிமுறைகளில் சர்வதேச நீதிபதிகளை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்ற இலங்கையின் நிலைப்பாட்டினை ஐ.நா பிரநிதிகள் பலரும், குறிப்பாக கடந்த வருடம் பெப்பெரவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐ.நா மனித உரிமை உயர்ஸ்தானிகர் செயிட் ராத் அல்ஹுசைன் அவர்களே ஏற்றுக்கொண்டிருந்ததாகவும் அவர் நேற்றுமுன்தினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் அமைச்சர் ராஜிதவின் இந்தக் கருத்தினை ஐ.நா மனித உரிமை பேரவை முற்றாக மறுதலித்திருக்கிறது.

நேற்று அதிகாலை ஐ.நா மனித உரிமை பேரவை தனது டு விட்டர் பதிவில், ஐ.நா மனித உரிமை உயர்ஸ்தானிகர் செயித ராத் அல் ஹுசைன் எப்போதுமே சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றப் பொறிமுறை ஒன்றினூடாகவே இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று வலியுறுத்திவந்ததாகவும், அந்த நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை என்று தெரிவித்திருக்கிறது.

அதுமாத்திரமன்றி, சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றப் பொறிமுறை ஒன்றினையே நல்லிணக்கப் பொறிமுறை குறித்த மக்கள் கருத்தறியும் செயலணியும் பரிந்துரை செய்திருப்பதனை செயித ராத் அல்ஹுசைன் மகிழ்வுடன் வரவேற்றிருப்பதாகவும் ஐ.நா மனித உரிமை பேரவை தனது டு விட்டர் பதிவில் தெரிவித்திருக்கிறது. (செ-11)

## மூளை சாவடை...

வேறொரு நபருக்கு பொருத்துவதற்காக கொழும்புக்கு கொண்டு சென்றுள்ளனர்.

கொழும்பு தேசிய வைத்திய சாலையில் இருந்து உடல் உறுப்புக்கள் மாற்று சிகிச்சை நிபுணர் றுவான் திஸ்ஸநாயக்க தலைமையில் வைத்தியர் பிரசாட் ஹேரத், வைத்தியர் ரஜித்தா பெர்னாண்டோ, வைத்தியர் ஹரிந்ர டீ சில்வா ஆகியோர் அடங்கிய குழுவினர் இணைந்து மேற்குறித்த அறுவைச்சிகிச்சையினை நேற்றைய தினம் யாழ் போதனா வைத்தியசாலையில் வைத்து மேற்கொண்டுள்ளனர்.

மன்னாரை சேர்ந்த நபர் ஒருவர விபத்தின் போது படுகாயமடைந்த நிலையில் மூளைச்சாவடைந்துள்ளார். அவருக்கு செயற்கைச்சுவாசம அளிக்கப்பட்ட நிலையில் அவருடைய சிறுநீரகங்கள் நல்ல நிலையில் பேணப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நல்லெண்ண அடிப்படையில் அவரின் உறவினர்களுடைய முழு சம்மதத்துடன் நேற்றைய தினம் அவருடைய இரு சிறுநீரகங்களும் சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளது.

வெற்றிகரமாக அகற்றப்பட்ட சிறுநீரகங்கள் வேறு ஒரு நபருக்கு பொருத்துவதற்காக நேற்றைய தினம் கொழும்புக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளது. (செ-9)


பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம். K.K.S றோட், இணுவில்.
(இரு இடத்திலும்)
A/L 2019
தொழில்நுட்பம், கலை, வர்த்தகம். மீண்டும் புதிய பிரிவு ஆரம்பம் நாளை 07 - 01 - 2017 சனி.
விரும்பிய இடங்களில் உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்.
(C - 7110)



31ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி பவளம்மா சோமலிங்கம்



திதி வெண்பா
ஆண்டு துர்முகி கார்த்திகைத் திங்கள்
பூண்ட பூர்வ அட்டமியதனில் - நீண்ட
புகழ் சோமலிங்கம் பவளம்மா சாம்பசிவன்
கழல் சேர்ந்த நாள்.
* * *
எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்
அன்பின் உருவமாய், நற்பண்புடன்
நல் வாழ்வுக்கு வழிகாட்டி, எமக்காகவே
வாழ்ந்த அன்புத் தெய்வத்தை
அஞ்சலி செய்கின்றோம்
ஓம் சாந்தி!

பிறப்பு - 03 - 04 - 1938
இறப்பு - 07 - 12 - 2016
(7395)

K.V.K மில் ஒழுங்கை
உடுப்பிட்டி
- குடும்பத்தினர்.



பொருளியற் கல்லூரி
K.K.S றோட், இணுவில்
தரம் 5
புலமைப்பரிசில் வகுப்பு
ஆசிரியர்
திரு.ரவீந்திரராஜா
சனி - ஞாயிறு 11.00A.M
வியாழன் 4.00P.M
ஆரம்பம்
07 - 01 - 2017 சனி 11.00A.M
அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும். பாடக்குறிப்புகள், விசேட பயிற்சிகள், தொடர் பரீட்சைகள் நடைபெறும்
(C - 7111)
Note - BARATHY - சித்தன்கேணியில்
சனி - ஞாயிறு 8.30A.M, புதன் 4.00P.M
புதியபிரிவு ஆரம்பமாகி நடைபெறுகின்றன



ECONOMICS HALL
நாவலர் வீதி, யாழ் நகர்
A/L 2019
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம் நாளை 8 மணி
கலைப்பிரிவு

| | |
|---|---|
| தமிழ் T.ஜீவானந்தன் | இந்து நாகரிகம் S.ஜெயக்குமார் |
| அரசியல் N.பாபு | கிறிஸ்தவம் தேவா |
| புவியியல் R.அரசன் | வரலாறு S.பிரபா |
| அளவையியல் N.பிரதீபன் | பொருளியல் R.தர்ஷன் |
| நாடகம் R.வினோதன் | ICT நயன் |

A/L 2017, 2018 வகுப்புக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன
(C-7114)




கேலிச்சித்திரம்

# குளியாப்பிட்டி கார் தொழிற்சாலை குறித்து மகிந்த ராஜபக்ஷ சந்தேகம்

குளியாப்பிட்டியவில் திறந்துவைக்கப்பட்ட கார் உற்பத்தித் தொழிற்சாலை குறித்து தாம் சந்தேகிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். 26.5 மில்லியன் டொலர் முதலீட்டில் இந்தத் தொழிற சாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதலீட்டுச் சபையின் முயற்சியால் கடந்த வருடம் இந்தத் தொழிற்சாலைக்கான ஒப்பந்தம் கைச்சாத்தானது. ஜேர்மனியின் பிரபல கார் தயாரிப்பு நிறுவனமான ஃபொக்ஸ்வேகனின் இந்தத் தொழிற்சாலையில், ஜேர்மனியில் இருந்து தருவிக்கப்படும் கார் பாகங்கள் பொருத்தப்பட்டு விற்பனைக்கு விடப்படவுள்ளன.

எவ்வாறெனினும், இந்த உற்பத்திச்சாலையில் ஃபொக்ஸ் வேகன் கார்களுக்குப் பதிலாக தரம் குறைந்த வாகனங்களே உற்பத்தி செய்யப்படப்போகின்றன என்று தாம் நம்புவதாக மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

# 5 மணித்தியாலங்களுக்கு முன்னரே விமான நிலையத்திற்கு வரவேண்டும்

(யாழ்ப்பாணம்)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விமான ஓடுபாதை புனரமைப்புப் பணிகள் காரணமாக இன்று முதல கட்டுநாயக்க விமான நிலையம் தினமும் 8 மணித்தியாலங்கள் மூடப்படவுள்ளன.

காலை 8 மணிதொடக்கம் மாலை 4 மணி வரையான 8 மணித்தியாலங்கள் மூடப்பட்டிருக்கும் என போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் அசோக் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக வெளிநாடுகளுக்கு செல்லும் பயணிகள் 5 மணித்தியாலங்களுக்கு முன்னர் விமான நிலையத்திற்கு வருகை தருமாறு அவர் தெரிவித்தார்.

விமான ஓடுபாதை புனரமைப்பு பணிகளுக்கு 5 மில்லியன் டொலர் செலவு செய்யப்படவுள்ளதாக அசோக் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு நெதர்லாந்து அரசின் கண்காணிப்பின் கீழ் சீன நிறுவனம் ஒன்று இதன் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருவதாக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் அசோக் அபேசிங்க கூறியுள்ளார்.

இந்த புதிதாக நிர்மாணிக்கப்படுகின்ற விமான ஓடுப் பாதை 3 ஆயிரத்து 335 நீளமும் 45 மீற்றர் அகலமும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண இலங்கை பொறியியலாளர் நிறுவனம் யாழ். முகாமையாளர் சம்மேளனத்துடன் இணைந்து "அயன மண்டல நாடுகளின் மழைவீழ்ச்சி தரவின் மாற்றங்களை வானியல் நிலைகளுடன் ஒப்பீடு செய்து வறட்சியினை எதிர்வு கூறல்" என்ற தொனிப் பொருளில் கருத்தரங்கு ஒன்றினை ஒழுங்கு செய்துள்ளது.

இக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இதில் "ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளும்படி ஒருங்கிணைப்பாளர் வி. நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ-9)


# அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

கடந்த 08.12.2016
வியாழக்கிழமை அன்று
இறைவனடி சேர்ந்த எமது
குடும்பத் தலைவர்

## அமரர் முருகுப்பிள்ளை பரஞ்சோதி



அவர்களின் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியம் 07.01.2017 நாளை சனிக்கிழமை காலை 5.00 மணியளவில் இன்பசிட்டி புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பழவத்தை
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

இங்ஙனம்
மருமகன்
பொ.சின்னையா.



# கண்ணீர்க் காணிக்கை



கோப்பாய் ஆசிரிய
கலாசாலை விரிவுரையாளர்
திருமதி ஸ்ரீ.ஜெயக்குமாரி
அவர்களின் அன்புச் சகோதரி

## மாலினி சுபாஸ்சந்திரன்

அவர்கள் ஜேர்மனியில் காலமாகியமையையிட்டும்
அன்னாரின் பிரிவுசார் துயர்பகிர்தல் கணையன் தோட்டம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறையில் இடம்பெறுவதையிட்டும்
அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் ஆன்மா சாந்தியடைவதாக!

(தி-7103)

விரிவுரையாளர் கழகம்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.


# இராசி பலன்

06.01.2017
(மார்கழி 22, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு
அட்டமி முற்பகல் 9.23 மணிவரை
ரேவதி பிற்பகல் 1.06 மணிவரை
சுபநேரம் 6.31-8.01 மணிவரை
இராகுகாலம் 11.01-12.31 மணிவரை
அட்டமி-நவமி

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சந் | | | |
| கேது சுக் செவ் | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>உத்தரம், அத்தம்<br>பகல் 11.46 மணிக்கு<br>மேட-சந் | | |
| | | | ராகு |
| சூரி | சனி புத | | குரு |

**மேடம்:** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், மனதில் புதிய கற்பனைகளை வளர்த்துக்கொள்வீர்கள், போசன சுகமுண்டு.

**இடபம்:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம்.

**மிதுனம்:** மற்றவர்கள் பாராட்டும் வகையிலான செயலொன்றை செய்து காட்டுவீர்கள், எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கடகம்:** தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும்.

**சிம்மம்:** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள்.

**கன்னி:** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம்.

**துலாம்:** பயணத்தால் பலனுண்டு, சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், உறவினர்களின் வருகையுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்:** திட்டமிட்ட காரியங்களை திட்டபடியே செய்து முடிப்பீர்கள், பொதுவாழ்வில் புகழ்கூடும், ஆரோக்கியமான நாள்.

**தனுசு:** நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், இல்லம் தேடி சுப தகவல்கள் வந்து சேரலாம், பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், ரோக பயமுண்டு.

**மகரம்:** பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வாகன சுகமுண்டு, பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்:** முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், நீண்ட நாளைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், குடும்ப பொறுப்புகள் கூடும்.

**மீனம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், இறை வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

# ரோலர் மீன்பிடிப் பிரச்சினைக்கு படிப்படியாக தீர்வு காணப்படும்

## இந்திய உயரதிகாரி யாழில் தெரிவிப்பு





இரு நாட்டு மீனவர்களுடைய பிரச்சினைகளுக்கு ஒரே நாளில் தீர்வு காண முடியாது. நல்லெண்ண நடவடிக்கைகளை கட்டி எழுப்புவதன் மூலம் நீண்டகால அடிப்படையில் இப்பிரச்சினைக்காக தீர்வுகளை எட்ட முடியும். ரோலர் மீன்பிடி பிரச்சினைகளுக்கும் படிப்படியாக தீர்வு காணப்படும் அதேவேளை தற்காலிகமான பிரச்சினைக்கான தாக்கத்தை குறைப்பதற்கு இரு தரப்பினர்களும் இணங்கியுள்ளனர் என்று இந்தியாவின் வெளியுறவுத்துறை இணைச் செயலாளர் சஞ்சேபாண்டா தெரிவித்துள்ளார்.

இரு நாட்டு மீனவர் பிரச்சினைகள் தொடர்பில் கொழும்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தைக்காக இந்தியாவின் மீன்பிடி அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் வருகை தந்திருந்தனர். இக்குழுவில் அங்கம் வகித்த இலங்கைக்கான துணை செயலாளர் சஞ்சே பாண்டா நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கான விஜயம் ஒன்றினையும் மேற்கொண்டிருந்தார்.

இங்கு வந்த அவர் இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி திட்டங்களை நேரில் சென்று பார்வையிட்டார். இதன் போது ஊடகவியலாளர்களை சந்தித்த சஞ்சே பாண்டா மீனவர்கள் பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பாக நம்பிக்கையினை கட்டி எழுப்புவதற்கான சாதகமான அடித்தளம் இடப்பட்டிருப்பதாகவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இரு நாட்டு மீனவர்கள் பிரச்சினைகளும் மிக நீண்ட காலமாக இருந்து வருகின்றது. மிக நீண்ட காலமாக இருந்து வரும் இப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வினை ஒரே நாளில் கண்டுவிட முடியாது. ஆயினும் ரோலர் மீன்பிடி முறையினை படிப்படியாக இல்லாமல் ஆக்குவதற்கு தற்போது இணக்கம் காணப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டு மீனவர்கள் ஆழ்கடலில் சென்று மீன்பிடியில்(மடிவலை தவிர்ந்த) ஈடுபடுவதற்கான பயிற்சிகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அவர்களுக்கு இவ்வாறான பயிற்சிகள் வழங்கப்படுவதன் ஊடாக ரோலர் மீன்பிடியினை படிப்படியாக குறைத்துக் கொள்ளலாம் என்றும் தெரிவித்தார்.

இந்தியாவின் கோரிக்கைகளுக்கு இணங்கவா இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள படகுகள் விடுவிக்கப்படுவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த சஞ்சே பாண்டா, ஆம் அது டில்லியின் கோரிக்கைகளுக்கு அமைவாகவே அப்படகுகளை விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றார்.

மேலும் இப் பேச்சுவார்த்தையில் இரு தரப்பினர்களுக்கு மத்தியில் நல்லெண்ணத்தினை ஏற்படுத்தும் வகையிலும், பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வினை எட்டும் வகையிலும், இரு தரப்பினர்களையும் உள்ளடக்கிய கூட்டுக் குழு 3 மாதங்களுக்கு ஒரு முறையும், அமைச்சர்கள் தரப்பினர்களான சந்திப்பு 6 மாதங்களுக்கு ஒரு தடவையும் இடம்பெறவுள்ளது.

மீனவர்கள் ஊடுருவல் மற்றும் ரோலர் படகு மீன்பிடி தொடர்பான பிரச்சினைகளை குறைப்பதற்கு இரு நாட்டு கரையோக காவல் துறையினரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது. இதன் ஊடாக இரு நாடுகளுக்கு இடையில் நம்பிக்கையினை கட்டியெழுப்புவதற்கும், விரைவில் படிப்படியாக மீன வர் பிரச்சினைகள் முற்றாக தீர்க்கப்படும் என்றும் துணைச் செயலாளர் நம்பிக்கை வெளியிட்டார்.

மேலும் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்தது தொடர்பில் மகிழ்ச்சி வெளியிட்ட அவர் இங்கு இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் இடம்பெற்றுவரும் சகல அபிவிருத்தி திட்டங்களையும் பார்க்கும் போது தான் சந்தோசமடைவதாகவும் தெரிவித்தார்.

கச்சதீவில் அமைக்கப்பட்டுள்ள புதிய தேவாலயத்தினையும் தான் பார்வையிட்டதாகவும், யாழ்ப்பாணத்திற்கான 24 மணிநேர விஜயத்தின் போது கிடைத்த அனுபவம் தன்னை மிகவும் கவர்ந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்டுவரும் வீட்டுத்திட்டத்தினையும் தான் பார்வையிட்டதாகவும், அவ்வீட்டுத்திட்ட பயனாளிகளுடனும் சந்தித்து கலந்துரையாடியதாகவும், வீட்டுத்திட்டங்கள் அனைத்தும் பூர்த்தி செய்யப்படுவது உறுதிசெய்யப்படும் எனவும், யாழ்ப்பாணத்துடனான உறவு நெருக்கமாக பேணப்படும் என்றும் சஞ்சே பண்டா மேலும் தெரிவித்தார். (இ -4)

# தரம்-6 அனுமதி குறித்து நாளை கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம் )

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தரம் 6 அனுமதிக்காக கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பெயர்ப் பட்டியலிலுள்ள மாணவர்களின் பெற்றோருக்கு நாளை சனிக்கிழமை (07.01.2017) முற்பகல் 10 மணிக்கு கலந்துரையாடல் இடம்பெறும்.

அன்றைய தினம் இரு மொழிக் கற்கை நெறியில் கல்வி கற்க விரும்பும் மாணவர்களுக்கான பரீட்சையும் இடம்பெறவுள்ளதால் அம் மாணவர்கள் மட்டும் வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் என கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (இ)

# வாள்வெட்டில் 8 பேர் காயம் ஒருவர் பொலிஸாரால் கைது

சுழிபுரத்தில் இடம் பெற்ற வாள்வெட்டு சம்பவம் தொட ர்பில் ஒருவரை கைது செய் துள்ளதாக பொலிஸார் தெரி வித்துள்ளனர். சம்பவத் துடன் தொடர்புடைய மேலும் சிலரை தேடி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்., முற்ப கையினால் இருகுழு க்களி டையே ஏற்பட்ட வாள்வெட்டு மற்றும் அடிதடி காரணமாக 8 பேர் படுகாயமடைந்த நிலையில்,

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் யாழ்.சுழிபுரம் காட்டுப்புரம் பகுதியில் உள்ள வீடொன்றில் இடம்பெற்றிருந்தது.

இதில் சுழிபுரத்தினைச் சேர்ந்த குடும்பஸ்தர்களான சந்திரசேகரம் சதீஸ் குமார் (வயது-28) அவரது தந்தையான அரியகுட்டி சந்திரசேகரம் (வயது-48), உதயசூரியன் சூரியகாந்தன் (வயது-32)ஈ அவரது சகோ தரரான உதயசூரியன் இமையகாந்தன் (வயது-26). கதிரன் கோவிந்தசாமி (வயது 57) மற்றும் அதே இடத்தினை சேர்ந்த இளை ஞர்களான செல்லையா வினோதரன் (வயது 19), அவரது சகோ தரான செல் லையா கிரிதரன் (வயது 31) ஆகியோருடன் மற்றுமொரு இளைஞர் உட்பட 8 பேரே படுகாயமடைந் திருந்தனர்.

படுகாயமடைந்தவர்கள் சங்கானை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக் கப் பட்டு பின்னர் மேலதிக சிகிச் சைக்காக நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் யாழ். போதனா வைத்தியசா லைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸில் முறையிட்டதனை தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையிலே நேற்று காலை சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த நபரிடம் மேலதிக விசாரணை மேற்கொண்டு ஏனையவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-4)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

நொதேண் வாரியர்ஸ்விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் சமுர்த்தி சிறுவர் கழகத்தைச் சேர்ந்த சிறுவர்களுக்கான கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு அண்மையில் சமுர்த்திச் சங்கத் தலைவர் வி.மகாலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விளையாட்டுக் கழகத் தலைவர் தி.ரதீபன் கழக உறுப்பினரும் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.சிவஸ்கந்தஸ்ரீ, கண்ணன் மற்றும் கிராம அலுவலர் சிறிஸ்கந்தராசா, நல்லூர் சமுர்த்தி சங்கத்தின் முகாமையாளர் இ.தர்மகுலசிங்கம், சமுர்த்தி அலுவலர் க.விமல்ராஜ், சனசமூகநிலையத்தலைவர் து.சயந்தன், தி.தங்கேஸ்வரி சுப்ரமணியம், சந்திரா நவரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டு கற்றல் உபகரணங்களைப் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கி கௌரவித்தார். (இ-7)

# யாழ்ப்பாண மாவட்டத்தில் 3 பேருக்கு சிறந்த கிராம அலுவலருக்கான விருது

(யாழ்ப்பாணம்)

மறைந்த நவாலியூர் கிராம அலுவலர் செல்வி ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்தமாக வருடாந்தம் வழங்கப்படும் விருது எதிர்வரும் 17ஆம திகதி செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலகத்தில் வைதது 1ஆம், 2 ஆம், 3ஆம் இடங்களைப் பெற்ற கிராம அலுவலர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

வருடாந்தம் யாழ்.மாவட்ட மட்டத்தில் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு இடையே இடம்பெறும் கிராம அலுவலருக்கான முகாமைத்துவப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு நவாலி வடக்கு கிராம அலுவலர் மறைந்த செல்வி ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்தமாக வருடாந்தம் விருதும், சான்றிதழும் யாழ். செயலகத்தினால்வழங்கப்பட்டு வருகிறது.

இதன் அடிப்படையில் 2011-2012 ஆம் ஆண்டுக்கான ஹேமலதா ஞாபகார்த்த விருதுக்கான மாவட்ட மட்டத்தில் கீழ்வரும் மூவர், முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களை பெற்றுள்ளனர்.

❖ முதலாம் இடத்தை - மருதங்கேணி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஜே/419 குடத்தனை கிராம அலுவலர் -ஏ.விமலேசன்.

❖ இரண்டாம் இடத்தை - கரவெட்டி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஜே/367 கரவெட்டி மத்தி கிராம அலுவலர் - கே.ரி.புலேந்திரன்.

❖ மூன்றாம் இடத்தை - உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஜே/196 சுன்னாகம் தெற்கு பட்டின கிராம அலுவலர் - ஈ.எயூஜீன் மசெனெற் ஆகியோர் பெற்றுள்ளனர்.

இதேநேரம் மாவட்ட மட்டத்தில் 15 பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றவர்களுக்கும் ஹேமலதா ஞாபகார்ததமாக சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

லீப்போர்வேட் படை நடவடிக்கையின் போது செல்வி ஹேமலதா செல்வராஜா வலி. தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் நவாலி வடக்குகிராம அலுவலராக சேவையாற்றிய வேளையில் கடந்த 09.07.1995 நவாலி சென்ற் பீற்றர் தேவாலய முன்றலில் சாவடைந்தார்.

இவரது ஞாபகார்த்தமாக வருடாந்த விருது வழங்கி கௌரவிக்க அரசாங்க நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு ஏற்கனவே யாழ். அரசாங்க அதிபருக்கு அனுமதியளித்திருந்தது.

இதன் பிரகாரம் நவாலி ஹேமலதா செல்வராஜா ஞாபகார்த்த நிதியத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் 17 ஆம் திகதி விருது வழங்கல் விழா யாழ்.செயலக மண்டபத்தில் இடம்பெறும். (இ-7)

# அம்பாந்தோட்டைக்கு 1 மில்லியன் சீனப் பிரஜைகள் வரவுள்ளனரா?

## அமைச்சர் ராஜித நிராகரிப்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டையில் சீனாவின் திட்டங்களில் பணியாற்ற ஒரு மில்லியன் சீனர்கள் இலங்கைக்கு வருவதற்கு நுழைவிசைவுக்கு விண்ணப்பித்துள்ளதாக, ஜாதிக ஹெல உறுமய வெளியிட்டிருந்த தகவலை அமைச்சரவைப் பேச்சாளரான ராஜித சேனாரட்ன நிராகரித்துள்ளார்.

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் நிசாந்த சிறிவர்ண சிங்க கொழும்பில் நடத்தியிருந்த செய்தியாளர் சந்திப்பு ஒன்றில், அம்பாந்தோட்டையில் ஆரம்பிக்கப்படவுள்ள சீனாவின் திட்டங்களில் பணியாற்றுவதற்கு, ஒரு மில்லியன் சீனர்கள் நுழைவிசைவுக்கு விண்ணப்பித்துள்ளதாக கூறியிருந்தார்.

இதுகுறித்து நேற்று முன்தினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் ராஜித சேனாரட்ன,

அரசாங்கத்துக்கு அத்தகைய கோரிக்கைகள் எதுவும் விடுக்கப்படவில்லை.

அம்பாந்தோட்டையில் ஆரம்பிக்கப்படும் திட்டங்கள் தொடர்பான உடன்பாடுகளில், சீனர்களை பணிக்கு அமர்த்துவது தொடர்பான நிபந்தனைகள் ஏதும் இல்லை.


எத்தகைய எதிர்ப்புகள் வந்தாலும், அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்திடம் கையளிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும். இது ஒரு தேசிய செயற்பாடு ஆகும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)


வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532



மனதில் சுமையா?
வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா? துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?
*உங்களுக்காக நாங்கள் இருக்கிறோம்.*
கை கொடுக்கும் நண்பர்கள்
104, 4 ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது * ரகசியமானது * இலவச சேவை*
021 222 8117, 077 900 877
*(தினமும் காலை 9.00 - 1.00)*
*வவனியாவில்: (024) 324 4444*
*(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)*


## மேய்ச்சல் நிலங்களாக வயல்கள்



மழைபொய்த்துப் போனதால் யாழ்.மாவட்டத்தில் வயல் நிலங்கள் மேய்ச்சல் நிலங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. அந்த வகையில் மானிப்பாய் கட்டுடைப் பகுதியில், வயல் நிலங்களில் கால்நடைகளை உரிமையாளர்கள் மேயவிட்டுள்ளனர்.

## திருவாசக முற்றோதல்

யாழ்தும்பளை நாவலடி சக்திஅம்மன்தேவஸ்தானத்தில் நாளை 7 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு நடைபெறும் திருவெம்பாவை பூசையைத் தொடர்ந்து பிரம்மஸ்ரீ பால சதீஸ்குருக்கள் திருவாசகம்முற்றோதலை ஆரம்பித்து வைப்பார். இதில் சிவசிறி தியாக சோமஸ்கந்தராஜக்குருக்கள் கலந்து சிறப்பிப்பார். (இ


**யாழ்.அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்தி பிள்ளையார் கோவில்**

யாழ்.அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயிலுக்கு நித்திய பூசைகள் செய்வதற்கு பிரதம குருக்கள், உதவி பூசகர் தேவையாக உள்ளனர். ஆகவே சுயவிபரங்கள் அடங்கிய தங்களது விண்ணப்பங்களை 20.01.2017 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தங்குவதற்கு வீடு வழங்கப்படும். (7387)

தலைவர், பரிபாலனசபை,
ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயில்,
அத்தியடி, யாழ்ப்பாணம்.



# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
## PHYSICAL EDUCATION UNIT

University of Jaffna will entertain applications from suitably qualified persons for the following post upto **19.01.2017**

**Jaffna**
**Visiting Instructor in Chess-men / Chess-Women / Karate / Rugby**

**Kilinochchi Premises**
**Visiting Instructor in Football / Netball / Cricket / Badminton / Karate**

**Qualification**

a)A graduate of a recognized university who has been a member of a National Team / National Champion or other equivalent attainments in the field of sports with the prior approval of the UGC

**OR**

b)A candidate who has passed the G.C.E (A/L) Examination in one and the same sitting and who has represented Sri Lanka in any sport at International Level with five (05) years experience in such sports

**OR**

c)G.C.E (A/L) Examination in at least 03 subjects in one and the same sitting and a Diploma in Sports of not less than 09 months duration with five (05) years experience in organizing and implementing sports programmes.

| **Post** | **Salary** |
| --- | --- |
| Visiting Instructor | Rs. 750/- per hour |

**Note:-** This appointment will be 1½ hours per day and two days per week. Total hours of appointment will be 1½ hours × 2 days × 4 weeks × 10 months = 120 hours

Selection : **Interview**

Applications for the above post shall be sent to the Deputy Registrar, Academic Establishments, University of Jaffna, Thirunelvely, Jaffna.

Application forms may be obtained from the office of the Deputy Registrar, Academic Establishments, University of Jaffna, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms will also be available in the University website **www.jfn.ac.lk.** Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Applicants from the University System/Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for Interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA
05.01.2017

(C-7104)



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 32 சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 176cm<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/6725 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி/ கணக்காளர் அவுஸ்திரேலியா<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/6774 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6726 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 46<br>உயரம்: 5’5"<br>தகைமை/தொழில்:பட்டதாரி<br>தொ.இ: G/6775 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 43 செவ் 8 இல்<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6727 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 31<br>உயரம்: 5’4"<br>தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/6783 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 32 சூரிசெவ் 10 இல்<br>உயரம்: 5’6"<br>தகைமை/தொழில்:Diploma/ தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/6728 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 11 செவ் 8 இல்<br>உயரம்: 5’3"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/6786 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.




கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பொதுக்கல்லறையொன்றை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் மாவீரர்களின் உறவினர்கள், முன்னாள் போராளிகள் ஆகியோர் இணைந்து நாட்டி வைத்ததை படங்களில் காணலாம். (படங்கள்:-பரந்தன், மல்லாவி செய்தியாளர்கள்)

# சிதம்பரநகர் மக்களுக்கு பொங்கலுக்கு முன்பாக காணி அனுமதிப்பத்திரங்கள்

## வவுனியா மாவட்ட பிரதேச செயலாளர் தெரிவிப்பு

(குருமன்காடு)

தைப்பொங்கலுக்கு முன்பாக வவுனியா, சிதம்பரநகர் மக்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்களை வழங்கி




வைக்கவுள்ளதாக வவுனியா மாவட்ட பிரதேச செயலாளர் கா.உதயராசா தெரிவித்துள்ளார்.

சிதம்பர நகர் மக்களுக்கான காணி அனுமதிப்பத்திரம் வழங்காமை தொடர்பாக வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

கடந்த வருடம் சிதம்பரபுரம் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த மக்களுக்கு அவர்கள் தங்கியிருந்த பகுதிகளில் 187 குடும்பங்களுக்கு காணி வழங்கப்பட்டிருந்தன. சிதம்பர நகர் கிராமம் என அப்பகுதி மீள் குடியேற்றம் செய்யப்பட்டு உத்தியோகபூர்வமாக வடக்கு மாகாண முதலமைச்சரினால் கடந்த வருடம் 30.06.2016 அன்று திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது 20 குடும்பங்களுக்கு முதல் கட்டமாக காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கி வைக்கப்பட்டிருந்தன. மிகுதியாக இருக்கும் குடும்பங்களுக்கு தைப்பொங்கலுக்கு முன்னதாக காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கா.உதயராசா தெரிவித்தார். (2-250)

# கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பொதுக்கல்லறை அமைக்க அடிக்கல் நாட்டல்

(பரந்தன்)

கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பொதுக்கல்லறையொன்றை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று பிற்பகல் 12.30 மணியளவில் மாவீரர்களின் உறவினர்கள், முன்னாள் போராளிகள் இணைந்து நாட்டிவைத்தனர்.

யுத்த முடிவுபெற்ற பின்னர் உடைக்கப்பட்டிருந்த குறித்த துயிலும் இல்லமானது பராமரிப்பின்றி காணப்பட்ட நிலையில். வீர மரணமடைந்த தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பொது கல்லறை அமைக்கும் பண்ி நேற்றையதினம் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது

அத்துடன் படையினர் வசமிருந்த கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லம், கடந்த வருட இறுதியில் அரசாங்கத்தால் விடுவிக்கப்பட்டதுடன் யுத்தத்தின் பின்னர் முதன்முறையாக கடந்த 2016 ஆம் ஆண்டு மாவீரர் தினத்தில் அங்கு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(2-312)

# கிளி.நகரில் மக்களை தெளிவூட்டும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகம்

(மல்லாவி)

மக்கள் விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் மக்களை தெளிவூட்டும் துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. கிளிநொச்சி பொதுச்சந்தை உள்ளிட்ட கிளிநொச்சி நகரின் பல பகுதிகளிலும் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.



மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையிலான குழுவினர் குறித்த துண்டுப் பிரசுர விநியோகத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது சந்திரசேகரன் கருத்து தெரிவிக்கையில்.

நல்லாட்சி என கூறிக் கொள்ளும் அரசு நாட்டில் உள்ள காணிகளை இந்தியாவிற்கும், சீனாவிற்கும் விற்பனை செய்து வருவதாகவும், விற்பதற்குத் திட்டமிட்டு வருவதாகவும் குறிப்பிட்டார். 99 வருட குத்தகை அடிப்படையில் அம்பாந்தோட்டை துறைமுகம் விமான நிலையம் உள்ளிட்ட பலவற்றை விற்பதற்கு திட்டமிட்டுள்ளதாக குற்றம்சாட்டினார்.

குறித்த இடங்களை விற்பனை செய்யும் ரணிலோ, அல்லது வேறு யாருமோ உயிருடன் இருக்க மாட்டார்கள். ஆனால் அடுத்து வரும் சந்ததிகள் பாதிக்கப்படப் போவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை எதிர்க்கட்சி தலைவர் குறித்த விடயம் தொடர்பில் மௌனம் காப்பது தொடர்பில் கேள்வி எழுப்பியபோது,

எதிர்க்கட்சி தலைவர் பதவியை காத்திரமாக கடைப் பிடிக்க வேண்டும்.

இவ்வாறு நாட்டை விற்கும் செயற்பாடு தொடர்பில் மௌனம் காக்காது, எதிர்க்கட்சி தலைவர் பதவியை பயன் படுத்த வேண்டும் என தாம் கோரிக்கை விடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.(2-15)

# நடப்பாண்டு அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராயும் கூட்டம் முல்லையில்

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் அதற்காக கிடைக்கப்பெற்ற நிதியுதவிகள் என்பன உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்தும் கலந்துரையாடுவதுடன் நடப்பாண்டில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் ஆராயும் கூட்டம்நடைபெறவுள்ளது.

இக் கூட்டம், இன்று வெளிக்கிழமை காலை 9 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் முல்லைத்தீவு மாவட்டச் செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

முல்லைத்தீவு மாவட்டத்திற் குட்பட்ட ஆறு பிரதேச செயலாளர் பிரிவுகளில் கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் நன்மைகள்/ தீமைகள் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அனைத்துஅரசுத் திணைக்களங்களின் தலைவர்களும் கலந்து கொண்டு ஆய்வுகள் செய்வதுடன் நடபபாண்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தும் ஆராயப்படவுள்ளன. (2-15)

# பொதுக்கல்லறை கட்டுமானத்திற்கு பொலிஸார் தடைவிதிப்பு

கனகபுரம் மாவீரர் துயிலும் இல்ல பொதுக்கல்லறை கட்டுமான பணிகளுக்கு பொலிஸார் தடை விதித்துள்ளனர். கிளிநொச்சி - கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பொதுக் கல்லறையொன்றை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் செயற்பாடுகளுக்கான கட்டுமானப்பணிகள் கிளி நொச்சி மாவட்ட பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி - கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பொதுக் கல்லறையொன்றை அமைப்பது தொடர்பில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் செயலாளர் க. கமசநாதன் செய்த முறைப்பாட்டிற்கு அமைய குறித்த கட்டுமானப் பணியை பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர். (2-281)

# அறநெறி பாடசாலை திறப்பு விழா இன்று

(பனிக்கன்குளம்)

அருள்மிகு ஶ்ரீசாளம்பன் பிள்ளையார் ஆலய அறநெறிப்பாடசாலை திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாரதி நகர் யோகபுரத்திலுள்ள ஶ்ரீ சாளம்பன் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும். (2-281)

# முதிரை மரங்களை வெட்டி துண்டுகளாக்கி வாகனத்தில் கடத்திய இருவர் கைதாகினர்

## வாகனமும் பறிமுதல்

(மல்லாவி)

வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட புளியங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள பழையவாடி பகுதியில் அனுமதியின்றி அரச காட்டுக்குள் நுழைந்து முதிரைகளை வெட்டி துண்டுகளாக்கி அதனை வாகனம் மூலம் கடத்திய இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக புளியங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

புளியங்குளம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் திடீரென சுற்றிவளைப்பை மேற்கொண்ட போது சட்டவிரோதமாக கடத்தி விரப்பட்ட மரக்குற்றிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவத்தில் கைப்பற்றப்பட்ட முதிரை மரங்கள் சுமார் நான்கு இலட்சம் ரூபா பெறுமதியுடையது என தெரிவிக்கும் பொலிஸார், கைப்பற்றப்பட்டுள்ள தடயப்பொருட்கள் புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருப்புடன் கைதான சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருவதாக தெரிவிக்கின்றனர்.

விசாரணைகளின் பின்னர் தடயப்பொருட்களுடன் சந்தேக நபர்களை வவுனியா மாவட்ட நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக புளியங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15-250)



வன்னி வலம்

# புலனாய்வுத்துறையினர் எனக்கூறி வீட்டினுள் நுழைந்த இருவரினால் 60 ஆயிரம் ரூபா பணம் திருட்டு

## செல்வபுரம் கிராமத்தில் சம்பவம்

முல்லைத்தீவு நகரில் இருந்து 250 மீற்றர் தூரத்திலுள்ள செல்வபுரம் கிராமத்தில் புலனாய்வுத்துறையினர் என கூறிக் கொண்டு வீடொன்றினுள் நுழைந்த நான்கு பேரினால் சுமார் 60 ஆயிரம் ரூபா கொள்ளையிடப்பட்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவம் நேற்று முன்தினமிரவு 11.15 மணியளவில் முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் அமைந்துள்ள செல்வபுரம் எனும் கிராமத்தில் வசித்து வரும் தெ.ராஜீ என்பவரது வீட்டில் இடம் பெற்றுள்ளது.

சம்பவதினம் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்திறங்கிய நான்கு பேர், பிரஸ்தாப நபரின் வீட்டின் முன்பாக நின்று பெயரை கூறி வெளியே வருமாறு அழைத்துள்ளனர்.

வீட்டிலிருந்து வெளியே வந்த நபருக்கு தாம் புலனாய்வுத்துறையைச் சேர்ந்தவர்கள் எனவும் விசாரணை செய்ய வேண்டும் என்றும் கூறியவாறு வீட்டினுள் இருவர் நுழைந்தனர்.

விடுதலைப்புலிகளின் பணம் குறித்த நபரிடம் இருப்பதாகவும் அந்தப் பணத்தை வைத்தே உங்களின் மகன் வெளிநாடு சென்றுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

பிரஸ்தாப நபர் இதற்கு மறுப்புக்கூறி வங்கியொன்றில் கடன் பெற்றே மகனை வெளிநாடு அனுப்பியதாக கூறியுள்ளார்.

இதற்கு கடன்பெற்ற ஆவணங்களை காண்பிக்குமாறு கேட்டுள்ளனர்.

கடன்பெற்ற ஆவணங்களையும் காண்பித்த பின்னர் வீட்டை ஒரு தடவை சோதனை செய்ய வேண்டும் எனக் கூறி பிரஸ்தாப நபரையும் மனைவியையும் வீட்டின் நடுவில் அமரச் செய்துவிட்டு சோதனை செய்துள்ளனர்.

அதன்பின்னர் பிரஸ்தாப நபரின் ஆள் அடையாள அட்டையைப் பெற்றுக்கொண்டு மறுநாள் மறுபடியும் வருவதாகக் கூறி விட்டு மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர்.

இவர்கள் மீது சந்தேகம் கொண்ட பிரஸ்தாப நபர் நள்ளிரவு 12 மணியளவில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் சென்று முறைப்பாடொன்றை பதிவு செய்துள்ளார்.

தகவலறிந்து வீட்டிற்கு சென்ற பொலிஸார் பிரஸ்தாப நபரிடம் வீட்டில் பணம் இருந்ததா? என வினவினர்.

அதன்போது தான் வீட்டில் இருந்த பணம் திருட்டுப் போனமை கண்டறியப்பட்டது.

இதேவேளை குறித்த நபரின் ஆள் அடையாள அட்டை வீட்டிற்கு வெளியே வீசப்பட்டிருந்தமை தெரிய வந்தது. மேலதிக விசாரணைகளை முல் லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை வீட்டினுள் நுழைந்தவர்களில் ஒருவர் தமிழில் பேசியதாகவும் மற்றைய நபர் சிங்களத்தில் பேசியதாகவும் வீட்டின் உரிமையாளரினால் கூறப்படுகின்றது. (2-310-281)

# வட்டுவாகல் பாலத்தின் ஊடான போக்குவரத்து தடைப்பட்டது

## பயணிகள், வாகனங்கள் காத்திருப்பு

பரந்தனில் இருந்து முல்லைத்தீவு செல்லும் பிரதானமான ஏ-35 வீதியில் வட்டுவாகல் பாலத்தின் மையப்பகுதியில் பாரம் தூக்கி வாகனம் ஒன்று மண் அகழ்வு இயந்திரத்தை ஏற்றிப் பயணித்த நிலையில் திடீரென சக்கரம் ஒன்றிற்கு காற்று போனதை அடுத்து வட்டுவாகல் பாலத்தின் ஊடான போக்குவரத்து பலமணிநேரம் தடைப்பட்ட நிலையில், பரந்தன்-முல்லைத்தீவு வீதியில் பயணித்த பயணிகளும் வாகனங்களும் காத்திருந்த நிலை காணப்பட்டது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வட்டுவாகல் பாலம் வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது பலத்த சேதமடைந்த நிலையில் மக்கள் மீள்குடியேற்றத்தின் போது அதனை அவசரமாக சிறு திருத்தம் மட்டும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த பாலம் மிக ஒடுக்கியதாகவும் சேதமடைந்த நிலையிலும் காணப்படுவதன் காரணமாக பாலத்தின் நடுப்பகுதியில் குறித்த வாகனம் பழுதடைந்ததமையினால் இந்த வீதியூடாக சேவையிலீடுபடும் பேருந்துகள் முதல் ஏனைய கனரக வாகனங்களும் மாற்றுவழியை பயன்படுத்த முடியாத நிலையில் பாலத்தின் இருமருங்கிலும் நீண்ட வரிசையில் மாலை ஐந்து மணியிலிருந்து பலமணி நேரமாக காத்து நிற்கின்றன.

தூர இடங்களிலிருந்து பேருந்துகளில் முல்லைத்தீவுக்கு வந்த பயணிகள் வட்டுவாகலிலிருந்து முல்லைத்தீவு நகரம் வரை நடந்து செல்வதனைக் காண முடிகின்றது.

இன்றுவரை முற்று முழுதாக புனரமைப்புச் செய்வதற்கு மக்கள் பல தரப்பினரிடமும் முறையிட்டும் பலனின்றி இருக்கும் நிலையில் நேற்று முன்தினம் இடம்பெற இருந்த பாரிய விபத்தொன்று சாரதியின் முயற்சியினால் உயிர் இழப்புக்களோ, காயங்களோ ஏற்படாமல் தவிர்க்கப்பட்டுள்ளது.

குறித்த வாகனத்தை செலுத்தி வந்தவர்கள் வாகனத்தை நடு வீதியில் விட்டுவிட்டுச் சென்ற நிலையில் கடற்படையினரும் பொதுமக்களும் இணைந்து வீதியில் உள்ள வாகனத்தை அகற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த பாலம் மிகப் பிரதானமான பாலமாக காணப்படுவதுடன் மிக ஒடுக்கமாகவும் சேதமடைந்தும் காணப்படுவதனால் மிகவிரைவில் புனரமைக்கவேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த முல்லைத்தீவு பொலிஸாரும் இராணுவத்தினரும் பொது மக்களின் உதவியுடன் பழுதடைந்திருந்த வாகனத்தை அவ் விடத்தில் இருந்து அகற்றியதுடன் தடைப்பட்டிருந்த வீதிப் போக்குவரத்தையும் சீர்படுத்தியுள்ளனர். (2-15-281)

# நீண்ட நாட்களின் பின்னர் சுத்தம் செய்யப்பட்டது ஊற்றங்கரைகேணி

மிக நீண்ட காலமாக சுத்தப்படுத்தப்படாமல் இருந்த தண்ணீரூற்று கேணியும் அதனை சூழ இருந்த ஊற்றுக்கிணறும் அண்மையில் இறைக்கப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டது.



இலங்கையின் மிகப் பிரசித்தமானதும் முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை தண்ணீரூற்று பகுதியில் அமைந்த திருப்பதுமான ஊற்றங்கரை சித்தி விநாயகர் ஆலயத்திநுடைய கேணியையும் அதனை சுற்றி இருந்த வருடத்தில் எந்த காலத்திலும் நீர் மட்டம் குறையாத ஊற்றுகிணறும் அண்மையில் ஆலய அறங்காவலர்களால் இறைக்கப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டது.

மேற்படி கேணியையும் கிணற்றையும் நாளாந்தம் பலநூற்றுக் கணக்கான மக்கள் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கடந்த போர்க்காலங்களிலும் சரி தற்போதும் சரி பல நூற்றுக்கணக்கான குடும்பங்களின் நீர்த் தேவையை இவ் இரண்டு நீர் நிலைகளும் நிவர்த்தி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-281- 310)



பெரதெனியா பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவன் மன்னார் செந்தூரனின் யாதுமாகி கவிதை நூல் நேற்று அறிமுகம் செய்யப்பட்டது. இதனூடாகக் கிடைத்த நிதி மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (படம்:- குருமண்காடு செய்தியாளர்)

# மானியத் திட்டங்களுக்கு காசோலை வழங்கல் ஜனவரியில்

தென்னைப் பயிர்ச்செய்கை சபையினால் கடந்த 2016 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட மானியத் திட்டங்களுக்குரிய காசோலைகள் வழங்கும் நிகழ்வு 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

மேலும் புதுநடுகை மானியத் திட்டங்களுக்கானதேங்காய்மட்டைதூட்டல், ஊடுபயிர்ச்செய்கைஎன்பனவும் வழங்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட தென்னை அபிவிருத்தி அலுவலர் ஜே.சத்தியேந்திரன் தெரிவித்துள்ளார். (2-254)

# பொலிஸ் உத்தியோகத்தர் மரணம்

வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்றது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த பாலசூரிய கருணரட்ன (வயது-52) குருநாகல் பகுதியைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. உடனடியாக வவுனியா பொது வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும்போது வழியில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். தற்போது சடலம் வவுனியா பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (2-250)

# புத்தாண்டுப் பலன்கள்

## யோகம் தரப்போகிறது ராகு-கேது பெயர்ச்சி!



**துவளாத மனதிற்கு சொந்தக் காரர்களாக விளங்கும் துலாம் இராசி அன்பர்களே!**

நம்பியவர்களுக்கு கைகொடுத்து உதவும் நல்ல உள்ளம் கொண்டவர் நீங்கள். உங்களிடம் பழகுபவர்களின் மனதில், நீங்காத இடத்தைப் பிடிப்பீர்கள். இரக்க சுபாவம் அதிகம் பெற்றிருப்பதால், சில சமயங்களில் ஏமாற்றங்களையும் சந்திப்பீர்கள். பாதி வாழ்க்கைக்கு மேல் பணமும், பதவியும் தானாகவே வந்து சேரும். அடுத்தவர் சொல்லும் யோசனைகளை அலட்சியம் காட்டாமல் ஏற்றுக் கொள்வீர்கள். நண்பர்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை, உறவினர்களுக்கும் கொடுத்தால் நலம் கிடைக்கும். தவறான கருத்துக்களைத் தட்டிக் கேட்கத் தயங்க மாட்டீர்கள். அதனால் பகை வந்தாலும் பரவாயில்லை என்று நினைப்பீர்கள். சிரித்த முகத்தோடு பேசி, காரியங்களைச் சாதிப்பீர்கள்.

உங்கள் ராசியின் சின்னம் தராசு என்பதால், நீதி, நேர்மைக்கு கட்டுப் பட்டவர்களாக விளங்குவீர்கள். தெய்வ பக்தி மிக்க நீங்கள் சேமிப்பிலேயே குறிக்கோளாக இருப்பீர்கள். உங்கள் இராசிநாதன் சுக்ரன் என்பதால், உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளவும், அலங்கரித்துக் கொள்ளவும் பிரியப் படுவீர்கள். எந்தச் செயலாக இருந்தாலும் ஆழ்ந்து ஆராய்ந்த பிறகுதான் முடிவெடுப்பீர்கள். எனவே நீங்கள் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் சமுதாயம் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவே இருக்கும்.

2017 புத்தாண்டு திருவோண நட்சத்திரத்தில், சந்திர சாரத்தில் பிறக்கிறது. எண் கணித அடிப்படையில் சூரிய பலத்தோடு கூடிய ஆண்டாக விளங்குகிறது. எனவே சூரிய-சந்திர வழிபாடுகளை முறையாக மேற்கொள்வதன் மூலம் செல்வ நிலை உயரும்.

**புத்தாண்டின் தொடக்கம்**

பிறக்கும் புத்தாண்டு பணக்கவலையும், மனக்கவலையும் மாற்றும் ஆண்டாக அமையப் போகிறது. தன ஸ்தானத்திலுள்ள சனிபகவான், சகாய ஸ்தானத்திற்கு செல்லும் வருடம் இது. மாபெரும் கிரகங்களின் மாற்றங்களால், ஏற்றங்களும் இனிய பலன்களும் வந்து சேரப்போகிறது.

புத்தாண்டின் தொடக்கத்தில் குரு 12ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். லாப ஸ்தானத்தில் ராகுவும், பஞ்சம ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். 2ஆம் இடத்தில் சனிபகவான் சஞ்சாரம் செய்கிறார். மேலும் 9,12இற்கு அதிபதியான புதன், 2ஆம் இடத்தில் சனியோடு இணைந்திருக்கிறார். அதோடு இராசிநாதன் சுக்ரனும், தனாதிபதி செவ்வாயும் கேதுவோடு இணைந்திருக்கின்றனர். சூரிய பலம் 3இல் உள்ளது. குரு-சந்திர யோகத்தோடும், செவ்வாய், சனி பரிவர்த்தனையோடும் புத்தாண்டு தொடங்குகிறது.

இதனால் கொடுக்கல்- வாங்கல் திருப்திகரமாக இருக்கும். வளமான எதிர்காலத்திற்கு வழிவகை அமைத்துக் கொள்வீர்கள். தனவரவு தாராளமாக வந்து கொண்டேயிருக்கும். எதிரிகளின் பலம் குறையும். குடும்பத்தில் உள்ளவர்களின் ஆசைகளைப் பூர்த்தி செய்வீர்கள். சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். செய்தொழிலில் அதிகப்படியான லாபம் கிடைக்க மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

புத்தாண்டில் குரு ஜென்மத்திற்கு வருகிறார். எனவே இடமாற்றம், வீடு மாற்றம், ஊர் மாற்றம் போன்றவை ஏற்படலாம். உத்தியோகத்தில் உள்ளவர்கள் எதிர்பாராத மாற்றங்களைக்காண நேரிடும். பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். சகோதரர்களால் சஞ்சலங்கள் வரக்கூடும். ராகு-கேதுக்களின் பெயர்ச்சி மிகுந்த நன்மையை வழங்கும். தொழில் ஸ்தானத்தில் ராகுவும், சுக ஸ்தானத்தில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள்.




எனவே ஆரோக்கிய தொல்லை ஏற்படாமலிருக்கவும், தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கவும், ராகு-கேது வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது. வருடக் கடைசியில் வரும் சனிப்பெயர்ச்சி சாதகமான பெயர்ச்சி தான். ஏழரைச் சனி விலகும் ஆண்டு இது. எனவே விலகுவதற்கு சில மாதங்களுக்கு முன்னதாகவே விரும்பிய காரியங்கள் விரும்பியபடி நடைபெறும்.

**நலம் தரும் ராகு-கேது பெயர்ச்சி!**

27.07.2017 அன்று ராகு-கேதுக்களின் பெயர்ச்சி நிகழவிருக்கிறது. ராகு, உங்கள் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே தொழில் வளர்ச்சி மிக நன்றாக இருக்கும். மூடிக்கிடந்த தொழில், திறப்பு விழா காணும். மூலதனம் போதவில்லையே என்று நினைத்தவர்களுக்கு, கைகொடுத்து உதவ நண்பர்கள் முன்வருவர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இதுவரை தடைப்பட்ட சலுகைகள் தானாக வந்து சேரும். பணியிடங்களை மாற்றும் வாய்ப்பு ஏற்படும். புதிய நட்பால் தனித்து இயங்க முற்படுவீர்கள். ஒரு சிலர், உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெற்று, வீட்டிலிருந்தபடியே சம்பாதிக்க முயற்சிப்பார்கள்.

சுகஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. துணிவும், தன்னம்பிக்கையும் கூடுதலாகத் தேவை. உங்களுக்கோ, உங்கள் குடும்பத்தினரைச் சார்ந்தவர்களுக்கோ ஆரோக்கியத் தொல்லை வந்துகொண்டே இருக்கும். மாற்று மருத்துவத்தால் உடல் நலத்தை சீராக்கிக் கொள்வது நல்லது. கூட்டாளிகளிடம் கடுமையாகப் பேசவேண்டாம். உடன் இருப்பவர்களை அனுசரித்துச் செல்லுங்கள். ஈட்டிய லாபத்தில் ஒரு பகுதியை இறைவனுக்கு செலவிடுவது நல்லது. மனக்கவலையை போக்குவது வழிபாடுகள் தான் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**ஜென்ம குருவின் ஆதிக்கம்**

02.09.2017இல் குருபகவான் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகிறார். ஜென்மத்தில் குரு வருகின்ற பொழுது திடீர் இடமாற்றம், ஊர் மாற்றம் உத்தியோக மாற்றங்கள் வரும். ஆனால் சிலருக்கு அது நன்மை செய்யும் விதத்திலும் அமையலாம். சுய ஜாதகத்தில் குருவின் நிலையைப் பொருத்தே ஒப்பிட்டுப் பார்த்து முடிவெடுக்க வேண்டும். குருவின் பார்வை 5,7,9 ஆகிய இடங்களில் பதிவதால் வந்த துயரங்கள் வாயிலோடு நின்று விடும். வாடிய உள்ளங்கள் இனி வளம் சேர வழிபிறக்கும். தேடிய தொழிலால் அதிக லாபம் கிடைக்கும். பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். பொருளாதார முன்னேற்றம் அதிகரிக்கும். பிள்ளைகளின் பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். அவர்கள் வெளிநாடு சென்று படிக்க விரும்பினால், அதற்குரிய இடத்தில் ஆதரவுக்கரம் கிடைக்கும். வரன்கள் வாசல் தேடி வரத் தொடங்கும். உதாசீனப்படுத்திய உறவினர்கள் ஓடி வந்து ஒட்டிக்கொள்வர். உங்களிடம் பாசம் காட்டாமல் மற்ற சகோதரர்களிடம் மட்டுமே பாசம் காட்டிய பெற்றோர், இப்பொழுது மனம் மாறி உங்களிடம் பாசம் காட்டத் தொடங்குவர். அதுமட்டுமல்ல, நீங்கள் செய்த காரியங்களையும் நினைத்துப் பார்த்து நன்றி செலுத்துவர்.

**சனிப் பெயர்ச்சி காலம்**

இதுவரை உங்கள் இராசிக்கு 2ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான் 16.12.2017இல் மூன்றாமிடத்திற்குச் செல்கிறார். முற்றிலுமாக ஏழரைச் சனி விலகுகிறது. எனவே இதுவரை இருந்த தடைகள் அகலும். விலகிச் சென்றவர்கள் எல்லாம் விரும்பி வந்திணைவர். உங்கள் இராசிநாதன் சுக்ரனுக்கு சனி நட்பு கிரகம் என்பதால், இந்தக் காலம் ஒரு பொற்காலமாக அமையும். அரசியலில் உள்ளவர்களுக்கு புதிய பதவி கிடைக்கும். அதிகார வர்க்கத்தில் உள்ளவர்கள் உங்கள் அன்பிற்கு கட்டுப்பட்டு காரியங்களை முடித்துக் கொடுப்பர். வங்கிப் பிரச்சினை அகலும். நாணயப் பாதிப்பு ஏற்படாமல் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். வீடுகட்டும் முயற்சியிலும், வாங்கும் முயற்சியிலும் இனி அனுகூலம் உண்டாகும். குழந்தைகளால் உதிரி வருமானங்கள் கிடைத்து, குடும்பச்சுமை குறைய வழிபிறக்கும்.

**அக்கறை செலுத்த வேண்டிய வக்ர காலம்!**

சுக்ரன் வக்ர காலத்தில் (09.04.2017 முதல் 18.04.2017 வரை) பயணங்கள் அதிகரிக்கும். கடல் தாண்டிச் செல்லும் வாய்ப்பு கைகூடலாம். வாகன மாற்றம் செய்வதில் அக்கறை காட்டுவீர்கள்.

புதன் வக்ர காலத்தில் (9.4.2017 முதல் 22.4.2017 வரை) வெளிநாட்டில் இருந்து நல்ல தகவல் வந்துசேரும். ஆரோக்கியத் தொல்லை ஏற்படாமல் இருக்க, ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவது அவசியம்.

குருவின் வக்ர காலம் (9.4.2017 முதல் 31.5.2017 வரை) கூடுதல் நன்மையைக் கொடுக்கும். மதிப்பும், மரியாதையும் உயரும். சஞ்சலங்கள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் திடீர் மாற்றம் உருவாகும்.

சனியின் வக்ர காலத்தில் (9.4.2017 முதல் 6.8.2017 வரை) ஆரோக்கிய தொல்லை அதிகரிக்கும். தொழில் பங்குதாரர்களின் பங்களிப்பு குறையலாம். வாகன பழுதுகளால் மாற்றம் ஏற்படக் கூடும்.

**செல்வம் தரும் சிறப்பு வழிபாடு!**

வெள்ளிக்கிழமை அம்பிகை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். ராமபிரானைத் தழுவிய அனுமன் படத்தையும், மத்தளம் கொட்டும்

நந்தியின் படத்தையும், இல்லத்து பூஜையறையில் வைத்து வழிபாடு செய்வது நன்மைகளை வழங்கும். காரைக்குடி அருகிலுள்ள கோவிலூர் கொற்ற வாளீஸ்வரர், திருநெல்லை அம்மனை யோக நாளில் வழிபட்டு வெற்றிகளை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்


**துலாம் இராசியில் பிறந்த பெண்களுக்கு**

வருடத் தொடக்கத்தில் வளர்ச்சி கூடுதலாக இருக்கும். அநாவசியச் செலவுகள் குறையும். குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பண வரவு போதுமானதாக இருக்கும். ஆரோக்கியத் தொல்லைகள் அகலும். உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவார்கள். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து பெற்றவர்களின் நட்பால் நன்மைகளை வரவழைத்துக் கொள்வீர்கள். கணவன்-மனைவிக்குள் கனிவும், பாசமும் கூடும். உங்கள் சொல்லுக்கு, வாழ்க்கைத் துணையாக வருபவர் முக்கியத்துவம் கொடுப்பார். குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உறவினர்களின் மனக்கசப்பு மாறும், பிறருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை வந்துசேரும். தாய்வழி ஆதரவு ஓரளவு கிடைக்கலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சனிப்பெயர்ச்சிக்குப் பின், சம்பள உயர்வுடன் கூடிய பணி மாற்றம் கிடைக்கலாம். அனுமன் வழிபாடு ஆனந்தம் வழங்கும்.

(தொடரும்...)


## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# திண்மக் கழிவு முகாமைத்துவம்




வெப்பச் சிதைவும் வெளிமயமாக்கலும் ஒரே மாதிரியான செயற்பாடுகளாகும். இவ்விரு முறைகளிலும் சேதன கழிவானது உயர் வெப்பநிலையில் குறைந்த ஒட்சிசனைப் பயன்படுத்தி பிரிகையாக்கப்படுகின்றது. இம் முறைகள் உயர் வெப்ப, ஒட்சிசன் அற்ற அல்லது குறைந்த சூழலல்உயிரியல் திணிவை வேறு வடிவத்தில் மாற்றப் பயன்படுகின்றன. இதன் போது எளிதில் தீப்பற்றக் கூடிய, தீப்பற்ற முடியாத வாயுக்களின் கலவை உருவாகின்றது. வளிமயமாக்கலின் போது வழங்கப்பட்ட சக்தி மீளவும் பெறப்படுவதுடன் வளிமாசடைதலும இழிவாக்கப்படுகின்றது.


கழிவுகளைத் திறந்த வெளியில் எரிக்கும் போது உருவாகும் புகை, புகை போக்கியினூடாக அல்லாமல் நேரடியாக வளியைச் சென்றடைகின்றது. இலகுவானதும் மிக மலிவானதுமாகையால் இம் முறையில் கழிவுகள் எரிக்கப்படுகின்றன. இம்முறையானது மனித ஆரோக்கியத்திற்கும் சூழலிற்கும் பாதகமான விளைவை ஏற்படுத்துகின்றது. இதன் போது டைஒக் சின் (Dioxins), நுண்துகள்கள், பொலிசயிக்கிளிக் அரோமற்றிக் சேர்வைகள், எளிதில் ஆவியாகின்ற் சேதனச் சேர்வைகள், காபன் மொனொட்சைட்டு(Carbon monoxide),ஹெக்ஸாகுளோரோ பென்சீன்(Hexa chloro benzene) சாம்பல் போன்ற மாசுக்கள் சூழலுக்குள் வெளிவிடப்படுகின்றன. டைஒக்சின் மனித இனப்பெருக்கம், வளர்ச்சி போன்றவற்றைப் பாதிப்பதோடு ஓமோன்களின் செயற்பாடுகளிற்கும் இடையூறு விளைவிக்கின்றது. அதுமட்டுமல்லாது புற்றுநோய் ஏற்படவும் ஏதுவாகின்றது. பொலிசயிக்கிளிக் அரோமற்றிக் சேர்வைகளும் ஹெக்ஸாகுளோரோ பென்சீனும் புற்றுநோய் ஏற்படக் காரணமாக அமைவதாகக் கருதப்படுகினறது. நுண்துகள்கள் சுவாசத் தொகுதிக்கு தீங்கை




ஏற்படுத்துவதுடன் ஆஸ்துமா, மூச்சுக்குழாய் அழற்சி போனற நோய்கள் ஏற்படவும் ஏதுவாகின்றன. காபன் மொனொட்சைட்டு நரம்புத் தொகுதியைப் பாதிக்கின்றது. மேலும் இம்முறையினால் நைதரசனின் ஒட்சைட்டுக்களும் காபனின் ஒட்சைட்டுக்களும் வெளிவிடப்படுகின்றன. நைதரசனின் ஒட்சைட்டுக்கள் அமில மழை, ஓசோன் படை அழிவு, பனிப்புகை, உலக வெப்பமயமாதல் போனறவை ஏற்படக் காரணமாகின்றன. பச்சைவீட்டு வாயுவான காபன் மொனொட்சைட்டு சூரிய ஒளியுடன் தாக்கமடைந்து தீங்கு விளைவிக்கும் ஓசோனை ($O_3$) உற்பத்தியாக்குகின்றது.

**நிலத்தில் குழியினை வெட்டிக் குவித்தல்**


கழிவுச் சுத்திகரிப்பு முறைகளில் இதுவும் ஒன்றாகும். பொதுவாக களிமண் தரைகளில் குழி வெட்டப்படுகின்றது. இங்கு மண் துணிக்கைகள் மிக நெருக்கமாக அடுக்கப்பட்டிருப்பதால் கழிவுகள் நிலத்தடி நீரை அடைவது குறைக்கப்பட்டு நீர் மாசடையாது பாதுகாக்கப்படுகின்றது. குழியினுள் இடப்படும் வேதிப்பொருள் கலந்த கழிவு நீர் குழியில் காணப்படும் களிமண் படையினால் வரியிடப்பட்டிருப்பதால் மண்ணினுள் செல்லுதல் இழிவாக்கப்படுகின்றது. இக்கழிவு நீரானது குழாய் மூலம் சேகரிக்கப்பட்டுச் சுத்திகரிக்கப்படும். நிலத்தடி நீரின் தரத்தைப் பாதுகாப்பதற்காக ஆழ்குழாய்கள் குழியின் அருகே அமைக்கப்படும். தினமும் குழியில் இடப்படும் கழிவுகளின் கனவளவைக் குறைப்பதற்காக, அவை முதலில் பரவலாகக் குவிக்கப்படும். பின்னர் அக்கழிவானது தற்காலிகமாக மூடிவிடப்படுவதன் மூலம் அதிலிருந்து வெளிவரும் நாற்றத்தினையும், பூச்சிகளின் பெருக்கத்தினையும் குறைத்துக் கொள்ள முடியும். இவ்வாறு தினமும் இடப்படும் கழிவுகளால் குழி நிரம்பிய பின்னர் களிமண்ணினால் குழியானது நிரந்தரமாக மூடிவிடப்படும். சில இடங்களில் மேற்கொள்ளப்படும் இம் முறையின் மூலம் சக்தியானது மீளப் பெறப்படுகின்றது. கழிவுகளின் இயற்கையான காற்றின்றிய பிரிகையாக்கத்தின் போது காபனீரொட்சைட்டு, மெதேன் போன்ற வாயுக்கள் உருவாகின்றன. வெப்பம் அல்லது மின்சக்தியை



உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருளாக மெதேன் பயன்படுத்தப்படுகின்றது. சில குழிகளில் மெதேன் வாயு சேகரிப்பதற்கான தொகுதி பொருத்தப்பட்டிருக்கும். இக்கழிவுச் சுத்திகரிப்பு முறையானது ஒரு சிறந்த சூழலுக்குப் பாதிப்பற்ற முறையாக அமைந்த போதிலும் இதற்கான செலவு ஏனைய சுத்திகரிப்பு முறைகளுடன் ஒப்பிடும் போது அதிகமாகும்.

**உயிரியல் செயற்பாடுகள**

சேதனக் கழிவுகள் நுண்ணுயிர்கள் மற்றும் சிறிய முள்ளந்தண்டற்ற விலங்குகளின் கட்டுப்பாட்டு காற்றுப் பிரிகையாக்கத்தினால் மக்கிய உரமாக மாற்றப்படுகின்றன. பிரிகையாக்கும் வீதமானது கழிவினுள் அடங்கும் பொருட்களினாலும், C/N விகிதம். வெப்பநிலை, ஈரலிப்பு, வளியின் அளவு போன்ற காரணிகளினாலும் கட்டுப்படுத்தப்படுகின்றது.




C/N விகிதமானது நுண்ணங்கிகளின் செயற்பாட்டிற்கு மிகவும் இன்றியமையாததாகும். காபன் சக்தி முதலாகப் பயன்படுத்தப்படுவதுடன் நைதரசன் சில புரதங்களின் தொகுப்பிற்கு உதவுகின்றது. C/N விகிதம் தேவையான அளவை விட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ காணப்படுமாயின் மண்ணுக்கும் தாவரங்களிற்கும் பாதிப்பை ஏற்படுத்தும். நுண்ணுயிர்களின் அனுசேபச் செயற்பாட்டிற்கு ஈரலிப்பு இன்றியமையாத காரணி யாகும். கழிவானது மிகவும் உலர்ந்ததாகக் காணப்படுமாயின் உரமாக மாற்றப்படுவது கடினமானதாகும். உயர் வெப்பநிலையில் நோயுண்டாக்கும் அங்கிகளின் வளர்ச்சி தடுக்கப்படுகின்றது. ஆனால் வெப்பநிலை $75^0C$ இற்கும் அதிகமாகக் காணப்படுமாயின் நுண்ணங்கிகளின் பிரிகையாக்கல் செயற்பாடு பாதிக்கப்படுகின்றது. இவ்வுயிரியல் பிரிகையாக்கத்திற்கு உகந்த வெப்பநிலையாக $50-60^0C$ அமைகின்றது. இப்பிரிகையாக்கல் செயற்பாட்டிற்கு வளியின் அளவும் இன்றியமையாததாகும். ஒட்சிசன் பற்றாக் குறையினால் காற்றுவாழ் நுண்ணுயிர்களின் வளர்ச்சி பாதிக்கப்படுவதுடன் காற்றின்றி வாழ் நுண்ணுயிர்களால் பிரிகையாக்கம் மேற்கொள்ளப்படும். இதனால் பிரிகையாக்கல் செயற்பாடு மெதுவாக்கப்படுவதுடன் விரும்பத்தகாத மணமும், விரைவில் தீப்பற்றக்கூடிய மெதேன் வாயுவும் வெளிவிடப்படும். காற்றின்றிய பிரிகையாக்கத்தின் போது பற்றீரியாக்களினால் ஒட்சிசன் அற்ற சூழலில் கழிவுகள் பிரிகையாக்கப்படுகின்றன. இக்காற்றின்றிய பிரிகையாக்கத்தினால் உயிரியல் வாயு உற்பத்தியாக்கப்படும். இவ் உயிரியல் வாயுவானது மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படும். நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம் போன்ற மூலகங்களும், நடுநிலை pH(pH=7), வெப்பநிலை போன்றனவும் இப்பிரிகையாக்கத்தை கட்டுப்படுத்தும் காரணிகளாக அமைகின்றன.

**ஒருங்கிணைந்த திண்மக்கழிவு முகாமைத்துவம்**

ஒருங்கிணைந்த திண்ம கழிவு முகாமைத்துவத்தில் பல சுத்திகரிப்பு முறைகள் உள்ளடங்குகின்றன. தனியொரு சுத்திகரிப்பு முறையினால் அனைத்து வகையான கழிவுகளையும் சுத்திகரிக்க முடியாது. இதனால் மேற்கூறப்பட்ட அனைத்துச் சுத்திகரிப்பு முறைகளையும் உள்ளடக்கி ஒருங்கிணைந்த கழிவு முகாமைத்துவம் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறாக திண்ம கழிவுகள் உரிய முறையில் முகாமைத்துவம் செய்யப்படுவதன் மூலம் சூழலிற்கும் மனிதன் மற்றும் ஏனைய உயிரினங்களிற்கும் ஏற்படும் பாதிப்பினை பெருமளவில் குறைத்துக் கொள்ள முடியும். எனவே நாமனைவரும் இதற்கு ஒத்துழைத்து நமக்கும், நமது எதிர்கால சந்ததியினருக்கும் சிறந்த பாதுகாப்பான சூழலையும், நோயற்ற ஆரோக்கியமான வாழ்வையும் உருவாக்குவோமாக!

தர்ஷிகா செல்வராஜா
Demonstrator
இரசாயனவியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்

## வாரத்திற்கு ஒரு புதிர்! 177

சமீபத்தில் எந்த எண்ணெய் நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் பிரிட்டிஷ் பெற்றோலியத்தின் (BP)மிகப்பெரிய பங்குதாரராக மாறியுள்ளது?

புதிர் 177 இற்கான விடைகளை 16.01.2017 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:

கலாநிதி.(செல்வி) ஷிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இரசாயனவியற்றுறை
யாழ்.பல்கலைக்கழகம்.

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு
ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

## புதிர் 176 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி

விநாயகமூர்த்தி திவாகரன்
183, நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.

**புதிர் 176க்கான கேள்வியும் விடையும்:**

கொடியவிஷமாகக் கருதப்படும் புரூசிக் அமிலத்தின் (prussic acid) விஞ்ஞானப் பெயர் என்ன?

ஐதரசன் சயனைட்டு (HCN)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 177

சரியான விடை:-..........................................
முழுப்பெயர்:-..........................................
முகவரி:-..........................................
தொ.பே. இல:..........................................
கையொப்பம்:..........................................

# தமிழகத்துக்கு 2 ஆயிரம் கன அடி காவிரி நீர் திறந்துவிட வேண்டும்

## உச்ச நீதிமன்றம் உத்தரவு

(சென்னை)

ஏற்கெனவே பிறப்பித்த இடைக்கால உத்தரவின்படி எதிர்வரும் பெப்ரவரி 7ஆம் திகதி வரை தமிழகத்துக்கு காவிரியில் விநாடிக்கு 2 ஆயிரம் கனஅடி நீரை திறந்து விடுமாறு கர்நாடக அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கர்நாடகா, தமிழகம் இடையேயான காவிரி நதி நீர் பங்கீடு தொடர்பான வழக்கை விசாரித்த காவிரி நடுவர் மன்றம் கடந்த 2007ஆம் ஆண்டு பெப்ரவரி 5ஆம் திகதி இறுதித் தீர்ப்பை வழங்கியது.

இதை எதிர்த்து கர்நாடகா, தமிழகம், கேரளா ஆகிய மூன்று மாநிலங்களும் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்தன. இந்த மேல் முறையீட்டு மனு உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் தீபக் மிஸ்ரா, அமித்வராய், ஏ.என்.கான் வில்கர் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

அப்போது "தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை 67 சதவீதம் பொய்த்து விட்டது. இதனால் தமிழகத்தில் கடும் வறட்சி நிலவி வருகிறது. எனவே காவிரியில் தமிழகத்துக்கு வழங்க வேண்டிய நீரை உடனடியாக திறக்க உத்தரவிட வேண்டும்.

மேலும் காவிரி நதி நீர் பங்கீட்டு பிரச்சினையை தீர்க்கும் வகையில் காவிரி மேலாண்மை வாரியத்தை உடனடியாக அமைக்க உத்தரவிட வேண்டும்" என தமிழக அரசு தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

இதற்கு கர்நாடக அரசு, "கர்நாடகாவிலும் கடுமையான வறட்சி நிலவுவதால் காவிரியின் குறுக்கேயுள்ள அணைகளில் நீர் இருப்பு குறைவாக உள்ளது. எனவே தமிழகத்துக்கு காவிரி நீரை திறந்துவிட முடியாது" என பதிலளித்தது.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், "இவ்வழக்கில் ஏற்கனவே பிறப்பித்த இடைக்கால உத்தரவின்படி, வருகிற பெப்ரவரி 7ஆம் திகதி வரை தமிழகத்துக்கு காவிரியில் விநாடிக்கு 2 ஆயிரம் கன அடி நீரை கர்நாடக அரசு திறந்து விட வேண்டும்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைப்பது தொடர்பாக உடனடியாக உத்தரவிடுவது சாத்தியம் இல்லை.

இது தொடர்பாக கர்நாடகா, தமிழகம் உள்ளிட்ட 4 மாநில அரசுகளின் வாதத்தை கேட்க வேண்டியுள்ளது. ஒவ்வொரு மாநிலமும் தங்கள் தரப்பு வாதத்தை எழுத்து பூர்வமாக 3 வாரங்களில் தாக்கல் செய்ய வேண்டும். இதன் அடிப்படையில் பெப்ரவரி 7ஆம் திகதி முதல் இவ்வழக்கு நாள்தோறும் விசாரிக்கப்படும்.

இவ்வழக்கை உச்ச நீதிமன்றமே தொடர்ச்சியாக விசாரித்து தீர்ப்பு அளிக்கும்" எனக் கூறி, வழக்கை வரும் பெப்ரவரி 7ஆம் திகதிக்கு தள்ளி வைத்தனர். (இ-7)

பாரதச் செய்தி

# செயல்தலைவர் என்ற பொறுப்பை கனத்த இதயத்துடன் ஏற்கிறேன்

## ஸ்டாலின் பேச்சு



கருணாநிதி உடல்நிலை காரணமாக செயல்தலைவர் பொறுப்பை கனத்த இதயத்துடன் ஏற்கிறேன் என்று தி.மு.க. பொதுக்குழுவில் மு.க. ஸ்டாலின் தெரிவித்தார்.

தி.மு.க. பொதுக்குழு கூட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் செயல்தலைவராக தேர்வு செய்யப்பட்ட பிறகு மு.க.ஸ்டாலின் ஏற்புரை நிகழ்த்தினார். அப்போது அவர் பேசியதாவது.

தலைவர்கலைஞர்மேடைக்கு வர முடியாத நிலையில் அவர் இல்லாமல் இந்த பொதுக்குழு நடைபெறுவதாக பொதுச் செயலாளர் குறிப்பிட்டார். தலைவர் வர இயலாமல் முதல் முறையாக பொதுக் குழு நடைபெறுகிறது.

செயல்தலைவர் பதவி என்பது திடீரென்று எடுத்த முடிவு அல்ல. பல கட்டங்களாக தி.மு.கவில் உள்ள மூத்த தலைவர்கள் கலந்து பேசி ஆலோசித்து நன்கு சிந்தித்து எடுத்த முடிவு இது.

ஓய்வுக்கு ஓய்வு கொடுத்து ஓயாமல் உழைத்துக் கொண்டே இருக்கும் தலைவர் கலைஞருக்கு ஓய்வு தேவைப்படுகிறது. அவரது உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ளது. அவர் ஓய்வு எடுத்து நன்றாக உடல் நலம் தேற வேண்டும்.

அதனால்தான் என்னை செயல்தலைவராக பொறுப்பேற்கும்படி வற்புறுத்தி வந்தீர்கள். அந்த வகையில் உங்கள் பேராதரவுடன் செயல் தலைவர் பொறுப்பை ஏற்று இருக்கிறேன்.

படிக்கும் காலத்தில் இருந்தே இந்த இயக்கத்தின் மீது எனக்கு ஈர்ப்பு உண்டு. கலைஞரின் கோபாலபுரம் இல்லத்தில் அவருக்கு மகனாகப் பிறந்து அவர் ஆற்றிய பணிகளை பார்த்து அவரைப் பார்க்க வரும் கழக முன்னோடிகளை பார்த்து என்னை அறியாமலேயே எனக்கு ஆசை ஏற்பட்டது.

சிறு வயதில் உதய சூரியனுக்கு வாக்குப் போட சொல்லி பிரசாரம் செய்து எனது அரசியல் பணி தொடங்கியது. அப்படி தொடங்கிய பணி இளைஞர் மன்றமாக உருவெடுத்து இளைஞர் தி.மு.கவாக மாறி பின்னர் இளைஞர் அணி ஏற்படுத்தப்பட்டது. ஆரம்ப காலத்தில் வட்ட பிரதிநிதியாக நான் தேர்தலில் நின்று பொறுப்பேற்றேன். பின்னர் அதிலிருந்து வளர்ந்து வட்ட பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

பின்னர் பகுதி பிரதிநிதியாக, மாவட்ட பிரதிநிதியாக போட்டியிட்டு ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தந்த பொறுப்புகளுக்கு வந்தேன். அதன் பிறகு பொதுக்குழு உறுப்பினராக, செயற்குழு உறுப்பினராக ஆனேன்.

1980ஆம் ஆண்டு மதுரை ஜான்சிராணி பூங்காவில் இளைஞர் அணி அமைப்பு குழு உருவாக்கப்பட்டது. அந்தக் குழுவில் உள்ள 6 பேரில் நானும் ஒரு உறுப்பினர். பின்னர் இளைஞர் அணி அமைப்பாளராக, இளைஞர் அணி செயலாளராக பொறுப்பேற்று துணை பொதுச்செயலாளராகி, கழக பொருளாளர என்ற நிலைக்கு வந்தேன்.

ஒவ்வொரு பொறுப்புக்கு வரும் போதும் நான் அளவிட முடியாத அளவுக்கு பெரு மகிழ்ச்சி அடைந்தேன். இன்று அந்த நிலை இல்லை. அது தான் உண்மை.

இன்று கலைஞர் உடல் நலம் பாதிக்கப்பட்டு இருப்பதால் செயல்தலைவர் பொறுப்பை ஏற்க வேண்டிய நிலை உள்ளது. இதனால் இந்த பொறுப்பு எனக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை. மாறாக கனத்த இதயத்துடன் உங்கள் ஆதரவுடன் இந்த பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன். என்னால் அதிகம் பேச முடியவில்லை.

செயல்தலைவர் என்ற முறையில் தலைவர் கலைஞருக்கு துணையாக இருந்து முறையாக என் பணிகளை ஆற்றுவேன். கழக முன்னோடிகள் காட்டிய வழியில் சென்று ஏற்ற பணியை சிறப்புடன் ஆற்றத் தயாராக உள்ளேன்.

சென்னை மேயராக நான பொறுப்பு ஏற்ற போது கலைஞர் என்னிடம் சொன்னார். மேயர என்பது பதவி அல்ல பொறுப்பு. பொறுப்போடு கடமையாற்ற வேண்டும் என்றார்.

எனவே செயல்தலைவர் என்பதை பதவியாக கருதாமல் பொறுப்பாக கருதி பொறுப்பான முறையில் பணியாற்றுவேன் என்று உறுதி ஏற்கிறேன் என மு.க.ஸ்டாலின் மேலும் தெரிவித்தார். (இ-7)

## எம்.பிக்களை கைது செய்ததற்கு எதிராக திரிணாமுல் காங்.எம்.பிக்கள் அணிவகுப்பு

திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி. சுதிப் பந்தோபாத்யாய கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து அக்கட்சி எம்.பிக்கள் டில்லியில் நேற்று முன்தினம் பிரதமர் இல்லம் நோக்கி அணிவகுத்தனர். ரோஸ் வேலி சிட் பண்ட் ஊழல் வழக்கில் சுதிப் சிபிஐ அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். இதற்கு திரிணாமுல் தலைவரும் மேற்கு வங்க முதல்வருமான மம்தா பானர்ஜி கடும் எதிர்ப்பு தெரிவித்தார். பண மதிப்பு நீக்கத்துக்கு எதிராக போராடும் எதிர்க்கட்சிகளுக்கு எதிராக சிபிஐ போன்ற அமைப்புகளை பிரதமர் மோடி பயன்படுத்துவதாக அவர் குற்றம் சாட்டினார். இந்நிலையில் சுதிப் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து திரிணாமுல் கட்சியின் 36 எம்.பிக்கள் நேற்று முன்தினம் டில்லியில், எண் 7 லோக் கல்யாண் சாலையில் உள்ள பிரதமர் இல்லம் நோக்கிச் சென்றனர்.

இவர்களைப பாதி வழியில் பொலிஸார் தடுத்து நிறுத்தினர். இதுகுறித்து திரிணாமுல எம்.பி. சவுகதா ராய கூறும் போது, "நாங்கள் அமைதியான முறையில் பிரதமர் இல்லம் நோக்கிச் சென்றோம். எங்களை பொலிஸார் தடுத்து நிறுத்தி வாகனங்களில் ஏற்றினர். அப்போது எங்களிடம் அத்துமீறி நடந்து கொண்டனர்" என்றார். சுதிப் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து கொல்கத்தாவில் உள்ள பா.ஜ.க. அலுவலகம மீது திரிணாமுல் காங்கிரஸார் கல்வீசித் தாக்கினர். இதில் பலர் காயம் அடைந்தனர். 6 கார்கள் சேதம் அடைந்தன.

ரோஸ்வேலிசிட்பண்ட் ஊழல வழக்கில் முன்னதாக கடந்த வெள்ளிக்கிழமை திரிணாமுல் எம்.பி. தபஸ் பால் கைது செய்யப்பட்டார். இந்நிலையில் இக்கட்சியின் 2ஆவது எம்.பியாக சுதிப் கைது செய்யப்பட்டார் என பது குறிப்பிடத்தக்கது. (இ-7)



## உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாக ஜெகதீஷ் சிங் கேஹர் பதவியேற்பு



இந்திய உச்ச நீதிமன்றத்தின் 44ஆவது தலைமை நீதிபதியாக ஜெகதீஷ் சிங் கேஹர் நேற்று முன்தினம் புதன்கிழமை பதவியேற்றார்.

உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த டி.எஸ். தாககூரின் பதவிக்காலம் ஜனவரி 3ஆம் திகதியோடு நிறைவடைந்தது. இதையடுத்து புதிய தலைமை நீதிபதியாக ஜெகதீஷ் சிங் கேஹர் பதவியேற்றார்.

இனி புதிய தலைமை நீதிபதி கேஹர் தலைமையில் கொலிஜியம் இயங்கும். இதில் நீதிபதிகள் தீபக் மிஸ்ரா, செல்லமேஸ்வர், ரஞ்சன் கோகோய், .மதன் பி.லோகுர் ஆகியோர் இடம் பெறுவார்கள். சீக்கிய சமுதாயத்தின் முதல் தலைமை நீதிபதி ஜெகதீஷ் சிங் கேஹர் ஆவார். இவரின் பதவிக்காலம் ஓகஸ்ட் 28, 2017 வரை ஏழு மாதங்கள் ஆகும்.

2016 ஜனவரியில் அருணாச்சலப் பிரதேசத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமுல படுத்தப்பட்ட வழக்கை கேஹர தலைமையிலான அமர்வு விசாரித்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# காந்தி படம் இல்லாமல் வெளியான ரூ.2000 நோட்டுக்களை திரும்பப் பெற்ற ரிசர்வ் வங்கி


மத்திய பிரதேச மாநிலத்தில் காந்தி படம் இல்லாமல் வெளியான ரூ.2000 நோட்டுக்களை ரிசர்வ் வங்கி திரும்பப் பெற்றது.

மத்திய அரசு ரூ.500, ரூ.1000 நோட்டுக்களை செல்லாது என்று அறிவித்த பிறகு புதிதாக ரூ.2 ஆயிரம் நோட்டை அறிமுகம் செய்துள்ளது. மாறுபட்ட வடிவத்தில் உயர்தர தொழில்நுட்பத்துடன் அந்த ரூ.2 ஆயிரம் நோட்டுகள் உள்ளன. கள்ள நோட்டுகள் தயாரிப்பவர்கள் அச்சிட இயலாத அளவுக்கு அந்த நோட்டுகளின் தரம் உள்ளது.

மத்திய அரசு வெளியிடும புதிய ரூபாய் நோட்டுகள் அனைத்திலும் தேசத் தந்தை மகாத்மா காந்தி படம் இடம் பெறுவதுண்டு. புதிய 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகளிலும் மகாத்மா காந்தி படம் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மத்திய பிரதேச மாநிலம் சியோப்பூர் மாவட்டத்தில் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா விநியோகம் செய்த புதிய 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகளில் மகாத்மா காந்தி படம் இல்லாமல் இருந்தது. அச்சிடும் போது எப்படியோ மகாத்மா காந்தி படம் இடம் பெறாமல் போய் விட்டது.

அதைப் பார்த்த போது மக்கள் அந்த 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகள் கள்ள ரூபாய் நோட்டுகளாக இருக்கலாம் என்று சந்தேகம் அடைந்தனர். அவர்கள் அந்த ரூபாய் நோட்டுகளை வங்கிகளில் கொடுத்தனர். அந்த ரூபாய நோட்டுகளை ரிசர்வ் வங்கி திரும்பப் பெற்றுக் கொண்டது. வங்கி அதிகாரிகள் இது பற்றி கூறுகையில், "அச்சிடும் பணியில் நடந்த தொழில்நுட்ப கோளாறால் காந்தி படம் விடுபட்டுள்ளதாக விளக்கம் அளித்தனர். (இ-7)




# ஜல்லிக்கட்டு விவகாரம் ஸ்டாலின் பேச்சு தவறு

## சசிகலா மறுப்பு

ஜல்லிக்கட்டு விவகாரத்தில் ஸ்டாலின் பேச்சு உண்மைக்கு புறம்பானது என அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலா தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழர்களின் பாரம்பரிய நிகழ்ச்சியான ஜல்லிக்கட்டு என்னும் கிராமிய விழா தடையின்றி நடத்தப்பட வேண்டும் என்பதற்காக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மேற்கொண்ட கடுமுயற்சிகளை மறைத்துவிட்டு அவர் உச்ச நீதிமன்றத் தில் எடுத்துரைக்கக் கூறிய நுணுக்கமான வாதங்களை புறம்தள்ளி விட்டு. ஜெயலலிதாவின் அரும் செயல்களை கொச்சைப்படுத்தும் வகையில், ஜல்லிக்கட்டு விவகாரத்தில் உணமைக்குப் புறம்பான கருத்துகளை எதிர்க்கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் பேசியிருக்கிறார்.

இது. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் வகையில் உள்ளது. ஜெயலலிதாவின் ஜல்லிக்கட்டுக்கான சட்டப் போராட்டத்தைப் பற்றிய முழு உணமைகளையும் எதிர்க் கட்சித் தலைவர் மு.க.ஸ்டாலின் முதலில், தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு பொய்யை மீண்டும்மீண்டும் சொல்லி, அதை உண்மையாக்கும் முயற்சி கடந்த தலைமுறைகளின் தந்திரமாக இருந்திருக்கலாம். அனைத்துத் தகவல்களும் ஒரு நொடியில் எல்லோரது விரல் நுனிக்கும் வந்துவடும். இந்த அறிவியல் யுகத் தில் பொய்ப் பிரசாரங்கள் நெடுநேரம் உலவ முடியாது. ஜல்லிக்கட்டுக்கு எதிராக2006ஆம்ஆண்டு முதலே பல்வேறு வழக்குகள் நீதிமன்றங்களில் தாககல் செய்யப்பட்டு, இறுதியாக 7.5.2014 அன்று உச்ச நீதிமன்றம் ஜல்லிக்கட்டுக்கு தடை விதித்தது.

ஜெயலலிதாவின் ஆணையின்படி உச்ச நீதிமன்றத்தின் தடை ஆணையை மறுபரிசீலனை செய்யக் கேட்டு 19.5.2014 அன்று சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. அ.தி.மு.க. பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்ட பிறகு, பொதுவிவகாரம்தொடர்பாகசசிகலா வெளியிட்ட முதல் அறிக்கை இதுவாகும்என்றுதெரிவித்துள்ளா.(இ-7)

# மலேசியாவில் வெள்ளப்பெருக்கு; 23ஆயிரம் மக்கள் வெளியேற்றம்







(கோலாலம்பூர்)

மலேசியா நாட்டில் கன மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கை தொடர்ந்து. வீடுகளில் இருந்து 23 ஆயிரம் மக்கள் வெளியேற்றப் பட்டுள்ளனர்.

மலேசியா நாட்டின் கிழக்கு கடற்கரை பகுதியில் உள்ள மாநிலங்களில் ஆண்டுதோறும் பலத்த மழை பெய்வது வழக்கம். வடகிழக்கு பகுதியில் உள்ள இரண்டு மாநிலங்களில் இந்த ஆண்டு அதிக அளவில் மழை பெய்து வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து வெள்ளம் பாதித்த பகுதிகளில் இருந்து சுமார் 23 ஆயிரம் மக்கள் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

கெலண்டன் பகுதியில் இருந்து 10.038 பேரும் அதன் அருகில் உள்ள டெரென்கனு பகுதியில் இருந்து 12.910 பேரும் வெளியேற்றப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு 139 நிவாரணம் முகாம்கள் மூலம் உணவு, நீர் மற்றும் மருத்துவ உதவி பொருட்கள் வழாங்கப்பட்டு வருகின்றன.

கடந்த 5 நாட்களுக்கு மேலாக பெய்து வரும் மழையால் நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன. வீதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. ரயில் போக்குவரத்தும் சில இடங்களில் தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளது. (இ-7)

## அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்களாக 5 இந்திய வம்சாவளியினர் பதவி ஏற்றனர்



அமெரிக்க பாராளுமன்றத்துக்கு கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற இந்திய வம்சாவளியினரான கமலா ஹாரிஸ், ரோ கண்ணா, ராஜா கிருஷ்ணமூர்த்தி, துல்சி கப்பார்ட், பிரமிளா ஜெய்பால் ஆகியோர் நேற்று முன்தினம் பதவி ஏற்றுக்கொண்டனர். இவர்களில் ராஜா கிருஷ்ணமூர்த்தி 'பகவத் கீதையின் மீது கைவைத்து சத்தியப்பிரமாணம் செய்தார்.(இ-7)

# மனித உடலில் புதிய உறுப்பு கண்டுபிடிப்பு

(லண்டன்)

மனித உடலில் இதுவரை மறைந்திருந்த புதிய உறுப்பு ஒன்றினை அயர்லாந்தின் உடற்கூறியல் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

உடற்கூறியல் வ்ரலாற்றில் சுமார் 100 ஆண்டுகளாக மனித உடலில் மறைந்திருந்த புதிய உறுப்பு ஒன்றை அயர்லாந்தை சேர்ந்த உடற்கூறியல் ஆய்வாளர்கள் தற்போது கண்டுபிடித்துள்ளனர்.

மனித உடலின் குடல் பகுதியை வயிற்றுடன்இணைக்கும் "நடுமடிப்பு", (Mesentery) இத்தனை காலமாக பல்வேறு திசுக்கள் ஒன்றிணைந்த ஒரு அமைப்பாகவே கருதப்பட்டு வந்தது.

இந்நிலையில், அயர்லாந்தைச் சேர்ந்த லிமெரிக் பல்கலைக்கழகத்தின் ஜெ.கேலவின் காஃப்பே என்ற ஆராய்ச்சியாளர் வயிற்றின் நடுமடிப்பு பகுதியானது, தொடர்ச்சியான உள்கட்டமைப்பினை கொண்டதொரு தனி உறுப்பு என்று உறுதிப்படுத்தியுள்ளார்.

மற்ற உறுப்புகளை போல இதனை அணுகும் போது, இந்த உறுப்பு தொடர்பான நோய்களை வகைப்படுத்தி, அவற்றை குணப்படுத்துவது எப்படி என்ற ரீதியில் அடுத்த கட்ட ஆய்வுகளை மேற்கொள்ள முடியும்.

உட்லில் புதியதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள நடுமடிப்பு என்ற இந்த உறுப்பு தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள தொடர்ச்சியான ஆய்வுகளின் முடிவிற்கேற்ப, இந்த புதிய உறுப்பின் இயக்கம் குறித்து இன்னும் அதிகமாக அறிந்து கொள்ள முடியும்.

இதன் இயக்கம் குறித்த தகவல்கள் அறிந்து கொள்ளும் பட்சத்தில் வயிறு, மற்றும் குடல் பகுதி சார்ந்து பல்வேறு நோய்களை எளிமையாக குணப்படுத்த முடியும் என ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (இ-7)

## ஒரு மணி நேரத்தில் 22 1/2 கி.மீ. தூரம் சைக்கிள் செலுத்தி 105 வயது முதியவர் சாதனை



(பரீஸ்)

ஒரு மணிநேரத்தில் 22 1/2 கி.மற்றர் தூரத்தை சைக்கிளில் கடந்து 105 வயது முதியவர் சாதனை படைத்துள்ளார்.

'சாதனைக்கு வயது தடை இல்லை' என்பார்கள். அதை நிருபிக்கும் வகையில் 105 வயது முதியவர் ஒருவர் ஒரு மணி நேரத்தில் 22.5 கி.மீற்றர் தூரம் சைக்கிள் செலுத்தி சாதனை படைத்துள்ளார். அவரது பெயர் ராபர்ட் மார்சண்ட். இவர் பிரான்சை சேர்ந்தவர். இவர் பரீஸ் அருகே ஒரு விளையாட்டு மைதான ஓடு தளத்தில் சைக்கிள் ஓடினார்.

ஒரு மணி நேரத்தில் இவர் 22.5 கி.மீற்றர் தூரம் செலுத்தி சாதனை படைத்தார். அப்போது அங்கு கூடியிருந்த நூற்றுக்கணக்கானோர் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

இவர் தனது 102 வயது வயதில் 26.9. கி.மீற்றர் தூரம் வரை சைக்கிள் ஓடியுள்ளார். 1911-ம் ஆண்டில் பிறந்த இவர் தனது 14 வயதில் மோட்டார் சைக்கிள் ஓட பழகினார்.



தனது 67 ஆவது வயதில் சைக்கிள் ஓடுவதில் ஆர்வம் காட்டினார். 2012ஆம் ஆண்டில் அதாவது தனது 100ஆவது வயதில் 4 மணி 17 நிமிடம் 27 விநாடிகளில் 100 கி.மீற்றர் தூரம் சைக்கிள் ஓடி சாதனை படைத்தார். அதற்காக 6 மாதம் பயிற்சி மேற்கொண்டார். (இ-7)

# தமிழ் மக்களுக்காகத் தன்னையே அர்ப்பணித்த குமார் பொன்னம்பலம்



**மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் பதினேழாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது**

மாமனிதர் குமார் அவர்களின்பதினேழாம்ஆண்டு நினைவு தினத்தில் அவரைப் பற்றி வெளிவராத சிலநினைவுரைகளை நன்றிக் கடனாக வெளிப்படுத்துவது சாலப் பொருத்தமென எண்ணுகின்றேன். ஒருவர் இறந்தபின் அவர் ஆற்றிய துணிச்சல் மிக்க சேவையை நினைவுகூருவது எமது நன்றிக் கடனாகும். இன்றைய சமுதாயத் தில் நடக்கும் நாட்டு நிலைமை காரணமாக தமிழினம்அல்லல்உற்றுவாழ்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் அவர்களுக்கும் ஓர் ஆறுதல் அளிப்பதற்காகவும் வெளிப்படுத்துவதும் ஒரு காரணமாக அமையும் என்று எண்ணுகின்றேன்.

முதலாவதாக அவரின் நினைவாக அவரின் ஆன்மாவின் சார்பாக ஐக்கிய தேசியம் ஒன்றை விரும்பு கிறவர்களிடமும் ஜனநாய கம் பற்றி வாய் ஓயாமல் பேசுபவர்களிடமும் இனத் தின் விடுதலைக்காக குரல் கொடுப்பவர்களுக்கும் பின் வருவனவற்றை சமர்ப்பிக்க விரும்புகின்றேன்.

1.உயர் நீதிமன்ற 1978, 1979,1980-1S.L.R323 ஆம் பக்கம்-உறுப்புரை (Arti cle)24-1ன் படி வடகிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்ட நீதிமன்றங்களிலும் தமி ழிலே வழக்குத் தாக்கல் செய்து நடத்தக் கூடிய சட்ட மும் உச்சநீதிமன்ற தீர்ப்பும் இருந்தபோதும் ஏன் இவ்வ ளவு காலமும் செயற்படுத்தப் படவில்லை?

2.1956 ஆம் ஆண்ட தனிச் சிங்களச்சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது அமரர் ஜீ.ஜீ.டாக்டர் கொல்வின் R.De சில்வா ஆகியோர் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதினால் இந்தநாடு இரண்டாக பிரியப்படும் அபாயம்ஏற்படும்எனஎடுத்துரைத்த போதும் (ஹன்சாட் ஆதாரமாகவிருக்கிறது) அவர்களது வேண்டுகோளை செவிமடுக்கா மல் தனிச் சிங்களச் சட்டமசோதாவை நிறைவேற் றியதால் இந்த நாடு இந் நிலைக்குத் தள்ளப்பட்டதை நிவர்த்தி செய்வதற்கு ஏதும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா?

3.எது எவ்வாறாயினும் அரசியல் அமைப்புச் சட்டத் தின்படி தமிழும் அரசகரும மொழியென்று இயற்றப்பட்டபின்பும்அதுஏன்இன்னும்செயற்படுத்தப்படவில்லை?

4.சிங்கள ஸ்ரீயை புகுத்திய போது சிங்கள ஸ்ரீக்குப் பக்கத்தில் அமரர் ஜீ.ஜீ. தமிழ் சிறியையும் எழுதும்படி வேண்டுகோள் விடுத்த போதும் அது ஏற்றுக் கொள்ளாமல் விட்டதற்கு் காரணம் என்ன?

5. எது எவ்வாறாயினும் மாமனிதர் குமார் பொன்னம்பலம் ஏழு கட்சிகளுடன் ஏறக் குறைய இரண்டு வருடங்க ளுக்கு மேலாக பேச்சுவார்த்தை நடத்தி D.P.A தேர்தல் விஞ்ஞாபனத்தை ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர்த்து பல கட்சிகளுடன் ஆலோசனை நடத்தி தயாரிக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தை சிறிமாவோ பண்டார நாயக்க ஜனாதிபதியாக போட்டியிட்ட தேர்தல் மேடை களில் அகில இலங்கை முழு வதிலும் மும்மொழிகளிலும் மாமனிதர் குமார் பொன்னம்பலம் பிரசாரம் செய்த போதும் செவி சாய்க்காமல் விட்டதற்குக்காரணம்என்ன? அது மட்டுமல்ல D.P.A. தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரித்து காலஞ்சென்ற அநுரா பண்டாரநாயக்க இன்னும் சில சிங்கள அரசியல் கட்சியைத் சேர்ந்தவர்களையும் ஊடகவி யலாளரான லசந்த விக்கிரம துங்கவையும் அழைத்துச் சென்று வன்னிக் காட்டுக்குள் இந்நாட்டின் இரு இனங்களுக்கும் இடையில் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டுமானால் தமிழருடைய சம்மதமும் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களின் சம்மதமும் தேவை என்றபடியால் அவர்களிடம் இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தை சமர்ப்பித்த பின்பு தான் இலங்கை முழுவதும் மும்மொழிகளில் பிரசாரம் செய்தார் மாமனிதர் குமார் பொன்னம்பலம்.

6.ஸ்ரீமாவோ பண்டார நாயக்க ஜனாதிபதி தேர்தல் தோல்வியுற்றதும்மேல்கூறப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தைக் கைவிட்டார்.

7.எது எவ்வாறாயி னும் திம்புக் கோட்பாட்டுக்கு ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தமிழர் விடு தலைக் கூட்டணி மற்றும் பல இளைஞர்களைக் கொண்ட போராட்ட இளைஞர்கள் அடங்கிய குழுக்கள்(அகில இலங்கை தமிழ் காங்கிரசை தவிர்த்து) ஏனையோர் பங்கு பற்றி தீர்மானிக்கப்பட்ட திம்புக் கோட்பாட்டு அடிப்படையில் சமாதானத்தை இந்த நாட்டிலே நிலை நிறுத்துவதற்காக மாமனிதர் குமார் பொன்னம்பலம் எடுத்த முயற்சிகள் ஏன் தோல்வியடைந்தது? இதற்கு யார் பொறுப்பு? இன்று ஐக்கியம், ஒற்றுமை, சமாதானம் என்று மேடை மேடையாக பேசுபவர்கள் இவைகள் ஞாபகத்தில் இருக்கின்றதா? என்பதை அமரர் குமார் பொன்னம்பலத்தின் சார்பில் நினைவூட்ட விரும்புகின்றேன்.

8.கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தில் பல சந்தர்ப்பங்களில் நீதியரசர் தமிழர், கட்சிக்காரர்கள் தமிழர்கள், கட்சிக்காரர்களுக்கு ஏற்பட்ட சட்டத் தரணிகள் தமிழர்கள். ஆனால் தமிழில் வழக்கை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு பொறுப்பு யார்?

9.வட கிழக்கில் நீதிமன்றங்கள் தமிழில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் முக்கிய மான சிவில்நடைமுறைகோவைச் சட்டம் ( Civil Procedurecode), Evidence Ordinance, Notary Ordinance Penal Code இன்னும் நீதிமன்றத் திற்கு தேவையான சட்ட நூல்கள் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்படவில்லை. இதற்கு யார் பொறுப்பு?

10.அவருடைய நினைவு தினத்தில் இலங்கை சிவில் நடைமுறைச் சட்டக் கோவையில் இருக்கின்ற கணவன்- மனைவி உறவைப் பற்றி இருக்கின்ற சட்டப் பிரிவையும் ஞாபகப்படுத்த விரும்புகின் றேன். ஓர் மனைவியை கண வன் துன்புறுத்தினால் அல்லது நடைமுறைச்சட்டக்கோவைக்கு மாறாக மனைவிக்கு எதிராக ஒரு கணவன் நடந்து கொண்டால் மனைவி பிரிந்து வாழ்வதற்கு சிவில் நடை முறைச் சட்டக் கோவைச் சட்டத்தில் இடமுண்டு இருக்கின்றது என்பதை அவருடைய நினைவு தினத்தில் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன்.

தொகுப்பு:-
க.மு.தர்மராசா
பிரசித்த
நொத்தாரிசு, சட்ட
உதவியாளர்

# பொலிஸ் நிலையத்தில் சர்வமத வழிபாடு

(கரணவாய்)

பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் சர்வமத வழிபாடு நாளை மாலை 5.45 மணியளவில் நடைபெறும். பொலிஸ்மா அதிபரின் வழிகாட்டலில் காங்கேசன்துறை பிரிவிற்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ரஞ்சித் மாசிங்கவின் தலைமையின் கீழ் சர்வமத வழிபாடு நடைபெறும். (இ-60)

# பகிரங்கக் கேள்வி அறிவித்தல்-2017

## கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் உள்ளிட்ட குத்தகை நிலையங்களை 2017ம் ஆண்டு குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக கோரப்படுகின்றன.

| விண்ணப்பப்படிவம் விநியோகிக்கப்படும் திகதி, நேரம், | கேள்வி திறக்கப்படும் திகதியும்.. நேரமும். |
|---|---|
| **திகதி** : 2017.01.13 ஆம் திகதி . வெள்ளிக்கிழமை<br>**நேரம்** : மு.ப.8.30 – ந.ப.12.00 மணி வரை<br>**இடம்** : கரைச்சி பிரதேச சபை தலைமை அலுவலகம் | **திகதி** : 2017.01.13ஆம் திகதி, வெள்ளிக்கிழமை<br>**நேரம்** : பி.ப.01.00 மணி<br>**இடம்** : கரைச்சி பிரதேச சபை மாநாட்டு மண்டபம். |

விண்ணப்பப் படிவங்களைப் பெறாதவர்கள் பகிரங்க ஏலத்திற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதுடன் கேள்விதாரரின் பிரதிநிதியாக கலந்துகொள்பவர்கள் விண்ணப்பதாரரால் அனுமதிக்கப்பட்ட கடிதத்தினை தம்வசம் வைத்திருத்தல் கட்டாயமானதாகும்.

| இல | குத்தகை நிலையம் | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (NBT நீங்கலாக, மீளளிக்கப்பட முடியாதது) |
|---|---|---|---|
| | **சேவைச் சந்தை- கிளிநொச்சி.** | | |
| 01 | ஆட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 |
| | **பொதுச் சந்தை - பரந்தன்** | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை, துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 |
| | **பொதுச்சந்தை - இரணைமடு** | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி, பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை, துவிச்சக்கரவண்டி, மோட்டார் பாதுகாப்பு நிலையம் | 10,000.00 | 1,000.00 |
| 02 | கோழியிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 |
| | **பொதுச்சந்தை - உருத்திரபுரம்** | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி,பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை | 10,000.00 | 1,000.00 |
| | **பொதுச்சந்தை - தர்மபுரம்** | | |
| 01 | தராசுக்கொட்டகை மீன், மரக்கறி,பழம், வெற்றிலை, பாக்கு, கருவாடு, முட்டை | 10,000.00 | 1,000.00 |
| | **அக்கராயன்** | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 10,000.00 | 1,000.00 |

**நிபந்தனைகள.**

1.உரிய நேரத்தில் சமுகமளிக்காதவர்கள் கேள்வி கோரும் தகைமையற்றவர்களாக கருதப்படுவார்கள்.

2.கடந்தகாலக் கேள்விகள் மூலம் சபைக்கு நிலுவைகளை செலுத்த தவறியவர்களும், கறுப்புப்பட்டியலில் உள்ளவர்களும் குத்தகைக் கேள்விகளில் பங்குபற்ற முடியாது. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கோ, நிராகரிப்பதற்கோ கேள்விச் சபைக்கு அதிகாரம் உண்டு.

3.கேள்விப் பத்திரம் பெற்றுக்கொள்ள வரும் போது தம் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணத்தின் நிழற்பிரதியினை கிராம சேவையாளர் மூலம் உண்மைப்பிரதி என சான்றுறுதிப்படுத்தி சமர்ப்பிப்பதுடன் கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழையும் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

4.சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித் தொகையின் மூன்றில் ஒரு பகுதித்தொகையினை உடனடியாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்தல் வேண்டும். குறித்த தொகை புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களின் குத்தகைப் பணமாக மாற்றம் செய்யப்படும்.

5.இறைச்சிக்கடைகள் மற்றும் சந்தைகள் என்பன குத்தகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்படல் வேண்டும். குத்தகைதாரர் தவிர்ந்த வேறு ஒருவரால் குத்தகை நிலையம் நடத்தப்படின் உடனடியாக ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படுவதுடன் வைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.

6.இறைச்சிக்கடையினை குத்தகைக்கு எடுத்தவர் வெட்டப்பட்ட மாட்டிறைச்சியை பிரதேச சபை எல்லைக்கு அப்பால் எக்காரணம் கொண்டும் கொண்டு செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.

**கணேசன் கம்ஸநாதன்**
**செயலாளரும் கேள்விச் சபைத் தலைவரும்,**
(சி-7106) **பிரதேச சபை, கரைச்சி, கிளிநொச்சி.**

# பொலிஸ்மா அதிபரிடம் 76 FCID ஆவணங்கள்

## மோசடியாளர்கள் அச்சத்தில்

(கொழும்பு)

**பொலிஸ் நிதிக்குற்ற விசாரணை பிரிவின ரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந்த ஊழல், மோசடி தொடர்பிலான 76 ஆவணங்கள் உடன் அமுலுக்கு வரும் வகையில் பொலிஸ்மா அதிபரின் கீழ் கொண்டு வரப் படவுள்ளது. அதற்கமைய தற்போது வரையில் பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவில் மீதமாக இருப்பது 14 ஆவணங்கள் மாத்திரமே எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இதேவேளை, நிதி மோசடி விசாரணை பிரிவின் இயக்குநர் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி அனுர பிரேமஷாந்த உடன் அமுலுக்கு வரும் வகையில் மொனராகலை மாவட்டத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையக தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.



அவருக்கு பிரதி பொலிஸ்மா அதிபர் என்ற பதவி உயர்வு வழங்கி இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் அதிகாரியாக செயற்பட்ட பிரேமஷாந்தவுக்கு உயர் பதவி வழங்குவதற்கு எதிராக அந்த நபர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவுக்கு அமைய அவருக்கு இந்த உயர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

பிரேமஷாந்தவுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ள நிலையில் நிதி மோசடி விசாரணை பிரிவு இயக்குநர் பதவிக்கு தகுதியான அதிகாரி இல்லாமையினால் அந்த பிரிவுக்கு உதவி பொலிஸ் அதிகாரி பவித்ர ஜயரத்ன பதில் இயக்குந ராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த இடமாற்றம் அரசியல் பழிவாங்கல் என சிவில் சமூக குழுக்கள் குற்றம் சுமத்தியுள்ளன. (இ-7)

## ஹர்ச டி சில்வாவிற்கு கட்சியில் புதிய பதவி

(கொழும்பு)

பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ச டி சில்வாவிற்கு ஐக்கிய தேசியக் கட்சி புதிய பதவியொன்றை வழங்கியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய துணைச் செயலாளராக ஹர்ச டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம்



கூடிய கட்சியின் செயற்குழுவினால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது காணப்படும் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் பதவிக்கு மேலதிகமாகவே இந்த துணைச் செயலாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

தேசிய அரசாங்கத்தின் ஒற்றுமையை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென கட்சியின் செயற்குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. (இ-7)

## இலங்கையில் சீனப்படை முகாம் இல்லை

## அமைச்சர் அமரவீர திட்டவட்டமாக மறுப்பு

இலங்கையில் சீனாவின் படைமுகாம் ஒன்று நிறுவப்படவுள்ளதாக வெளிவந்த தகவலை மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர மறுத்துள்ளார்.

"அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீனாவின் படைமுகாமொன்று அமைக்கப்படவுள்ளதாக மக்கள் மத்தியில் தவறான பிரசாரத்தினை சில விசமிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கை அரசாங்கத்தின் அனுமதியின்றி இதுபோன்றதொரு படைமுகாமினை எந்தவொரு நாட்டினாலும்



நிறுவமுடியாது. எமது நாட்டின் கடற்படையினரே அனைத்து துறைமுகங்களின் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தி வருகின்றார்கள்.

அம்பாந்தோட்டைத் துறைமுகப் பகுதியில் புதிய சீமெந்துத் தொழிற்சாலை, எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் திரவ இயற்கை வாயுத் தளம் என்பன நிறுவப்படவுள்ளன. ஒப்பந்த அடிப்படையில், அம்பாந்தோட்டை துறைமுக நட்டத்தினை ஈடுசெய்வதற்கு சீனாவுடன் சேர்ந்து வேலைசெய்யவுள்ளோம். இதற்கான ஒப்பந்தம் வெகு விரைவில் கைச்சாத்திடப்படும்.

அதேவேளை, அம்பாந்தோட்டைப் பகுதியில் 15 ஆயிரம் ஏக்கர் முதலீட்டு வலயமொன்றினை உருவாக்குவது தொடர்பிலும் ஆராய்ந்து வருகிறோம்" எனறு, அமரவீர மேலும் தெரிவித்தார். (இ-3)

## இன்று ஒரு தகவல்

### எப்போதும் முட்டுக் கொடுக்க முடியுமா?

ஒரு நாள் என் நண்பர் ஒருவர் தன்க்கு ஒரு பிரச்சினை என்றும் அதைத் தீர்த்து வைக்க என்னால் யோசனை கூற முடியுமா? என்றும் கேட்டுப் போன் செய்தார். வரச் சொன்னேன் வந்தார்.

அவர் பிரச்சினை சற்று வித்தியாசமானது.

இரு பங்குதாரர்கள் இணைந்து நடத்தும் ஒரு வியாபார நிறுவனத்தில் முதல் பங்கு தாரரின் சிபாரிசில் அதே நிறுவனத்தில் இவர் சேர்ந்திருக்கிறார். இரண்டாவது பங்குதாரருக்கு வருத்தம்.

தன்னைக் கண்காணிக்கத்தான் தன் பங்குதாரர்கள் இப்படிச் செய்துவிட்டார் என்று அவர் எண்ணத் தொடங்கி, நண்பரை ஏகமாய்க் கஷ்டப்படுத்த ஆரம்பித்துவிட்டார். எந்த நிமிடம் என்ன வெடி வைத்து இவரை விரட்டலாம் என்று வாய்ப்புத் தேடவும் சதி நடந்தது.

நண்பரிடம் கேட்டேன். ஒரு பங்குதாரர் எனக்குப் பக்கபலமாய் இருக்கிறார். எனவே என்னை உங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்கிற தோரணையில் நீங்கள் நடந்து கொள்கிறீர்களா? என்பதுதான் என் முதல் கேள்வி.

நண்பர் தயங்கினார்.

அப்படி ஒன்றும் இல்லை என்றார்.

என்னிடம் மறைக்காதீர்கள்! என்றேன். உள்ளுக்குள் அந்த எண்ணம் உண்டு. ஆனால் அதை வெளியில் காட்டிக் கொள்வதில்லை.

நான் மறுத்தேன். அந்த எண்ணம் சிறிதும் கூடாது. இருந்தால் உங்களையும் அறியாமல் ஒரு சந்தர்ப்பத்தில் இல்லாவிட்டாலும் மறு சந்தர்ப்பத்திலாவது அது வெளிப்பட்டுவிடும்–ஏன்–வெளிப்பட்டிருக்கும் என்று கூட! அடித்துச் சொல்லுவேன். எனவே தான் இரண்டாவது பங்குதாரர் உங்களைப் படுத்துகிறார் என்றேன். நண்பர் வழிக்கு வந்தார். சரி என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்? என்றார்.

முதல் பங்குதாரர் நமக்கு எப்போதும் முட்டுக் கொடுப்பார் என்கிற நம்பிக்கையில் இஷ்டத்திற்கு நடந்து கொள்வதை முதலில் தவிருங்கள். நீங்கள் பணிபுரியும் நிறுவனத்தில் நீங்கள் ஓர் அநாவசியத் திணிப்பு என்று எவருமே எண்ண இயலாத வகையிலும் நீங்கள் அந் நிறுவனத்தின் அத்தியாவசிய மனிதர் என அனைவரும் எண்ணும் வகையிலும் உழையுங்கள். நிறுவனத்தை வளர்க்க யோசனை சொல்லுங்கள்.

சேர்த்துவிட்ட பங்குதாரரை விடச் சேர்த்துக் கொண்ட பங்குதாரரே முக்கியமானவர்கள் என்றும் எண்ணும் வகையில் அவருக்கு மிகுந்த மரியாதை செலுத்துங்கள்.

நீங்கள் முதல் பங்குதாரரின் கங்காணி (உளவு பார்ப்பவர்) எனும் எண்ணத்தை உடையுங்கள். இரண்டாவது பங்குதாரரின் திறமையான நிர்வாகத்தை, செயல் திறனைப் பாராட்டி முதல் பங்குதாரரிடம் சொல்லுங்கள்.

அப்படி நீங்கள் உயர்வாகச் சொல்பவை இரண்டாவது பங்குதாரரின் காதுகளை எட்டும் படியும் பார்த்துக் கொள்ளுங்கள் என்று பெரிதாகப் பிரசங்கம் செய்து அனுப்பி வைத்தேன். நீண்ட நாட்கள் கழித்து வந்த நண்பர் இரண்டாவது பங்குதாரர் இப்போது தன்னிடம் மிகப் பிரியமாக இருப்பதாகச் சொன்னார். சபாஷ் என்றேன்.

யார் வேண்டுமானாலும் எங்கு வேண்டுமானாலும் ஆளைப்பேரைப்பிடித்துச் சேர்ந்துவிடலாம். ஆனால் அந்த இடத்தைக் காப்பாற்றிக் கொள்வது அவரவர் கையில்தான் இருக்கிறது. சேர்த்துவிட்டவர்கள் எப்போதும் முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியத்தை ஒரு போதும் ஏற்படுத்திவிடக் கூடாது.

**லேனா தமிழ்வாணன்**

# கோத்தபாய மீது மகிந்தவுக்கு அச்சம் அம்பலப்படுத்தினார் அமைச்சர் ராஜித

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மீது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரு வித பயம் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சியின் போது, இடம்பெற்ற சமாதான பேச்சு வார்த்தைகளுக்கு கோத்தபாய இடையூறு விளைவித்துள்ளார். இதன் காரணமாக முன்னாள் ஜனாதிபதி இரகசிய சந்திப்புக்களை மேற்கொண்டதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

ஒரு நாள் சமாதானம் தொடர்பாக சிலர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேசிக் கொண்டிருந்தனர். இதன்போது அந்த இடத்திற்கு கோத்தபாய வருவதை அறிந்து கொண்ட மகிந்த பதற்றமடைந்தார்.

கோத்தபாய வருகிறார் தற்போது நீங்கள் செல்லுங்கள் என, தன்னுடன் உரையாடிய சமாதான விரும்பிகளை மகிந்த அனுப்பி வைத்தார் என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அதேவேளை அலுத்கம, தர்கா நகரில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் உத்தரவிற்கமைய மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது அமைச்சர் இந்த விடயங்களை தெரிவித்துள்ளார்.(இ-7)




## மக்களின் எதிர்ப்பையடுத்து

# அம்பாந்தோட்டை சீன முதலீட்டு வலய ஒப்பந்த கைச்சாத்து திகதி ஒத்திவைப்பு

(கொழும்பு)

**அம்பாந்தோட்டை துறைமுகத்தில் சில பகுதியை சீன முதலீட்டு வலயமாக மாற்றும் திட்டத்திற்கு பெரும் எதிர்ப்பலைகள் எழுந்ததை தொடர்ந்து அந்த திட்டம் தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்தும் நடவடிக்கை பிற்போடப்பட்டுள்ளது.**



ரணில்- மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்ற ஜனவரி 8 ஆம் திகதியன்று இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவிருந்தது. எனினும் இந்த மாத நடுப்பகுதி வரை குறித்த 'ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நடவடிக்கை பிற்போடப்பட்டுள்ளதாக சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரம தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகப் பகுதியில் தெரிவு செய்யப்பட்டுள்ள 5ஆயிரம் ஏக்கர் காணியை சீன முதலீட்டு வலயமாக்கும் திட்டத்திற்கு அம்பாந்தோட்டை மக்கள் உட்பட எதர்க்கட்சியினரும் எதிர்ப்புக்களை வெளியிட்டு வருகின்றனர்.

அதுமட்டுமன்றி பௌத்த மக்களின் பெரும் கௌரவத்திற்குரிய அஸ்கிரிய பீட மகாநாயகர் சார்பிலும் இந்த திட்டம் குறித்து அதிருப்தியும் வெளியிடப்பட்டது.

இந்த நிலையில் குறித்த திட்டம் தொடர்பான வரைவு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அங்கீகாரம் பெற்ற பின்னர் அதனை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதாக அமைச்சர் மலிக் சமரவிக்ரம கூறியுள்ளார்.

இதுதொடர்பான நடவடிக்கைகளைக் கையாள்வதற்கு உப குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய அமைச்சர்களான சரத் அனுமுகம, ரவி கருணாநாயக்க, அர்ஜுன ரணதுங்க, சாகல ரத்நாயக்க மற்றும் நிமால் சிறிபால டி சில்வா ஆகியோர் இந்த குழுவில் உள்ளனர்.

இந்த நிலையில் அம்பாந்தோட்டை சீன முதலீட்டு வலய ஒப்பந்தம் இரத்து செய்யப்படவில்லை என்றும் மாறாக இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடும் திகதியே ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் மலிக் சமரவிக்ரம மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## தென்மாகாண பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக இதுவரையில் 277 முறைப்பாடுகள்

தென் மாகாண பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக 277 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தென் மாகாண காரியாலயத்திற்கு கடந்த ஆண்டிலேயே இவ்வாறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதில் அதிகளவான முறைப்பாடுகள் காலி மாவட்ட பொலிஸ அதிகாரிகளுக்கு எதிராக கிடைக்கப் பெற்றுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தென் மாகாண பணிப்பாளர் விமலரட்ன புஞ்சி ஹேவா தெரிவித்துள்ளார்.

காலி மாவட்டத்தில் நாகொட பொலிஸ் நிலையத்தினைத் தவிர்ந்த ஏனைய அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கு எதிராகவும் மொத்தமாக 132 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாத்தறை மாவட்ட பொலிஸ் நிலையங்களுக்கு எதிராக 87 முறைப்பாடுகளும், அம்பாந்தோட்டை மாவட்ட பொலிஸ் நிலையங்களுக்கு எதிராக 58 முறைப்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

முறைப்பாடுகள் தொடர்பில் பொலிஸ் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்காமை தொடர்பிலேயே அதிகளவில் அதாவது 102 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதிகார துஷ்பிரயோகம், பக்கச்சார்பாக செயற்படுதல், சட்டவிரோத கைதுகள் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இந்த முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கும் நோக்கில் அனைத்து முறைப்பாடுகளும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் கொழும்பு பிரதான காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விமலரட்ன புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். (இ-7)

## ரஷ்யப் பிரஜை நீரில் மூழ்கிப் பலி!

(கொழும்பு)

கொஸ்கொட கடற்பகுதியில் நீராடச் சென்ற வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

ரஷ்ய நாட்டைச் சேர்ந்த குறித்த நபர், பெண் ஒருவருடன் நீராடச் சென்ற வேளை, நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, அவரை மீட்ட பிரதேச மக்கள் பலபிடிய வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

எனினும் சிகிச்சை பலனின்றி 29 வயதான அந்த ரஷ்யப் பிரஜை பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பிரேதப் பரிசோதனைகளுக்காக பலபிடிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-7)

## உடன்பாட்டை படித்துப் பார்க்காமல் ஏற்கவோ, நிராகரிக்கவோ முடியாது

அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பாக அரசு சீனாவுடன் செய்து கொள்ளும் உடன்பாட்டை படித்துப் பார்க்காமல், அதனை ஏற்கவோ, நிராகரிக்கவோ முடியாது என்று மல்வத்தை பீடத்தின் மகாநாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 ஆண்டுகள் குத்தகைக்கு வழங்க அரசாங்கம் எடுத்துள்ள முடிவு தொடர்பாக சமல் ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணியினர் நேற்று முன்தினம் மல்வத்தை, அஸ்கிரிய பீடங் களின் மகாநாயக்கர்களைச் சந்தித்தனர்.

இதன்போது மல்வத்தை பீட மகாநாயக்கர், உடன்பாடுகள் செய்து கொள்ளப்படும் போது வெளிப்படைத் தன்மை அவசியம் என்று மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கர் திப்பொட்டுவாவே சிறி சித்தார்த்த சுமங்கள தேரர் தெரிவித்தார்.

முதலில் உடன்பாடுகளை நாம் படிக்க வேண்டும் என்றும், அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு இதன் மூலம் தொழில் வாய்ப்புகள் கிடைக்கும் என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது என்றும் மல்வத்தை மகாநாயக்கர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது, சமல் ராஜபக்ஷ "நான் அமைச்சராக இருந்த போதே கைத்தொழில் அபிவிருத்திக்காக அம்பாந்தோட்டை துறைமுகம் கட்டப்பட்டது. இந்த உடன்பாட்டினால் அப்பகுதி மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர்.

• இரகசிய உடன்பாட்டின் மூலம் துறைமுகத்தையோ, நிலங்களையோ வழங்க வேண்டாம் என்று அரசாங்கத்திடம் கோரியுள்ளோம். முதலில் உடன்பாட்டை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும்.

இந்த உடன்பாடு குறித்து அம்பாந்தோட்டை மக்கள் கவலையடைந்துள்ளனர். தமது நிலங்கள் சீனாவுக்கு வழங்கப்படவுள்ளதையிட்டு, அவர்கள் கோபம் கொண்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார். (இ-7)

# எம்.பி.பதவிக்கே மகிந்த திண்டாட்டம்

## பிரதமர் ரணில் நக்கல்



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதமர் பதவிக்கு ஆசைப்பட்டார். அது கைகூடவில்லை. அதனை யடுத்து நாடாளுமன்ற உறுப்பினரானார் (எம்.பி). அரசாங்கத்தின் அபிவிருத்தி வேகத தினால், அவர் தனது எம்.பி. பதவியையே தக்கவைத்துக் கொள்வதற்குப் போராட்டம் நடத்துகின்றார் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். "பலம்மிக்கதோர் இலங்கை" எனும் தூரநோக்குடைய பொருளாதாரத் திட்டத்தை, அலரிமாளிகையில் வைத்து உத்தியோகபூர்வமாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

அதன பின்னர் இடம்பெற்ற கேள்வி நேரத்தின் போது, ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னதாக கேள்வியெழுப்பிய ஊடகவியலாளர்களில் ஒருவர், அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை, இந்த அரசாங்கம் சீனாவுக்கு விற்பனை செய்வதாக, ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். உண்மையில், ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினர் இவ்வாறு ஏன்? குற்றஞ்சாட்டுகின்றனர் என்று வினவினார்.

இக்கேள்விக்கு பதிலளித்த பிரதமர், அரசியல் வாழ்க்கையைத் தக்க வைத்துக் கொள்வதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பிரதமர் பதவிக்கு ஆசைப்பட்டார். அந்தப் பதவி கிடைக்கவில்லை. அதன்பின்னர், நாடாளுமன்ற உறுப்பினரானார் (எம்.பி).நல்லாட்சி அரசாங்கத்தினால், முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி திட்டத்தில் அள்ளுண்டு போயுள்ள அவர், எம்.பி பதவியையே தக்க வைத்து கொள்வதற்கு 'திண்டாடுகின்றார்.

நாங்கள், விகாரைகளை உடைக்கவில்லை. மக்களின் காணிகளை அபகரிக்கவில்லை. காணிகளை விற்கவில்லை. துறைமுக நகர் திட்டத்தின் ஊடாக விற்பனை செய்யப்பட்ட காணியையும் மீளப்பெற்று, 99 வருட குத்தகைக்கு கொடுத்துள்ளோம். தலதாமாளிகையை நாங்கள் உடைக்கவில்லை. மல்வத்துப் பீடத்தை பிளவுபடுத்துவதற்கு முயலவில்லை. மலவத்து பீத்துக்குள் பிளவை ஏற்படுத்துவதற்கு முயன்றவர்கள், மகாநாயக்க தேரர்களை வணங்கி, கெஞ்சுகின்றனர். மைத்திரிபால சிறிசேனவை, ஜனாதிபதியாக்கியதும், என்னை பிரதமராக்கியதும் வெறுமனே குந்தியருப்பதற்கு அல்ல. நாட்டை கட்டியெழுப்புவதற்கே எங்களுக்கு மக்களாணை கிடைத்தது. அநத ஆணையின் கீழ் இளைஞர்களுக்கு தொழில் வாய்பபுகளை பெற்றுக் கொடுப்போம். அம்பாந்தோட்டை பிரதேச சபையில் இல்லாமற் போனால், ஒன்றிணைந்த எதிர்க்கட்சிக் கான ஒட்சிசன் இல்லாமற் போகும். பொருளாதார மேம்பாட்டுக்கு தீ மூட்ட வேண்டும். அவ்வாறு தீ மூட்டப்பட்ட மையால்தான், இறாலை போல துள்ளுகின்றனர் என்றார். நல்லாட்சி அரசாங்கத்துக்கு சர்வதேச ரீதியில் நல்ல வரவேற்பு உண்டு. உதவிகள் கிடைக்கின்றன. சத்தத்தை போட்டு எமது பயணத்தை எவராலும் தடுத்து நிறுத்தி விடமுடியாது. நாங்கள் முன்னோக்கி நகர்ந்து கொண்டே போவோம்.

எனினும, அபிவி ருத்தியை கண்டு, அச்சம்கொண்டவர்கள் மீண்டும் அதிகாரத்தை பெற்று, கொமிஸ பெற்றுக்கொள்வதற்கே முயற்சிக்கின்றனர். தனியொரு கட்சியினால், அரசாங்கத்தை அமைக்க முடியாது. ஆகையால்தான் நாட்டில் நல்லாட்சி உருவாக்கப்பட்டுள்ளது. நல்லாட்சிக்குள் பிரச்சினைகள் ஏற்பட்டால், கலந்துபேசி அவற்றுக்கு தீரவு காண்போம். அவ்வாறு தான் கடந்தகால பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டது. அரசாங்கத்தை சீரகு லைப்பதற்கு சதித் திட்டம் தீட்டப்படுவதாக கூறப்படுவது எமக்கு பெரிய, பிரச்சினையல்ல. பத்திரிகைகளுக்கு நத்தார் காலத்தில் செய்திகள் இருக்காது. அதனால்தான், இவ்வாறான செய்தி பரப்பிவிடப்பட்டுளளது.

அவரகள் இவ்வாறு சதியென்று பேசுவதற்காக நாங்கள் என்னசெய்வது. எவர்என்ன கூறினாலும் அரசாங்கத்துக்கு ஆபத்து ஏற்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

ஜெ.மரணம் குறித்து

# சி.பி.ஐ.விசாரணை கோரிய சசிகலா புஷ்பா மனு தள்ளுபடி

ஜெயலலிதா மரணம் குறித்து சிபிஐ விசாரணை கோரி எம்.பி. சசிகலா புஷ்பா மற்றும் யுவசக்தி இயக்கம் தாகல் செய்த மனுக்களை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. மேலும் இந்த வழக்கில் மேலும் அழுத்தம் கொடுத்தால் அபராதம் விதிக்கப்படும் என்றும் உச்ச நீதிமன்றம் எச்சரித்துள்ளது.

நீதிபதிகள் பி.சி.கோஷ், நாரிமன் அடங்கிய அம்ர்வு, சட்டப்பிரிவு 32-ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளீர்கள். இந்த மனுவை தள்ளுபடி செய்கிறோம் இதில் மேலும் அழுத்தம் கொடுத்தால் அபராதம் விதிக்கப்படும்" என்றனர்.

சசிகலா புஷ்பா உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில், "முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவுச் செய்தியைக் கேட்டு அதிர்ச்சியில் 280 பேர் உயிரிழந்திருக்கின்றனர். ஜெயலலிதாவுக்கு அளிக்கப்பட்ட சிகிச்சையில் இரகசியம் காக்கப்பட்டதே பல்வேறு கேள்விகளை எழுப்பியிருக்கிறது. தமிழக பொறுப்பு ஆளுநர் கூட ஜெயலலிதாவை பார்க்க அனுமதிக்கப்படவில்லை.

பதவியில் இருந்தபோது ஜெயலலிதா மறைந்தும்கூட அவரது மரணம் குறித்து தமிழக அரசு எவ்வித விசாரணைக்கும் உத்தரவிடவில்லை. ஜெயலலிதா மரணம் குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்" என்று கோரியிருந்தார்.

முன்னதாக இதே கோரிக்கையை வலியுறுத்தி தமிழ்நாடு தெலுங்கு யுவசக்தி அமைப்பும் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தது.

இந்த வழக்குகள் நேற்று வியாழக்கிழமை நீதிபதிகள் பி.சி.கோஷ், நாரிமன் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.

### வாதமும் நீதிபதிகள் கருத்தும்

தமிழ்நாடு தெலுங்கு யுவசக்தி அமைப்பின் சட்டத்தரணி, ஜெயலலிதா மர்மமான முறையில் மறைந்திருக்கிறார். அவரது மரணத்தில் சதி இருப்பதாக பல்வேறு தரப்பிலும் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது. எனவே சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட்டு உச்ச நீதிமன்றம் விசாரணையின் போக்கை மேற்பார்வை செய்ய வேண்டும் என வாதாடினார்.


அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், நாங்கள் எத்தகைய மேற்பார்வை செய்ய வேண்டும் என்று கூறுகிறீர்கள். இதே போன்றதொரு மனு சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. அப்பிடியிருக்கும் போது சட்டப்பிரிவு 32 ஐ மேற்கோள் காட்டி எப்படி நீங்கள் உச்ச நீதிமன்றத்தை நாட முடியும். இந்த மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுகின்றன. இந்த வழக்கில் மேலும் அழுத்தம் கொடுத்தால் அபராதம் விதிக்கப்படும்" என எச்சரித்தனர். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 949

சர்மி சர்மி

உலகத்தை கெடுப்பது
கெட்டவர்கள் மட்டும் அல்ல.
கை கட்டி வேடிக்கை பார்க்கும்
நல்லவர்களும் தான்...

புவனா




தர்சன் தர்சன்




சிந்து




விமல்

"உனக்குத் துரோகம்
செய்தவனைக் கண்டால்
புன்னகை செய்.
உனது பலம் அவனுக்கு
விளங்கும்"




டிலக்ஷி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கடமை நிறைவேற்று அதிபர்களின் சத்தியக்கடதாசி




## வடக்கின் நிர்வாக நீதிக்காக போராடுவதென சபதம் செய்கிறோம்

எம் உயிரினும் மேலான தமிழ் உறவுகளே! இங்கு தரப்படும் சத்தியக்கடதாசி என்பது சாதாரணமானதன்று. இது தர்மத்தின்- நீதியின் வரவுக்கானது. ஐந்தூர் என்ன? ஐந்து வீடும் தரமுடியாது என்று கர்ச்சித்த கௌரவர் சேனைத் தலைவன் துரியோதனன் வலம்புரியின் சங்கநாதம் கேட்டு துணுக்குற்றனராம்.

அட ஐந்து வீட்டையாவது கொடுத்திருக்கலாமோ! என்று அவன் நினைத்ததாக இதிகாசத் திறனாய்வாளர் செப்புவர்.

சங்கொலி ஒலித்த பின்பு ஐந்து வீடு என்ற பேச்சுக்கு ஏது இடம்?

கடமை நிறைவேற்று அதிபர்கள் தங்கள் பதவிகளை தானமாக்கியவர்கள். அவர்களுக்கு இதுவரை மன்று ஏற்பாடு எதுவும் செய்யப்படவில்லை. இது விடயத்தில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எடுத்த நடவடிக்கை என்ன என்பதும் இதுவரை தெரியவில்லை. பரவாயில்லை. மா புளிப்பது அப்பத்துக்கு நல்லது. ஆனால் கடமை நிறைவேற்று அதிபர்கள் வட புலத்தில் நிர்வாக நீதியை ஏற்படுத்துவது என்று முடிவு செய்து விட்டார்கள்.

அதற்கான ஏற்பாடுகளும் ஒழுங்கமைப்புகளும் நடந்து வருகின்றன.

எனினும் அறப்போராயினும் அதைத் தடுப்பதற்கும் தவிர்ப்பதற்கும் சந்தர்ப்பம் கொடுத்தாக வேண்டும். அந்த சந்தர்ப்பமாக இந்தச் சத்தியக் கடதாசியைக் கருதுங்கள் என்பதே எங்கள் தாழ்மையான வேண்டுகோள்.

எங்கள் மரியாதைக்குரிய ஆசிரியர் தொழிற்சங்கம் தவிர்ந்த வடமாகாணத்து தொழிற்சங்கங்களே! அகில இலங்கை தொழிற்சங்கப் பிரதிநிதிகளே! உங்களிடம் ஒரு விண்ணப்பம். இலங்கையின் எந்த மாகாணத்திலும் நடக்காத ஒரு காரியம் வடக்கில்- கடமை நிறைவேற்று அதிபர்கள் விடயத்தில் நடந்துவிட்டது.

இதன் பின்னணியில் பேரினவாதத்தின் ஊடுருவல் உள்ளது என்பதற்கு வலுவான ஆதாரங்கள் உள்ளன. அந்த ஆதாரங்களை நாம் விரைவில் அம்பலப்படுத்துவோம்.

அதுவரை இங்கிருக்கக் கூடிய ஒரு சிலர் தங்கள் கருத்துக்களை அமைதியாக்கி வைத்திருப்பது நல்லது என்று கருதுகிறோம்.

கடமை நிறைவேற்று அதிபர்கள் விடயத்தினூடாக இங்கு உள்நுழைந்த பேரினவாதக் கூலியாட்கள் வடக்கின் கல்வியைப் பாழாக்குவதும் வடக்கு மாகாண சபையைக் குழப்புவதையும் நோக்கமாகக் கொண்டனர். அதை அவர்கள் சாதிக்க விடுவோமாயின் எங்கள் எதிர்காலம் மிக மோசமாகிவிடும்.

ஆகையால் எங்கள் வட மாகாணத்தின் நிர்வாகத் துறையில் நீதியை ஏற்படுத்த, செல்வாக்குக் கலாசாரத்தை அடியோடு வேரறுக்க நாம் முடிவு செய்து விட்டோம்.

அன்புக்குரிய புதிய அதிபர்களே! உங்கள் மீது எமக்கு எந்தக் காழ்ப்புணர்ச்சியும் கிடையாது. சித்தியடைந்த நீங்கள் பாடசாலை தாருங்கள் என்று கேட்பது உங்கள் உரிமை. எனினும் உங்களில் பெரும்பாலானவர்கள் பிரதி, உதவி அதிபர் பதவிகளையே கோரி நின்றனர். நிர்வாக அனுபவத்தைக் பெறுவதற்கு உங்கள் கோரிக்கை சரியானது.

ஆனால் உங்களில் இருக்கக்கூடிய ஒரு சிலரே குழப்பம் விளைவித்தனர். எங்களுக்கு அதிபர் பதவி தாருங்கள் என்று கேட்பதற்கு மாறாக கடமை நிறைவேற்று அதிபர்களைத் தூக்குங்கள் என்று கேட்டனர்.

சித்தியடைந்த எங்களுக்கு அதிபர் பதவி தர வேண்டும் எனக் கேட்பது நீதியானது. ஆனால் கடமை நிறைவேற்று அதிபர்களை நீக்குங்கள் என்று கேட்பது நீதியானதா? என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் மனச்சாட்சியைத் தொட்டுக் கேட்கட்டும்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலினின் உள்நோக்கம் அறியாமல் அவரோடு சேர்ந்து போராட்டம் நடத்த ஏற்கனவே திட்டமிடப்பட்டது. இதற்கு உயர் அதிகாரிகள் சிலரும் கடுமையாக ஒத்துழைத்து கடமை நிறைவேற்று அதிபர்களை பணி விலக்கல் செய்தனர்.

பரவாயில்லை. இந்தப் பணி நீக்கம் உங்களுக்குத் திருப்தியைத் தரும் என்று நம்பலாம். ஆனால் அதிபர் பதவி சாதாரணமானதல்ல என்பதை நீங்கள் அனுபவ ரீதியில் உணருவீர்கள். உதவி பிரதி அதிபர்களாக இருந்து நிர்வாகக் கட்டமைப்பின் அனுபவத்தைப் பெறாத கஷ்டங்களை நீங்கள் உணரவேண்டிய ஒரு சூழ்நிலையும் வரப்போகிறது.

இதற்கு மேலாக புதிய அதிபர் நியமனத்தில் நீதி கடைப்பிடிக்கப்பட்டதா? என்பதை ஒருக்கால் திரும்பிப் பாருங்கள்.

இப்போது உங்களோடு இருந்தவர்கள் உங்களுக்காகக் குரல் கொடுப்பது போல காட்டியவர்கள் எப்படியான பாடசாலைகளை தமக்காக்கினர் என்பதையும் உங்களை எங்கெல்லாம் துரத்தினர் என்பதையும் கண்டறிவீர்கள்.

புதிய அதிபர் நியமனம் என்றால் அதற்கான நியமன நியமங்கள் என்ன? அதிபர் தரம் III போட்டிப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் பார்க்கப்பட்டதா?, ஆசிரிய சேவைக்காலம் கணிக்கப்பட்டதா? அவர்கள் பெற்றிருந்த கல்வி மற்றும் தொழில் தகைமைகள் பரிசீலிக்கப்பட்டனவா? இப்படியான கேள்விகள் எழுந்தால் புதிய அதிபர் நியமனத்தில் செல்வாக்கின் பேரால் அநீதி கடுமையாக இழைக்கப்பட்டுள்ளது என்பது தெரியவரும்.

எனினும் இத்றகாக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் ஒரு போதும் குரல் கொடுக்கப்போவதில்லை.

ஆக புதிய அதிபர் நியமனத்தில் அநீதி இழைக்கப்பட்டதாக மன உளைச்சல்படும் புதிய அதிபர்களே நாம் முன்னெடுக்கும் தர்ம யுத்தத்தில் உங்களுக்கும் நீதி கிடைக்கும்.

ஆகையால் கடமை நிறைவேற்று அதிபர்கள் ஊர் ஊராக வருவார்கள். வடக்கு மாகாண சபையை தொடர்ச்சியாக முடக்குவது என்ற எங்களின் போராட்டத்திற்கு உங்களின் ஆதரவைக் கோருவோம்

தொடர் உண்ணாவிரதப் போராட்டம் ஒருபுறம்; ஆர்ப்பாட்டப் பேரணி மறுபுறம் என்பதாக தர்மத்தின்- நீதியின் பேரால் போராட்டங்கள் நடக்கும்.

இவற்றையெல்லாம் முன்கூட்டியே இச் சத்தியக் கடதாசி மூலம் அனைவருக்கும் . தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.

இச்சத்தியக் கடதாசியை யாரேனும் குறு குறுப்பின் எதிரொலி என்று நினைத்தால் அதற்காக நாம் வருந்துவோம்.

ஆனால் முடிவு என்னவாகும் என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

(திங்கள் தொடரும்)

**புரந்தரன்**

# இலங்கையின் மீது தீராத பிரியம் வெளிநாட்டுப் பிரஜை கௌரவிப்பு



ஒவ்வொரு வருடமும் இலங்கைக்கு சுற்றுலா பயணம் மேற்கொள்ளும் சுற்றுலாப் பயணி ஒருவர் நேற்றுக் காலை 50 ஆவது முறையாக இலங்கைக்கு வருகை தந்துள்ளார்.

72 வயதுடைய சென்டர் ஜேசன் என்ற சுற்றுலா பயணியே இவ்வாறு இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

டென்மார்க் நாட்டை சேர்ந்த இவருக்கு இலங்கை நாட்டின் மீது அதிக பிரியம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக இலங்கைக்கு அடிக்கடி விஜயம் மேற்கொள்கிறார்.

1974 ஆம் ஆண்டு முதல் முறையாக சென்டர் இலங்கை வருகை தந்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து 1977 ஆம் ஆண்டில் இருந்து வருடத்திற்கு இரண்டு முறை இலங்கைக்கு வருகை தந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

சென்டர் என்பவர் டென்மார்க்கின் பிரேட் போ மாகாணத்தில் கணக்காளராக அரசாங்க சேவையில் ஈடுபட்டு ஓய்வுபெற்ற ஒருவராவார்.

அவர் இலங்கையில் உள்ள அழகு காரணமாக இவ்வாறு வருடத்திற்கு ஒருமுறை இலங்கைக்கு பயணம் மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை குறித்த சுற்றுலாப் பயணிக்கு விமான நிலையத்தில் வைத்து நேற்று மாலையிட்டு கௌரவிக்கப்பட்டது. (இ-7)

## 2 மணித்தியாலங்களுக்கு அழைக்க வேண்டாமாம் பொலிஸாரின் கோரிக்கை

பொலிஸ் அவசர தொடர்பாடல் தொலைபேசி எண் (119) இரண்டு மணித்தியாலங்களுக்கு செயற்படாது என பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி அதிகாலை 4 மணிமுதல் 6 மணிவரை செயற்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பராமரிப்பு பணி காரணமாகவே இவ்வாறு இரண்டு மணித்தியாலங்களுக்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவசரத் தொலைத் தொடர்பு வசதி சேவையின் குறைபாடுகளை சீர்படுத்துவதற்காகவே இந்தத் திட்டம முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவசரத் தொலைத் தொடர்பு வசதி சேவையின் குறைபாடுகள் சீர்படுத்தப்படவுள்ளமையினால் இரண்டு மணித்தியாலங்களுக்கு அழைப்பினை மேற்கொள்ள வேண்டாம் என பொலிஸார், பொது மக்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-7)

## உயர்தரப் பெறுபேறுகளுடன் பல்கலைக்கழக அனுமதிக்கான கையேடும் வெளியிடப்படும்

(கொழும்பு)

இம்முறை பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான கையேட்டை, கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுடன் வெளியிட எதிர்பார்த்துள்ளதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த நுழைவுக் கையேட்டை அச்சிடுவதற்காக தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக குழுவின் தலைவர் மொஹான் டி சில்வா தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிக்கும் நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்வதே இதன் நோக்கம் என தெரியவந்துள்ளது. (இ-7)

## இலங்கை மீனவர்கள் மூவர் இந்தியாவில் கைதாகினர் மறியலில் வைக்க உத்தரவு

இந்திய கடல் எல்லைக்குள் வைத்து கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் மூன்று பேருக்கு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் நேற்று இராமநாதபுரம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறித்த செய்தியை த ஹிந்து நாளிதழ் வெளியிட்டுள்ளது.

இதற்கமைய அவர்களை எதிர்வரும் 18ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு இராமநாதபுரம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வரட்சியால் அழிந்த வயல்கள்



(கரணவாய்)

வடமராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விவசாயிகளின் நெல் வயல்கள் மழை இல்லாததால் வரட்சியினால் அழிவடைந்துள்ளன.

கப்பூது, கிராய், புறாப் பொறுக்கி, ஆலடி, கரணவாய் மேற்கு,கரணவாய், உடுப்பிட்டி, காவல், உச்சில் போன்ற கிராமங்களில் உள்ள வயல் நிலங்கள் அழிவடைந்துள்ளன.

கால்நடைகளும் கட்டாமல் விடுவதனால் நெற் பயிர்களை மேய்ந்து வருகின்றன.

இதனால் விவசாயிகளுக்கு பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும். இதனை விவசாய திணைக்களங்களும் கிராமிய விவசாய குழுக்களும் அழிவடைந்த விவசாய நிலங்களை பார்வையிட வேண்டும்.

விவசாயிகள் இலட்சக் கணக்கானபணத்தினைசெலவு செய்துள்ளார்கள். அவர்களுடைய வாழ்வாதார நிலை மிகவும்பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் மிகவும் கண்ணீர் மல்க கூறியுள்ளனர். (இ-60)

# சிறைக் கைதிகள் மனிதாபிமான அடிப்படையில் நடத்தப்படவேண்டும் - போப்பாண்டவர் வலியுறுத்து



சிறைக் கைதிகள் மனிதாபிமான அடிப்படையில் நடத்தப்பட வேண்டுமென போப்பாண்டவர் முதலாம் பிரான்ஸிஸ் தெரிவித்துள்ளார்.

பிரேஸிலில் அண்மையில் இடம்பெற்ற சிறைச்சாலை வன்முறைகளில் சுமார் 60 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

போதைப் பொருள் குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளே இவ்வாறு மோதிக் கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. பிரேஸில் சிறையில் இடம்பெற்ற சம்பவம் வருத்தமும் கவலையும் அளிக்கும் வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ள போப்பாண்டவர் உயிரிழந்தவர்களுக்காகவும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்காகவும் மன்றாடுவதாகத் தெரிவித்துள்ளார். (இ-7)



அரங்க செயற்பாட்டுக் குழுவின் "குடும்பத் தலைவன்" விழிப்புணர்வு தெருவெளி அரங்க ஆற்றுகை புங்குடுதீவில் அண்மையில் இடம்பெற்ற போது...



நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற கலாசார பெருவிழாவின் போது யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் கலைஞர்கள் கௌரவிக்கப்படுவதனையும் நிகழ்ச்சிகள் நடைபெறுவதனையும் படங்களில் காணலாம்.

# நிலவாடகை பிரச்சினை முடிபு

நெல்லியடி சந்தையில் நிலவாடகை தொடர்பாக நிலவி வந்த பிரச்சினை நேற்று முன்தினம் புதன்கிழமை மாலையுடன் முடிபுக்கு கொண்டு வரப்பட்டது.

இப் பிரச்சினை ஏற்பட்டதைத் தொடர்ந்து கரவெட்டி பிரதேச சபை செயலாளரின் கோரிக்கையினையும்வியாபாரிகள் நிராகரித்திருந்தனர்.

23.01.2016 அன்று நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் இரு தரப்பினரையும் சமரசம் செய்ய முயன்ற போதிலும் வாழ்வாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு அதிகரித்த வரியினை வழங்க முடியாது என வியாபாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து இவ் விடயம் நீதிமன்றுக்குச் செல்லவுள்ள நிலையில் நெல்லியடிப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆர்.பி.ஏ.பிரியந்த குத்தகைக் காரர், வியாபாரிகளுடன்நேற்று முன்தினம் மாலை சமரசப் பேச்சுக்களில் ஈடுபட்டார்.

இதனடிப்படையில் ஒரு சதுர அடிக்கான நில வாடகையாக 75 ரூபாவினை வழங்குவதற்கு சந்தை வியாபாரிகள் இணங்கினர்.

நெல்லியடிப் பொலிஸ் பொறுப்பதிகாரி தலையிட்டு இவ் விடயத்தை தீர்த்து வைத்ததையடுத்து வியாபாரிகள் வெடி கொளுத்தி தமது மகிழ்ச்சியினை வெளிப்படுத்தியிருந்தனர்.(இ-60)




# தவளை இளவரசன்

..இந்த சொறித்தவளையால் அந்தப் பந்தை எடுத்து வரமுடியாது என்று நினைத்தாள் இளவரசி. அதனால் முன்பு சொன்னதையே சொன்னாள்.

"என் தங்கப் பந்தை எடுத்துக் கொடுத்துவிடு. எனக்குச் சொந்தமான அனைத்தையும் உனக்குத் தருகிறேன்," என்றாள் இளவரசி.

"எனக்கு அதெல்லாம் வேண்டாம் நான் கேட்பதைச் செய்வதாகச் சொன்னால் எடுத்துத் தருவேன்,"என்றது தவளை.


"சரி, என்ன வேண்டுமானாலும் கேள். நீ எனக்கு உதவினால் நான் உனக்கு உதவுவேன்," என்றாள் இளவரசி.

"நான் கேட்பது இதுதான். நீ என்னை நேசிக்க வேண்டும். நான் உன்னுடன் இருக்கச் சம்மதிக்க வேண்டும்.

நீ சாப்பிடும் தங்கத் தட்டில் நானும் சாப்பிட அனுமதிக்க வேண்டும். உன்னுடைய படுக்கையில் நான் படுத்துத் தூங்க அனுமதிக்க வேண்டும். இதையெல்லாம் நீ செய்ய ஒத்துக் கொண்டால் நான் உன் பந்தை எடுத்துத் தருவேன் என்றது தவளை.

"என்ன திமிர் இந்தச் சொறித் தவளைக்கு! குளத்தை விட்டு வெளியே வரமுடியாத தவளையின் பேராசையைப் பார்! முதலில் பந்தை எடுத்துத் தருகிறதா பார்ப்போம். இந்தத் தவளை கேட்கும் வாக்குறுதியை தருவதாகச் சொன்னால் போச்சு," என்று மனதில் இளவரசி நினைத்தாள்.

"நீ. மட்டும் என் பந்தை எடுத்துக் கொடுத்துவிடுநீ கேட்டதையெல்லாம் நான் செய்வேன்," என்றாள் இளவரசி.



"வாக்குத் தவறக்கூடாது இளவரசியாரே.சொன்னபடி நடக்க வேண்டும், சரியா?" என்றது தவளை.

"வாக்குத் தவறமாட்டேன். சொன்னபடி நடந்துகொள்வேன், நீ என் பந்தை முதலில் எடுத்து வா," என்றாள் இளவரசி.

தவளை தண்ணீருக்குள் "தொப்" என்ற சத்தம் கிளம்ப உள்ளே போனது. குளத்தின் அடி ஆழம் சென்று தேடி தங்கப் பந்தைக் கண்டுபிடித்தது. அதை மேலே எடுத்து வந்து குளக்கரையில் போட்டது,தவளை.

அவ்வளவுதான், ஓடிப்போய் இளவரசி பந்தை எடுத்துக்கொண்டு அங்கிருந்து கிளம்பினாள்.

தவளையைப் பற்றிய கவலை இல்லாமல் அரண்மனையை நோக்கிப் போனாள்.

அவள் ஒரு நன்றி கூட சொல்லாமல் போவதைப் பார்த்த தவளைக்கு மிகவும் வருத்தமாகி விட்டது.

"இளவரசியாரே, நில்லுங்கள். நீங்கள் சொன்னபடி நடந்து கொள்ள வேண்டும். என்னை உங்களோடு எடுத்துச் செல்லுங்கள். நில்லுங்கள், இளவரசி..." என்று தவளை கத்தியது.

ஆனால், இளவரசி எதுவும் காதில் விழாதது போல வேகமாக நடந்து போய்விட்டாள்.

அன்று இரவு.....

இளவரசி, அரசர், அரசியாரோடு உணவு உண்ணும் நேரம். இளவரசி ஒரு வினோதமான சத்தத்தைக் கேட்டாள். "தப்..தப்..சப்...சப்..." அந்த சத்தம் பளிங்கு கல் மாடிப்படிக்கட்டில் இருந்து வந்து சாப்பாட்டுக் கூடக் கதவு வரை வந்து நின்றுவிட்டது. மெல்லக் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

"என் அருமை இளவரசியே, கதவைத் திறவாய், உன் அருமை தவளை இங்கே! கதவைத் திறந்து பார், உன்னை நேசிக்கும் ஓர் உயிர் உனக்காக காத்திருக்கிறது!

சொன்ன வாக்கு தவறுதல் அழகா? குளக்கரையில் நீ சொன்ன வாக்கு தவறாமல் காப்பாற்ற வேண்டாமா?" - என்று இனிமையாகப் பாடியது அந்தக் குரல்.

இளவரசி வேகமாகப் போய் கதவைத் திறந்து பார்த்தாள். அங்கே தவளை காட்சியளித்தது.

தவளையை இளவரசி அங்கே எதிர்பார்க்கவில்லை.

"வாக்கு கொடுத்தபடி நடவாமல் ஏமாற்றிவிட்டு வந்தது சரியா? தவளை கேட்டது.

தவளைக்கு பதில் சொல்லாமல், வேகமாக கதவைச் சாத்திவிட்டு சாப்பாட்டு மேசைக்கு திரும்பினாள் இளவரசி.

இளவரசியின் கலவரமான முகத்தை அரசர் கவனித்தார். எதைக் கண்டோ மகள் பயந்து வந்தது போல் இருந்தது அவருக்கு.

"என்னம்மா? என்ன விசயம்? எதையோ கண்டு பயந்து விட்டாயா?"என்றார் அரசர்.

(தொடரும்...)

## 01.2017 06 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1066 - இங்கிலாந்தின் மன்னனாக ஹாரல்ட் கோட்வின்சன் முடிசூடிக் கொண்டான்.
- 1690 - முதலாம் லெப்பல்ட் மன்னனின் மகன் ஜோசப் ரோமின் மன்னன் ஆனான்.
- 1838 - சாமுவேல் மோர்ஸ் மின்னியல் தொலைத் தந்தியை முதன் முறையாக வெற்றிகரமாக சோதித்தார்.
- 1887 - எதியோப்பியாவின் ஹரார் நகர மன்னன் இரண்டாம் அப்-தல்லா எதியோப்பியாவின் இரண்டாம் மெனெலிக் மீது போர் தொடுத்தான்.
- 1899 - இந்தியாவின் வைசிராயாக கேர்சோன் பிரபு நியமிக்கப்பட்டார்.
- 1900 - போவர்கள் தென்னாபிரிக்காவின் லேடிஸ்மித் நகரைத் தாக்கினர். 1,000 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.
- 1907 - மரியா மாண்ட்டிசோரி தனது முதலாவது பாடசாலையை தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக ரோமில் ஆரம்பித்தார்.
- 1912 - நியூ மெக்சிக்கோ 47வது மாநிலமாக ஐக்கிய அமெரிக்காவுடன் இணைந்தது.
- 1928 - தேம்ஸ் ஆறு லண்டனில் பெருக்கெடுத்ததில் 14 பேர் கொல்லப்பட்டனர்.
- 1929 - அன்னை தெரேசா இந்தியாவின் வறிய மற்றும் நோயுற்றவர்களுக்கு சேவை செய்வதற்காக கல்கத்தாவைச் சென்றடைந்தார்.
- 1936 - கலாஷேத்திரா சென்னை அடையாறில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1940 - போலாந்தின் பொஸ்னான் நகரில் நாசி ஜேர்மனியினரால் பலர் கொல்லப்பட்டனர்.
- 1950 - ஐக்கிய இராச்சியம் மக்கள் சீன குடியரசை அங்கீகரித்தது.
- 1959 - பிடெல் காஸ்ட்ரோ கவானாவை அடைந்தார்.
- 2007 - கொழும்பிலிருந்து 36கி.மீ தொலைவில் நித்தம்புவ என்ற இடத்தில் இடம்பெற்ற பேருந்துக் குண்டுவெடிப்பில் 6 பொதுமக்கள் கொல்லப்பட்டும் 50 பேர் வரை காயமும் அடைந்தனர்.
- 2007 - இந்தியாவில் அஸ்ஸாம் மாநிலத்தில் பிற மாநிலத்தவரைக் குறிவைத்து உல்ஃபா தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 55 பேர் கொல்லப்பட்டனர்.
- 2007 - இலங்கை, காலிமாவட்டம்மீட்டியகொடசீனிகம பகுதியில் இடம்பெற்ற பேருந்துக் குண்டு வெடிப்பில் 15 பொதுமக்கள் வரையில் கொல்லப்பட்டும் 40 பேர் வரை படுகாயமும் அடைந்தனர்.

பிறப்புகள்

- 1883 - கலீல் ஜிப்ரான், எழுத்தாளர் . (இ. 1931)
- 1899 - சேர் சிற்றம்பலம் கார்டினர், இலங்கைத் தொழிலதிபர். (இ. 1960)
- 1910 - ஜி. என். பாலசுப்பிரமணியம், கருநாடக இசைக் கலைஞர் . (இ. 1965)
- 1924 - கிம் டாய் ஜுங், தென்கொரியக் குடியரசுத் தலைவர், நோபல் பரிசு பெற்றவர் .(இ. 2009)
- 1944 - ரோல்ஃப் சிங்கேர்னாகல், நோபல் பரிசு பெற்றவர்.
- 1959 - கபில் தேவ், இந்தியத் துடுப்பாட்டக்காரர்.
- 1966 - ஏ. ஆர். ரஹ்மான் இந்திய திரைப்பட இசையமைப்பாளர்.
- 1982 - கில்பர்ட் அரீனஸ், அமெரிக்கக் கூடைப்பந்து வீரர்.

இறப்புகள்

- 1852 - லூயி பிரெயில், பார்வையற்றவர்களுக்கான எழுத்தினை உருவாக்கியவர் . (பி. 1809)
- 1884 - கிரிகோர் ஜோஹன் மெண்டல் ஆஸ்திரியப் பாதிரி, மரபியல் அறிவியலின் தந்தை. (பி.1822)
- 1918 - கேன்ட்டர், ஜெர்மன் கணிதவியலாளர். (1845)
- 1919 - தியொடோர் ரோசவெல்ட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க ஜனாதிபதி. (பி. 1858)
- 1990 - பாவெல் செரென்கோவ், நோபல் பரிசு பெற்ற இரசியர் . (பி. 1904)
- 1997 - பிரமீள், ஈழத் தமிழ் எழுத்தாளர்.
- 2010 - திருவேங்கடம் வேலுப்பிள்ளை - விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தை.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 | 30 | 30 | 40 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 90 | 100 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 140 | 200 | 120 | 200 | 180 |
| தக்காளி | 180 | 160 | 130 | 160 | 160 | 200 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 60 | 70 | 60 | 60 |
| கோவா | 20 | 60 | 20 | 20 | 30 | 60 | 30 |
| கரட் | 80 | 60 | 80 | 80-120 | 90 | 120 | 80 |
| பூசணி | 60 | 60 | 35 | 60 | 50 | 60 | 50 |
| புடோல் | 70 | 80 | 80 | 80 | 60 | 80 | 70 |
| வாழைக்காய் | 40 | 60 | 40 | 50 | 40 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 80 | 100 | 80 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 80 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 300 | 400 | 200 | 280 | 280 | 300 | 250 |
| வெண்டிக்காய் | 80 | 120 | 70 | 160 | 80 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 50 | 100 | 50 | 50 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 160 | 160 | 120 | 200 | 120 | 120 | 200 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 70-100 | 90 | 120 | 100 |
| பீற்றூட் | 60 | 100 | 40 | 80 | 60 | 100 | 70 |
| கறிமிளகாய் | 150 | 200 | 180 | 240 | 170 | 240 | 140 |
| முருங்கைக்காய் | 350 | — | 300 | — | 450 | 400 | — |
| போஞ்சி | 180 | 100 | 60 | 90 | 100 | 120 | 100 |
| கத்தரிதம்பள்ள | 30 | 20 | 10 | 20 | — | 30 | 30 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 30 | 30 | 30 | 40 | 20 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 250 | 300 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 20-60 | 50 | 35 | 50-60 | 50 |
| இராசவள்ளி | 250 | 200 | 150 | 250 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 250 | 200 | — | 200 | 240 | 280 | 200 |
| முள்ளங்கி | 60 | 100 | 40 | 40 | 60 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 80 | 15 | 30 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 15 | 20 | 15 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 60 | 50 | 60 | 60 | 100 | 60 |

கீழ்த்தரமான சிந்தனைகளை எந்தச் சூழ்நிலையிலும் நினைக்க வேண்டாம்.

- கொன்சீசிஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# படைத்தவனே பறித்துக் கொண்டான் தந்தவனே எடுத்துக் கொண்டான்

படைத்தவனே பறித்துக்கொண்டான். தந்தவனே எடுத்துக் கொண்டான் என்ற பாடல் வரிகள்தான், எங்கள் அரசாங்கத்தை நினைக்கும் போது ஞாபகத்திற்கு வரும்.

சர்வதேச சமூகத்தை தாக்காட்டும் பொருட்டு விசாரணை ஆணைக்குழுக்கள், செயலணிகள் என்பவற்றை அமைப்பது, பின்னர் அந்த குழுக்கள் சமர்ப்பிக்கும் அறிக்கைகளை அப்படியே கிடப்பில் போடுவது அல்லது நிராகரிப்பது என்பன வழமையான செயற்பாடுகள் தான்.

இந்த வகையில் நல்லிணக்கம் தொடர்பான மக்கள் கருத்தறியும் செயலணி ஒன்று நாடு பூராகவும் சென்று மக்களின் கருத்துக்களை கேட்டறிந்தது.

இவ்வாறு கேட்டறிந்த கருத்துக்களின் அடிப்படையில், போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கும் பொறிமுறையில் கலப்பு நீதிமன்றம் ஒன்று அமைக்கப்படுவது அவசியம் என்றும்,

இதில் உள்நாட்டு நீதிபதிகளுடன் சர்வதேச நீதிபதிகளும் இடம் பெறுவது கட்டாயம் ஆகும் என்றும் தனது பரிந்துரையை அரசுக்கு முன்மொழிந்திருந்தது. எனினும் இப் பரிந்துரையை அரசாங்கம் நிராகரிப்பதாக இப்போது அறிவித்துள்ளது.

மக்களின் கருத்தறியும் செயலணியை உருவாக்கிய அரசாங்கம் அச்செயலணியின் பரிந்துரைகளை அடியோடு நிராகரிக்கிறது எனில், தான் விரும்பாத பரிந்துரைகளை செயலணி முன்வைத்துள்ளது என்பதே பொருளாகும்.

அப்படியானால், மக்களின் கருத்துக்களை கேட்டறிந்தாலும் எந்தப்பரிந்துரை அரசுக்கு பிடிக்குமோ! அதனைப் பரிந்துரை செய்தால் மட்டுமே அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்பது உறுதியாயிற்று.

ஆக, ஆணைக்குழுக்கள், செயலணிகள் என அரசாங்கத்தால் நியமிக்கப்படும் குழுக்கள் உலக நாடுகளை சமாளிப்பதற்கானதே அன்றி வேறில்லை என்பது உணர்தற்குரியது.

இது ஒருபுறம் இருக்க, 2016 ஆம் ஆண்டின் இறுதிக்குள் தீர்வு கிடைக்கும் என்று உறுதிமொழி தந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தனது உறுதிமொழியை தளர்த்தி அடுத்த தீபாவளிக்குள் தீர்வு என்றார்.

சரி, அடுத்த தீபாவளிக்கு ஒரு வருடந்தானே இருக்கிறது. ஒரு பெரும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக ஒருவருட காலத்தை அவகாசமாக கொடுப்பதில் அதிக கஷ்டம் இருக்காது என்று விட்டால்,

2017ஆம் ஆண்டின் முற்பகுதியிலேயே கலப்பு நீதிமன்றமும் சர்வதேச நீதிபதிகளின் பங்கேற்பும் அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளன.

மக்கள் கருத்தறியும் செயலணியை உருவாக்கி அந்த செயலணி மக்களின் கருத்துக்களை கேட்டறிந்து அதிலிருந்து சில பரிந்துரைகளை கூறும் போது, அதனை இருகரங்கூப்பி ஏற்று அமுல்படுத்துவதே நல்லாட்சிக்கு அழகு.

இதைவிடுத்து கலப்பு நீதிமன்றம், சர்வதேச நீதிபதிகளின் பங்கேற்பு என்பவற்றை அடியோடு நிராகரிப்பது என்றால்; போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது மகா மடமைத்தனம் என்றாகிவிடும்.

ஆக, தமிழ் மக்களின் உரிமைக்காக போராடிய விடுதலைப்புலிகள் இல்லாத போது தமிழ் மக்களுக்கான உரிமையை இலங்கையின் எந்த ஆட்சியாளர்களும் தரமாட்டார்கள் என்பதே உண்மை.

இந்த உண்மை ஒவ்வொரு வடிவங்களில் ஒவ்வொரு கோலங்களில் வெளிவருகின்றது என்பதே யதார்த்தம்.

இருந்தும் எங்கள் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை, தமிழ் மக்களிற்கு உரிமை கிடைக்கும் என நம்புகிறது.

என்ன செய்வது? அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தில் சிறுபான்மைத் தமிழ் மக்களின் உரிமைகள், அதிகாரங்கள் உறுதி செய்யப்படவில்லை. இதே போல் போர்க்குற்ற விசாரணையில் சர்வதேச நீதிபதிகளின் பங்கேற்புக்கும் இடமில்லை என்றபோது தமிழன் இழந்ததைத் தவிர அவனுக்கு வேறு எதுவும் கிடைக்காது என்பது சர்வ நிச்சயமாகிறது.

இதை எங்கும் எவ்விடத்திலும் சத்தியம் செய்ய நாம் தயார்.

# ஐ.தே.கவை எதிர்த்து உறுதியாக நிற்குமாறு சு.கவினருக்கு ஜனாதிபதி மைத்திரி பணிப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த இராஜாங்க அமைச்சர்களையும் பிரதியமைச்சர்களையும் அரசாங்கத்தைக் கொண்டு நடத்தும் ஐக்கிய தேசியக் கட்சியால் மேற்கொள்ளப்படும் அநீதங்களுக்கு எதிராக உறுதியாக இருக்குமாறு ஜனாதிபதி பணித்துள்ளதாகத் தெரிய வருகிறது. மீன்பிடித்துறை அமைச்சர் அமரவீரவின் வீட்டில், கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற இராப் போசனத்தில், அமைச்சர்கள் கலந்துகொண்டனர். இதில், ஜனாதிபதியும் சிறிது நேரம் கலந்து கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. உள்ளூ ராட்சி மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சராக இருந்த பிரியங்கர ஜயரத்ன, தனது துறையைச் சேர்ந்த ஐ.தே.க. உறுப்பினரகளுடன் இணைந்து பணியாற்ற முடியாது எனத் தெரிவித்து, தனது பதவியிலிருந்து விலகிய பின்னணியிலேயே இந்தச் சந்திப்பு இடம் பெற்றிருந்தது. இந்தச் சந்திப்புத் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் அமரவீர, தற்போதைய பிரச்சினைகள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவித்தார்.

"எங்களது உறுப்பினர்களுக்கு, ஐ.தே.கவால் உருவாக்கப்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக நாம் கலந்துரையாடினோம். உறுதியாக இருக்குமாறு, ஜனாதிபதி எங்களைக் கேட்டுக் கொண்டார் என்று அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து, மேலதிகமாக அமைச்சர்கள், பதவி விலக மாட்டார்கள் என்று தெரிவித்த அமைச்சர் அமரவீர, தேசிய அரசாங்கம், தொடர்ந்தும் முன் செல்லுமெனவும் தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகவும் ஏற்கனவே கூறப்பட்டதன்படி அமைச்சர்கள் பலர் ஒன்றாகப் பதவி விலகினால் ஏற்படக்கூடிய அரசியல் நெருக்கடியைக் கருத்திற்கொண்டுமே, யாழ்ப்பாணத்துக்கு செல்லவிருந்த ஜனாதிபதி, அப்பயணத்தை இரத்துச் செய்தார் என, அரசியல் வட்டாரத்தகவல்கள்மூலம்முன்னதாகத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பரிசுக் கதைகள் தொகுதி 03 இற்கான அறிமுகமும் கலந்துரையாடலும் நாளை

திருமறைக் கலாமன்றத்தின் இலக்கிய அவையும் யாழ். இலக்கியக் குவியமும் இணைந்து நடத்தும் தகவம் - தமிழ்க் கதைஞர் வட்டத்தின் பரிசுக் கதைகள் - தொகுதி – 03 இற்கான அறிமுகமும் கலந்துரையாடலும் நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இல.128, டேவிற் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது அழகியல் கல்லூரியில் நடைபெறும்.

எழுத்தாளர் ஐ.சாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையை திருமறைக் கலாமன்ற இலக்கிய அவைப் பொறுப்பாளர் கி. செல்மர் எமிலும், தகவம் தமிழ்க் கதைஞர் வட்டம் தொடர்பான அறிமுக உரையை வட்டத்தின் செயலாளர் திருமதி. வசந்தி தயாபரனும், பரிசுக் கதைகள் தொகுதி 03 தொடர்பான அறிமுக உரையை யாழ் பல்கலைக்கழக சமூகவியல் துறை விரிவுரையாளர் இ. இராஜேஸ் கண்ணனும் வழங்குவார்கள்.

தொடர்ந்து 'சமகால இலக்கியச் செயற்பாடுகள்' தொடர்பாக கவிஞர் கருணாகரன் உரையாற்றுவார். அதனைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறும்.

நன்றியுரையை யாழ். இலக்கியக் குவிய அமைப்பாளர் வேலணையூர் தாஸ் வழங்குவார்.

இந் நிகழ்வில் கலை இலக்கியப் படைப்பாளிகள், ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.(இ)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வெள்ளிக்கிழமை மன்னார் பிரதேசத்தில் பள்ளிமுனையிலும் மின் தடைப்படும். (இ-9)



# இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

## நமக்கும் கீழே உள்ளவர் கோடி

❖ தன்னுடைய வரவுக்குத் தக்கபடி செலவு செய்பவனும், எல்லாச் செயல்களிலும் நடுநிலையை கைக்கொள்பவனும் நிச்சயம் ஏழ்மை அடைய மாட்டான்.

❖ தங்கமும் பட்டாடையும் எனது உம்மத்தினரில் (பின்பற்றுவோர்) ஆண்களுக்கு விலக்கப்பட்டும் பெண்களுக்கு அனுமதிக்கப்பட்டும் உள்ளது.

❖ உங்களை விட கீழ் நிலைமையில் உள்ளவர்களைப் பாருங்கள். உங்களுக்கு மேலான நிலையில் உள்ளவர்களைப் பார்க்காதீர்கள்! அதுவே அல்லாஹ்வின் அருட்கொடையை நீங்கள் தாழ்மையாக கருதாமல் இருப்பதற்கு துணைபுரியும்.

❖ செல்வம் என்பது பொருட்கள் அதிகமாக வைத்திருப்பதல்ல. போதும் என்ற மனம் படைத்திருப்பதே செல்வமாகும்.

❖ பிற்காலத்தில் என் உம்மத்தினர் செல்வச் சீமான்களாக இருப்பார்கள். ஆனால், சுவர்க்கத்தையே மறந்து விடுவார்கள்.

❖ செல்வச் செழிப்போடு வாழும்போது நீ இறைவனை நினைத்தால், நீ துன்பம் அடையும் போது இறைவன் உன்னை நினைப்பான். - நபிகள் நாயகம்




# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## தெய்வீகம்- முகம் பார்க்கும் கண்ணாடி

முகம் பார்க்கும் கண்ணாடி எந்தப் பொருளைப் பிரதிபலிக்கிறதோ, அந்தப் பொருட்களை நாம் பார்க்கும்போது, கண்ணாடியைப் பார்க்க முடியாது. நாம் பொருட்களில் நம்மை இழந்து விடுகிறோம். இதைப் போன்று தெய்வம்தான் இவ்வுலகைப் பிரதிபலிக்கிறது என்று நாம் விழிப்புணர்வு அடையும் வரை- நாம் உலக விடயங்களில் சிக்கிக் கொள்கிறோம்.

பூனைக்குட்டி ஒன்று கண்ணாடியில் உள்ள தன்னுடைய பிரதிவிம்பத்துடன் விளையாடுகிறது. ஏனென்றால் விளையாடுவதற்கு மற்றொரு பூனை உள்ளது என அது நம்புகிறது. நாம் கூட வாழ்க்கை என்னும் விளையாட்டில் சிக்கிக் கொள்கிறோம். ஏனெனில் நம்முடன் விளையாட யாரோ உள்ளனர் என நாம் நம்புகிறோம். தெய்வீகம் கண்ணாடி என்ற விழிப்புணர்வு. அதுவே இந்தத் தவறான கருத்திலிருந்து நம்மை விடுவிக்கிறது. இருமை (இரண்டு) இல்லை.



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## பெண்கள் ருத்ராட்சம் அணியலாமா?

### ருத்ராட்ச மாலை அணியும் முறை

குடுமியில் அணிய வேண்டியது - 1,தலை உச்சியில் அணிய வேண்டியது - 13, தலையில் அணிய வேண்டியது -36, கழுத்தில் அணிய வேண்டியது - 32, புஜத்தில் (கை) அணிய வேண்டியது - 16, மணிக்கட்டில் அணிய வேண்டியது - 12, குடும்பஸ்தர்கள் அணிய வேண்டிய மாலைகளில் இருக்க வேண்டியவை - 25, ஜெப மாலையில் இருக்க வேண்டியது - 27, 53, 108

### ருத்ராட்சம் அணிவதன் பலன்கள்

ருத்திராட்சம் அணிவதால் அனைத்து நற்குணங்களும் அவர்களால் பிறர் அனைவரும் பயன்பெறும் வகையிலும் நன்மைகளும் அமையும்.கண், மூக்கு, தொண்டை, காது நோய்கள், மூளைக் கோளாறு, இருதயக் கோளாறு, நுரையீரல் கோளாறு, ஞாபக மறதி, நரம்புக் கோளாறு, ஆண் மலட்டுத்தன்மை, தைராய்டு சுரப்பிக்

தூக்கமின்மை, அஜீரணம், எலும்பு நோய், மூட்டு வலி, பக்கவாதம், அடிக்கடி கருச்சிதைவு ஏற்படுதல், வலிப்பு நோய், தீராத வயிற்று வலி, தோல் நோய், திக்குவாய், உடல் பலவீனம் மற்றும் பல வகையான நோய்களுக்கும் எந்த முகம் கொண்ட ருத்ராட்சம் என அறிந்து அதற்கு ஏற்ற ருத்ராட்சம் அணிந்தால் விரைவில் பயன்தரும்.

### பெண்களுக்கு என்ன பலன்

பெண்கள் ருத்ராட்சத்தை அணிந்தால் மாதவிடாய் மாதந்தோறும் சரியான முறையில் நடைபெறும், நல்ல சிந்தனைகள் மேலோங்கும், தீய சக்திகள் எதுவும் இவர்களிடம் நெருங்காது.

# குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடர்



## பொற்பதி சென்.பீற்றர் வெற்றி

பருத்தித்துறை உதைபந்தாட்டத்தின் லீக்கின் அனுமதியுடன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் "அமரர் மாமனிதர் குமார் பொன்னம்பலம்" ஞாபகார்த்தமாக பெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் கடந்த 03.11.2016 அன்று நடைபெற்ற போட்டியில் குடத்தனை பொற்பதி சென். பீற்றர் வி.கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை சிவானந்தா வி.கழக அணி மோதிக் கொண்டத்.

இரு அணிகளும்ஒன்றுக்கொன்று சமபலம் கொண்டஅணி என்பதால் சுறுசுறுப்பும் வேகமும் போட்டி ஆரம்பத்திலிருந்தே காணப்பட்டது.

இதனால் 2 ஆவது நிமிடத்தில் சென்.பீற்றர் அணியின் முன்கள 2ஆம் இலக்க -வீரர் தினேஸ் குமார் தனது அணிக்காக எதிர் அணியின் பலத்த தற்காப்பையும் தகர்த்து சாதுரியமாக ஒருகோலை அடித்து தனது அணியை முன்னிலைப் படுத்தினார்.

இருப்பினும் சீறியெழுந்த சிவானந்தா அணியின் வீரர் அடுத்த கணமே ஒருகோலை பெற்று கோல் கணக்ககை சமப்படுத்தினார்.

தொடர்ந்தும் இரு அணிகளும் பலத்த முன்னேற்ற முயற்சிகளை கைக்கொண்டிருந்தனர். இருப்பினும் கோல்கள் பெறும் வாய்புக்கள் வீணடிக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

இரு அணிகளின் கோல்கள் சம்நிலையுடன் 4:36 மணிக்கு முதல் பாதி ஆட்டம் முடிவுக்கு வந்தது.

4:41 மணிக்கு ஆரம்பித்த இரண்டாம் பாதி ஆட்டத்தில் சென். பீற்றர் வி.க.. அணி முன்னேறித் தாக்குதல் ஆட்டத்தை கையாண்டது.

இதனால் எதிர் அணியின் தண்டப்பரப்புக்குள் பந்து பலதடவை சீறிப் பாய்ந்து கொண்டிருந்தது. சிவானந்தா தற்காப்பு வீரர்கள் தடுக்கும் முயற்சிகள் மேற்கொண்டிருந்தனர்.

இருப்பினும் பீற்றர் வி.க. அணியின் 14 ஆம் இலக்க வீரர் சுதர்சன் 23 நிமிடத்தில் தனது அணிக்காக ஒருகோலைப் பெற்றுக் கொடுத்தார். தொடர்ந்து அந்த அணியின் 07ஆம் இலக்க வீரர் அசேக் 29 நிமிடத்தில் தனது அணிக்காக ஒருகோலைப் பெற்றுக்கொடுத்தார்.

சிவானந்தா அணி வேகமாக பலத்த முயற்சிகள் மேற்கொண்டு எப்படியாவது கோல் கணக்கை சமப்படுத்த வேண்டும் என்று முன்னேறித் தாக்குதல் ஆட்டத்தை மேற்கொண்டும் பலன் கிடைக்கமையால் தோல்வியைத் தழுவ நேர்ந்தது.

இறுதியாக போட்டி 5:03 மணிக்கு முடிவுக்கு வரும்போது குடத்தனை - பொற்பதி சென்.பீற்றர் வி.கஅணி3 கோல்களை போட்டு வெற்றி பெற்று தொடரில் தனது இடத்தை தக்க வைத்துக்கொள்ள சிவானந்தா அணி ஒரு கோலை மட்டும் பெற்றதனால் தோல்வியுற்று தொடரிலிருந்து வெளியேறியது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக பொற்பதி சென். பீற்றர் வி.க அணியின் 06ஆம் இலக்க தற்காப்பு வீரர் நிரோஜன் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கான பரிசிலை யாழ்வேந்தன்ரெயிலறிங்கடை உரிமையாளர் கணேசபாலா வழங்கி கௌரவித்தார். (க)

## கரவெட்டி

## பிரதேச செயலக விளையாட்டு விழா - 2017

2017- கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு விழாவை முன்னிட்டு அனைத்து விளையாட்டு கழக தலைவர், செயலாளருடனான கலந்துரையாடல் எதிர்வரும் 10.1.2017 ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே குறித்த கழகங்கள் கலந்துரையாடலுக்கு தவறாது சமுகமளித்து உரிய ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி கலந்துரையாடல் மெய்வன்மை, உதைபந்தாட்டம் என்பனவற்றிற்கான போட்டி அட்டவணையும் தயாரித்தல் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# FA கிண்ண உதைபந்தாட்டம் சென்.அன்ரனிஸ் வெற்றி



(யாழ்ப்பாணம்)

யாழ். லீக் அணிகளுக்கிடையிலான FA கிண்ண உதைபந்தாட்ட தொரில் 4.1.2017 அன்று அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடைபெற்ற இரண்டாம் சுற்று ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து ஞானமுருகன் அணி மோதியது.

மிகவும் பரபரப்பாக நடைபெற்ற போட்டி 1-1 என சம நிலையில் முடிவுற்றதால் சம நிலை தவிர்ப்பு உதையில் 4-3 பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. (கு)

துஷிகரன் அதிரடி

# மனோகரா வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுத்தொடர்

## இறுதிப் போட்டியில் வதிரி டயமன்ஸ்





மனோகரா வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்டத்தின் (4.1.2017) அன்று மனோகரா விளையாட்டு கழக மைதானத்தில் இடம்பெற்ற மின்னொளியிலான இரண்டாவது அரைஇறுதியாட்டத்தில் டயமன்ஸ் அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணி மோதிக் கொண்டது.

முதலாவது பாதியாட்டத்தில் துஷிகரன் ஒரு கோல் போட ஆட்டம் விறுவிறுப்பை எட்டியது. முதல் பாதியாட்டம் 1:0 என்ற அடிப்படையில் நிறைவுற்றது.

இரண்டாவது பாதியாட்டத்திலும் துஷிக்ரன் மேலும் மூன்று கோல்களை போட்டு அணியின் வெற்றியை உறுதி செய்தார். இறுதியாட்ட நேர முடிவில் 4:0 என்ற கோல் கணக்கினால் யங்கம்பன்ஸ் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது வதிரிடயமன்ஸ் அணி.போட்டியின் ஆட்ட நாயகனாக டயமன்ஸ் அணி வீரர் துஷிகரன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# தபேந்திரம் ஞாபகார்த்த கரப்பந்தாட்டம் புலோலி UKA வி.கழகம் சம்பியன்







பருத்தித்துறை குரும்பகட்டி உதய சூரியன் விளையாட்டுக் கழகம் நடத்திய தபேந்திரம் ஞாபகார்த்த கரப்பந்தாட்ட (ஓவர்கேம்) சுற்றுப் போட்டியில் வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது புலோலி UKA விளையாட்டுக்கழகம். அண்மையில் நடைபெற்று வந்த கரப்பந்தாட்ட போட்டியில் அரை இறுதி சுற்றுப்போட்டியில் UKA விளையாட்டுக் கழகம் சிவகுமரன் விளையாட்டுக் கழகத்தை வெற்றியீட்டி இறுதிப் போட்டிக்கு தெரிவாகியது.

மற்ற ஒரு அரையிறுதியில் UKB விளையாட்டுக் கழகம் காந்தியூர் இளம் பிறை விளையாட்டுக்கழகத்தைவீழ்த்தி இறுதிக்கு தகுதி பெற்றிருந்தது.

ஒரே கழகங்களைச் சேர்ந்த அணிகளே இறுதி சுற்றில் மோதியது. இதில் UKA விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இறுதிப் போட்டிக்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச. சுகிர்தன் வெற்றிக் கிண்ணத்தை வழங்கி வைத்தார். (கு)

## மன்னாரில் மா...

மூடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு நோயளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு தொடர்பாக அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த 2016 ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் 185 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்த நிலையில் இவ் வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 5 ஆம் திகதி வரை 25 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 12 பேர் தாழ்வுபாட்டு கிராமத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் பாடசாலை மாணவர்கள் 7 பேர் அடங்குகின்றனர்.தாழ்வுபாட்டு கிராமத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கின்ற 7 மாணவர்களே டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பாடசாலை மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி தாலைமையிலான குழுவினரினால் சோதனைகளுக்கு உற்படுத்தப்பட்ட போது குறித்த பாடசாலை வளாகத்தில் டெங்கு நோயின் பரவல் அதிகரிப்பதற்கான சூழல்களை கொண்ட இடம் கண்டுபிடிக்கப்பட்டது

இந்த நிலையில் மன்னார் வலயக் கல்விப பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அனைவரினதும் ஒத்துழைப்புடன் குறித்த பாடசாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.குறித்த பாடசாலையில் தற்போது டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும் சாவட்கட்டு,பெரியகடை உள்ளிட்ட சில கிராமங்களில் 13 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறிப்பாக மன்னாரில் உள்ள தனியார் கல்வி நிலையங்களினூடாக டெங்கு நுளம்பு பெருகுவதற்கான சந்தர்ப்பங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதன்படி மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலான குழுவினரினால் மன்னாரில் அடையாளம் காணப்பட்ட சில தனியார் கல்வி நிலையங்கள் சோதனைகளுக்கு உற்படுத்தப்பட்ட போது பாவனைக்கு உற்படுத்தப்படாத மலசலகூடம், நீர்த்தொட்டி போன்றவற்றில் டெங்கு நுளம்பின் உற்பத்தி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனவே டெங்கு நுளம்பின் தாக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் சில தினாங்களுக்கு தனியார் கல்வி நிலையங்களின் கற்றல் நடவடிக்கைகளை நிறுத்தி கல்வி நிலையங்களை மூடவும் அறிவுரை வழாங்கியுள்ளோம என அவர் தெரிவித்துள்ளார். (செ-4)

## 12 சந்தேக நப...

பாலியல் வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இவ்வாறு இவர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் பொலிஸாரும் குற்றப் புலனாய்வு பிரிவினரும் மேற்கொண்ட விசாரணைகளினூடாக 12 சந்தேகநபர்களை கைது செய்திருந்தனர். எனினும் இம் மாணவி படுகொலை செய்யப்பட்டு ஒன்றரை வருடங்கள் பூரணமாக கடந்துவிட்ட நிலையில் இன்னமும் குறித்த மாணவியின் வழக்கு விசாரணைகளானது நீதவான் நீதிமன்றிலேயே விசாரணையில் உள்ளது.

இவ்வாறான நிலையில் குறித்த 12 சந்தேகநபர்களில் முதல் பத்து பேரினது நீதவான் நீதிமன்ற விளக்கமறியல் காலமும் ஒருவருடத்தை கடந்துவிட்ட நிலையில் அதனை தாண்டியும் மேலும் ஒரு வருடம் நீதவான் நீதிமன்றில் வைத்து விசாரணை செய்வதற்கு யாழ்.மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது.

இந்நிலையிலேயே நேற்றைய தினம் குறித்த வழக்கானது ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது குறித்த வழக்கு தொடர்பான விசாரணை அறிக்கைகள் சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் அது தொடர்பான பரீசிலனைகள் இடம்பெற்று வருவதாக குற்றப் புலனாய்வு அதிகாரி மன்றில் தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து மேற்படி 12 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் இ.சபேசன் உத்தரவிட்டிருந்தார். (செ-4)

## 5.6 கிலோ கஞ்..

முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இந்துபுரம் கிராம அலுவலர் பிரிவில் 5.6 கிலோக்கிராம் கேரள கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை 2.40 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

மாங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மாங்குளம் பொலிஸ் நிலைய சிறுகுற்றப்பிரிவின் பொறுப்பதிகாரி பி.ஜி ரட்ணசிறி பொலிஸ கொஸ்தபலான எஸ் சசிந்தன் (6711) ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் இந்துபுரம் பகுதியில் வீடொன்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 5.6 கிலோக்கிராம் கேரள கஞ்சா அளவிடுவதற்காக வைத்திருந்த தராசு என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளதோடு வீட்டு உரிமையாளரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்

சம்பவம் தொடர்பில் விசாரணையை மேற்கொண்டுவரும் மாங்குளம் பொலிஸார் சந்தேகநபரை இன்று வவுனியா மேல் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக தெரிவித்துள்ளனர். (செ-281)

## நல்லாட்சி அர...

வத்துக்கும் பாதிப்பு ஏற்படக்கூடியவாறோ, அரசியலமைப்புக்கு புறம்பான முறையிலோ எந்தவொரு நாட்டுடனோ அல்லது நிறுவனத்துடனோ அரசாங்கம் எந்தவொரு உடன்படிக்கையும் செய்துகொள்ளவில்லை.

அவ்வாறு உடன்படிக்கை எதனையும் செய்வதாயின், குறித்த உடன்படிக்கையின் ஆரம்ப நடவடிக்கைகள் வெளிப்படையாக மேற்கொள்ளப்பட்ட பின்னர் அது சட்டமா அதிபர், அமைச்சரவை மற்றும் பாராளுமன்றத்துக்கும் சமர்ப்பிக்கப்படுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

தன்மீது பெரும் நம்பிக்கை வைத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டின் பிரதான சேவகனாக நாட்டு மக்கள் தன்னை தெரிவு செய்ததாக குறிப்பிட்ட ஜனாதிபதி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அந்த நம்பிக்கை பொய்யாவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்றும் தெரிவித்தார்.

2017 ஆண்டு புதிய வேலைத்திட்டங்கள் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்பும் எதிர்பார்ப்புடனும் அர்ப்பணிப்புடனும் அரசாங்கம் முன்னேறிச் செல்லும் போது பல விமர்சனங்களை முன்வைத்து, சிலர் அரசாங்கத்தைக் கவிழ்க்க முயற்சியெடுப்பதாகவும் 2020 ஆண்டில் மக்களின் விருப்பத்தினாலன்றி சட்டவிரோதமாகவோ, அரசியலமைப்புக்கு விரோதமாகவோ அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு எவருக்கும் இடமளிக்கப்படமாட்டாதென்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

எந்த கட்சியாவது ஆட்சி அதிகாரத்துக்கு வரும்போது, அந்த அரசாங்கம் சுதந்திரமாக தனது கடமைகளை மேற்கொள்வதற்கு இடமளிப்பது நாட்டை நேசிக்கும் அனைவரினதும் பொறுப்பாகும் என்பதுடன் அதிகார பேராசை மற்றும் குறுகிய அரசியல் தேவைகளுக்காக செயற்படுவதற்கு இன்னொரு தடவை வாய்ப்பில்லை எனவும் குறிப்பிட்டார்.

எனவே 2017 இந்த புதிய ஆண்டில் பொய் பிரசாரங்கள் செய்வதனை விடுத்து, நியாயமான விமர்சனங்களை முன்வைத்து நாட்டுக்கும் மக்களுக்குமாக நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக இணைந்துகொள்ளுமாறு அனைவரையும் கேட்பதாக ஜனாதிபதி தெரிவித்தார். (செ-11)


## வேலைக்கு ஆட்கள் தேவை

எமது நிறுவனத்தில் பாவனைக்கு உபயோகப்படாத காகிதாதிகளை தரம் பிரித்து கட்டுவதற்கு வேலை ஆட்கள் தேவை. விரும்புபவர்கள் 09,10,11.01.2017 ஆகிய நாட்களில் (காலை 9.00 மணி தொடக்கம் முற்பகல் 11.00 மணி வரைக்கும்) நேரில் தொடர்பு கொள்ளவும்.

*தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :*
குயின்சி விநியோகஸ்தர்கள்
இல.271, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.கொ.வே.தொலை.இல : 077 226 8486

(7389)



### இலங்கைப் பாடசாலைகள் சதுரங்கச் சங்கத்தின் யாழ் மாவட்டக் கிளை

## அங்குரார்ப்பணக் கூட்டம்

**காலம் : 16.01.2016 திங்கள் பி.ப 3.30 மணி**
**இடம் : யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.**

இக்கூட்டத்திற்கு யாழ்.மாவட்ட பாடசாலைகளின் சதுரங்கப் பொறுப்பாசிரியர்களையும் மற்றும் சதுரங்கத்தில் ஆர்வமுடைய பாடசாலை ஆசிரியர்களையும் அதிபர்களையும் விளையாட்டுத் துறை ஆசிரிய ஆலோசகர்களையும், உதவிக்கல்விப் பணிப்பாளர்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

அ.கனகசுந்தரம்
உபதலைவரும்
வட மாகாண அமைப்பாளரும்
இலங்கைப் பாடசாலைகள் சதுரங்கச் சங்கம்

(சி-7108)



## விலங்கியல் மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்படும் பாடசாலைகளுக்கிடையிலான போட்டி நிகழ்ச்சி - 2017

பாடசாலை மாணவர்களுக்கிடையில் மரநடுகையை ஊக்குவிப்பதற்கும் இயற்கையை பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலும் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட விலங்கியல் மாணவர் ஒன்றியத்தினால் வட மாகாண பாடசாலைகளுக்கிடையில் கனிஸ்ட, மத்திய மற்றும் சிரேஸ்ட பிரிவுகளுக்கிடையில் கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகளை நடத்தி சான்றிதழ்களை வழங்க தீர்மானித்துள்ளது.
*போட்டி நடைபெறும் இடங்கள், திகதிகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.*

**குறிப்பு:- இத்துடன் மாதிரி விண்ணப்பப்படிவம் இணைக்கப்பட்டுள்ளது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 16.01.2017 ஆம் திகதிக்கு முன்னதாக பின்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.**

**முகவரி : செயலாளர், விலங்கியல் மாணவர் ஒன்றியம்,**
**விலங்கியல் துறை, விஞ்ஞானபீடம்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

### மாதிரி விண்ணப்பபடிவம்

பாடசாலையின் பெயர் :- ..........................................

கட்டுறைப் போட்டி
கனிஸ்ட பிரிவு :- ..........................................
ஆங்கிலத்தில் முழுப்பெயர் :- ..........................................

மத்திய பிரிவு :- ..........................................
ஆங்கிலத்தில் முழுப்பெயர் :- ..........................................

சிரேஸ்ட பிரிவு :- ..........................................
ஆங்கிலத்தில் முழுப்பெயர் :- ..........................................

ஓவியப் போட்டி :- ..........................................

கனிஸ்ட பிரிவு :- ..........................................
ஆங்கிலத்தில் முழுப்பெயர் :- ..........................................

மத்திய பிரிவு :- ..........................................
ஆங்கிலத்தில் முழுப்பெயர் :- ..........................................

சிரேஸ்ட பிரிவு :- ..........................................
ஆங்கிலத்தில் முழுப்பெயர் :- ..........................................

..........................................
அதிபரின் கையொப்பம்
பதவி முத்திரை

(சி-7115)

## அனைத்து நாடுகளுக்குமான விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK-550*/=Kg

மற்றும் அனைத்து நாடுகளுககும் குறைந்த விலையில்

DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)

மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு: 0768226240

●யாழ்ப்பாணம் ●கிளிநொச்சி ●நெல்லியடி ●பருத்தித்துறை ●வல்வெட்டித்துறை

V2 TRAVELS (சி-6390)



## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

100% SATISFACTION GUARANTEED

070 330 5500
021 221 5656

உங்கள் உறவுகளுக்கு துரிதமாகவும் நம்பிக்கையாகவும் பொதிகள் மற்றும் கடிதங்களை உலகின் முன்னணி நிறுவனங்கள் ஊடாக அனுப்பிவைத்திட

அண்ணா அன் கோ

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்

எம்முடன் இணைந்து இந் நிறுவனங்களின் முகவர்களாக விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்


## இந்திய மீனவர்கள்...

பதில் நீதவான் இராமலிங்கம் சபேசன், நேற்று உத்தரவிட்டார்.

கடந்த வருடம் இறுதியில், 6 படகுகளுடன் வெவ்வேறு தினங்களில் கைதான 32 மீனவர்களின் விளக்கமறியலே இவ்வாறு மேலும் 14 நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்றைய தினம் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 10 பேரையும் எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து, மீன்பிடித்த குற்றச்சாட்டில் இந்திய

04ஆம் பக்கம் பார்க்க...


## BEACON TEC CITY

வெலிங்டன் சந்தி, யாழ் நகர்

A/L

2017, 2018, 2019 புதிய பிரிவு

இயந்திரவியல் பொறியிடல்
செ.ஜெகநாதன்
குடிசார் இயந்திரவியல்
சி.சிவஜன்
படவரைதல்
அ.அருண்குமார்
இலத்திரனியல், மின்னியல்
இ.றொபின்சன்
பௌதிகவியல்
கிருபாகரன்
இரசாயனவியல்
சு.நந்தா
உயிரியலும்,உயிர்முறையியலும்
D.A.ஜக்சன்
தகவல் தொழில்நுட்பம்
சி.கார்த்திக்

ஆரம்பம் : 07.01.2017 காலை 9 மணி (C-7059)



## BEACON

வெலிங்டன் சந்தி, யாழ் நகர்

A/L

2017, 2018, 2019 புதிய பிரிவு

பொருளியல் :- K.பிரதீபன்
தமிழ் :- ஜீவானந்தன்
இந்துநாகரீகம் :- நேசன்
அளவையியல் :- S.S.மனோகரன்
நாடகமும் அரங்இயலும் :- வினோதன்
தகவல் தொழில் நுட்பம் :- கார்த்திக்
ஊடக கற்கைநெறி :- கோணேஸ்
அரசியல் :- N.பிரதீபன்
வரலாறு :- தாஸ்

ஆரம்பம் : 07.01.2017 காலை 9 மணி (C-7059)



## BEACON வெலிங்டன்சந்தி யாழ்நகர்

A/L 2019

வர்த்தகப்பிரிவு

ஆரம்பம் : 07.01.2017 காலை 9 மணி

பொருளியல் :- K.பிரதீபன்
கணக்கீடு :- R.சுகிர்தன்
வணிகக்கல்வி :- K.M.தீசன்

(C-7059)



## BEACON - யாழ்நகர்

புதிய பாடத்திட்டத்துக்கமைவாக 2019 உயர்தர விஞ்ஞான பிரிவுகள்

ஆரம்பம் : 07.01.2017 காலை 9 மணி

இரசாயனவியல் வி.நந்தா
பௌதிகவியல் எ.கிருபாகரன் B.S.c
இணைந்த கணிதம் த.சுகந்தன் B.Sc
உயிரியல் D.A.ஜக்சன்

தொடர்புகளுக்கு : நிர்வாகம்
BEACON வெலிங்டன் சந்தி,யாழ்ப்பாணம் (C-7059)



## NEC

பருத்தித்துறை வீதி. ஆனைப்பந்தி. | இரு இடத்திலும் | மணிக்கூட்டு வீதி. யாழ்நகர்.

A/L 2019

கலை
வர்த்தகம்
தொழில்நுட்பம்

ஆரம்பம் 07-01-2017 சனி 8.00 மணி (C-7078)



## FALC FRENCH LANGUAGE CENTRE
FOR THE BEST FRENCH FOREVER

பிரெஞ்சு
மொழி வகுப்பு

No. 40, பலாலி வீதி, ஆரியகுளம்.
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் : 07.01.17 சனி 10 am.

பிரதான வீதி, நெல்லியடி
TP: 021 3202973
ஆரம்பம்: 09.01.17 திங்கள் 3.30pm.

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1 Classes.

Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

(C-7081)



## CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

அழையுங்கள் - 077 29 31 062

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

(C-7102)



# சேவைநலன் பாராட்டு



## உயர்திரு.சண்முகராசா பாஸ்கரன் அவர்கள்

BA (Economics Special), PG.Dip in Edu, MEd, SLPSI, SLEAS

பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி நிர்வாகம்)

தீவகக் கல்வி வலயம் வேலணை

அன்புசால் ஆசானாக ஆற்றல் மிகு அதிபராக
ஆளுமை கொண்டு விளங்கிய இனிய நல் இதயமே!
புகழ்மிகு பணியில் புனிதமுடன் திகழ்ந்து
தோற்றம் பெற்றீர் ஊர்காவற்றுறை கோட்டப் பணிப்பாளராய்
இலங்கை கல்வி நிர்வாக சேவை கனிவுடன் மலர்ந்தது.
வளமுடன் துலங்கினன் தீவக வலயத்தில்
மாணவர் கல்வி அபிவிருத்தி மாண்புடன் முகாமைத்துவம்
மகத்தான பணிதனில் பெருமதிப்பாக இயங்கி
சிறப்புடன் மிளிர்ந்தார் சீர்மிகு நிர்வாகப் பிரிவில்
நேரான கொள்கையில் சீராக நிர்வாகத்தை
பெரும் பேறாக ஆற்றிய பேராசானே!
அதிகாரிகள் முதல், அதிபர்கள், ஆசிரியர்கள்
அலுவலர்கள் வரை அமைதியால் அணுகிடும்
வரன் முறை கொண்ட நிறைகுடமே!
அழகொளிர் சேவையை எழிலுடன் ஆற்றி
அகவை அறுபதில் ஆனந்தமாகவே
இங்கிதமாய் இளைப்பாறும் இனியநல் இதயமே!
பூண்ட நின்பணி பூரிப்படைய
நீண்ட பெருவாழ்வு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- திரு.ஆ.குமரேசமூர்த்தி
கோட்டக் கல்விப் பணிப்பாளரும் கோட்ட அதிபர்களும்
காரைநகர்.

(C-7091)



## தொழில்நுட்பவியல்-2019

Bio-Tech
E-Tech

DMI
யாழ்.நகர்

●தொழில்நுட்ப ஆய்வுகூட வசதி
●Royal Examination Centerன் மாதாந்தப் பரீட்சை
●Multimedia ஊடான கற்பித்தல்

ஆரம்பம்:-07.01.2017 சனி
காலை 9.00AM

(சி-6821)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.